# பனி விழும் மலர் வனம்

''அசப்புல கமல் மாதிரி இருக்காண்டி. ஆனா தலைய பாத்தியா? உள்ளங்கை அகலத்துல சொட்டை.''

''டீன் ஏஜ்ல நல்லா இருந்திருப்பான்.''

''இப்ப இல்லேங்கறயா?''

''பாஸ்மார்க்தான்.''

''முப்பத்தைஞ்சா?''

''நாப்பது போட்டுக்கோயேன்.''

''ஷோல்டர், வயிறு எல்லாம் நல்லாதாண்டி இருக்கு. சியர்ஃபுல்லா இருக்கான். பளீர்னு பல்வரிசை.''

''சரி போ, உனக்காகக் கூட அஞ்சு மார்க். நாப்பத் தஞ்சு போட்டுக்கோ.''

''வேணாம். நாப்பதே போதும்.''

''ஏண்டி, நீதானே ஆஹா ஓஹோன்னே?''

''கல்யாணம் ஆயிடுத்தாமே. இவனுக்கு மார்க் கூடப் போட்டா என்னா? கொறைச்சா என்னா?''

''பிரம்மச்சாரின்னா மட்டும் கன்செஷன் கொடுக் கணுமோ?''

''கொஞ்சம் கிட்ட போய் பேசி, சிரிச்சு, டாவடிச்சுப் பார்க்கலாமா?''

''ச்ீய்... வர வர கெட்ட வார்த்தை பேசற...''

''டாவடிக்கறது ஒரு கெட்ட வார்த்தையா? கஷ்ட காலம். ஒரு ஆம்பளை காலேஜ் வாசல்ல நின்னு பாரு... நூத்துக்குத் தொண்ணூத்தொன்பது பேர் இந்த வார்த்தைய தினசரி நூறு தடவையாவது சொல்வான்.''

''சொல்லாதவன்?''

''உன்னை மாதிரி வெட்கப்பட்டுண்டு உள்ளுக்குள்ளேயே சொல்லிப்பான். ஏய்... புனிதா.... எஸ் வி. சேகர் வர்றது.''

''யாருடி?''

''ஐயோ, கஷ்ட காலம். காலர் பனியன் போட்டுண்டு வர்றது பாறேன்.''

''யாரைச் சொல்ற?''

''டெஸ்பாட்ச் சீனிவாசன். அமுல் டப்பால இவன் படம் ஒட்டினா ஓஹோன்னு விக்கும். இவனைக் கிள்ளினா ரத்தம் வருங்கறியா?''

''பின்ன...?''

''ஹூம், சாம்பாரா ஒழுகும். டீ டயத்துல ஆறு போண்டா திங்கறதுடி.''

''தின்னுட்டுப் போறான்.''

''எனக்குப் பொறாமையா இருக்கே. அரை டிபன் பாக்ஸ் தயிர் சாதம் சாப்ட்டாலே தூக்கம் தூக்கமா வர்றது. மத்தியானம் தயிரோடு முழுச் சாப்பாடு சாப்பிட்டப்புறம் ஆறு போண்டா. யம்மா. இவனுக்குப் பொண்டாட்டியா வர்றவ இதுக்கு சமைச்சுப் போட்டே செத்துப் போகப் போறா.'' கன்னத்தில் கைவைத்து—நாகலக்ஷ்மி பொய்யாய் கவலைப்பட்டாள்.

''நீயா அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போற? அனத்தாதே.''



''அப்படி ஒரு வேளை தெரியாத்தனமா பண்ணிட்டேன்னு வச்சுக்கோ... அரை வேளை சோறுதான் போடுவேன். கார்த்தால தண்டால் பஸ்கி எடுத்தாத்தான் காபின்னுடுவேன்.''

''ஏய், தண்டால்ன உடனே ஞாபகம் வருது. நேத்து சாவித்திரி தண்டால் பத்தி ஒரு கெட்ட ஜோக் சொல்லிச்சு. கிட்ட வாயேன் சொல்றேன். இன்னும், கிட்டவா.''

பால்பாய்ண்ட் பேனா கிளிப்பை அழுத்தி, இங்க் முனையை உள்ளே அனுப்பி வெறும் விளிம்பில் மேஜையில் படம் மாதிரி போட்டு புனிதா, நாகலஷ்மியின் காதில் ஜோக் சொன்னாள்.

பெண்கள் இருவரும் கன்னம் சிவந்து உதடுகளை விரல்களால் பொத்தி வரையப்படாத படத்தை உன்னிப்பாய்ப் பார்த்து சிரித்தார்கள், நாகலக்ஷ்மியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. விரல்களை மீறி சிரிப்பு பறந்து விட்டது முறத்தில் அரிசி கொட்டின மாதிரி. சிரிப்புக்கு ஆபீஸ் ஹால் கவனம் கலைந்து இவர்களைப் பார்த்தது. தூரத்தில் சாவித்திரி இவர்களைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

''ச்சீ....பண்டாரம் சனியனே. உங்கிட்ட ஒரு எழவும் சொல்லித் தொலைக்கக் கூடாது, சிரிச்சு மானத்தை வாங்கற'' புனிதா சட்டென்று திரும்பி லெட்ஜரை அவசரமாய்ப் புரட்டினாள்.

''நாகலக்ஷ்மி ஸ்டேட்மெண்ட்டை முடிம்மா முதல்ல. அப்புறம் சிரிக்கலாம்'' நாலு மேஜை தள்ளி இருந்த அக்கௌண்டெண்ட் குரல் கொடுத்தார்.

''ஐயோ... மாமா பார்த்துடுத்து'' நாகலக்ஷ்மி பற்களுக்கிடையே பேசினாள்.

''சார், கூப்டீங்களா?'' நாகலக்ஷ்மி திடுக்கிட்டவள் போல் எழுந்து நின்றாள். வெகுளியான முகத்தோடு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி அவசரமாய் மேஜை மேலிருந்த பேப்பர்களை வாரிக்கொண்டாள்.

''நோ, நோ, உங்களைக் கூப்பிடலைம்மா. வேலையை கவனிங்கோன்னேன்.''

''பாதி ஸ்டேட்மெண்ட் முடிச்சுட்டேன் சார். என்னவோ சிரிப்பு சத்தம் கேட்டது. 'டோட்டல்' விட்டுட்டேன்.''

''பரவாயில்லை, திருப்பியும் போடுங்கோ.''

மறுபடி காகிதங்களைப் பரப்பி, நாற்காலியை இழுத்து அமர்ந்து, ''தேங்க் யூ சார்'' என்று முறுவலித்தாள். கூட்ட ஆரம்பித்தாள்.

''நீ சினிமால சேந்துக்கலாம்டி. அக்கௌண்ட்ஸ் கிளார்க்கா மாட்டிக்கிட்டு சாகறே. எப்படி திருதிருன்னு முகத்தை மாத்திக்கிட்டு வெகுளியா நிக்கற. எனக்கு வரலடி இதெல்லாம்.'' புனிதா பொருமினாள்.

''இல்லேன்னா, இந்த ஆபீஸ்ல குப்பை கொட்ட முடியுமா? இவனுக்கு கீழதான் வேலை பார்க்க முடியுமா? மாமாவுக்கு என்மேல எப்பவும் ஒரு கண். எப்படா இவளைப் புடிச்சு மாட்டலாம்னே நினைச்சுண்டிருக்கு.''

''ஏன் அப்படி?''

''நாலு வருஷம் முன்ன வாலாட்டித்து. நறுக்குன்னு வெச்சேன். அன்னிலேர்ந்து கரம் கட்டிண்டிருக்கு. பார்க்க சாது மாதிரி இருக்கேன்னு நெனைக்காதேடி. மாமா பெரிய ஆள். ஒரு தரம் மந்த்லி ஸ்டேட்மெண்ட்டை அரை நாள்ல முடிச்சுக் கொடுத்தேன். முதுகுல ஜாக்கெட்டுக்கு கீழ 'வெரிகுட் வெரிகுட்'னு தட்டித்து... எனக்கு வந்ததே கோவம். எல்லா உங்க ஹெல்ப்புதான் சார், எனக்குக்கூட உங்களைப் பாராட்டணும்போல இருக்குன்னேன். பாராட்டேன்னு வழிஞ்சுது. வெடுக்குன்னு பின் கை தசையை ஒரு திருகு திருகிட்டு வந்துட்டேன். கண்ல ஜலமே கட்டித்து அதுக்கு. அப்புறம் வாலாட்டறதேயில்லை.''



''அடிப்பாவி. கூச்சல் போட்டிருந்தா என்ன ஆயிருக்கும்?''

''என்ன ஆயிடும்? கூட்டம் கூடியிருக்கும். என் தொடைல கை வைச்சுது—அதனால கன்னத்துல அறைஞ்சேன்னுடுவேன்.''

''அசிங்கமாயிருக்காதா?''

''எனக்கென்ன அசிங்கம்? அதுக்குத்தான் அசிங்கம். அம்பது வயசுல இப்படி ஓர் புத்தியான்னு டிஸிப்ளினரி ஆக்ஷன் வரைக்கும் போயிருக்கும்.''

''ஆனாலும் தைரியம்டி உனக்கு.''

''மாமா நம்மையே கவனிக்கறது. லெட்ஜர் போட்டுண்டே பேசு. உன்னை மாதிரி கோழையா இருந்தா தெனம் தெனம் பயந்து சாக வேண்டியதுதான். பையை தோள்ல மாட்டிண்டு ஆபீஸுக்குன்னு வந்துட்டோம். நல்லதோ கெட்டதோ, நம்மளேதான் சந்திச்சாகணும். இவன் காப்பாத்துவான், அவன் காப்பாத்துவான்னு நம்பிண்டிருக்கப்படாது.''

''நீ யாரை நம்பிண்டும் இல்லியா?''

''இல்லே.''

''யாரையும் நம்பறதில்லியா?''

''இல்லே.''

''என்னைக் கூடவா?''

''முட்டாள்.'' நாகலெக்ஷ்மி ஆதரவுடன் புனிதாவின் கையைத் தொட்டாள். ''பெட்வீன் எஃபிரண்ட் நம்பிக்

கையோ, அவநம்பிக்கையோ வரதில்லை. உன்னுடைய ப்ளஸ், மைனஸ் எல்லாமும் சேர்த்து உன்னை ஏத்துக்கிறேன். எனக்கேத்தபடி உன்னை வளைக்கவோ உனக் கேத்தபடி நான் மாறவோ முயற்சி பண்ணாம சாதாரணமா இருக்கேன். விட்டேத்தியா இருக்கேன். அப்படி இருக்கறதாண்டி ஃபிரண்ட்ஷிப். அதான் நட்பு. இனிமே இப்படி அபத்தமா கேள்வி கேக்காத.''

''ஸாரி நாகு.''

''ஸ்டுப்பிட். டோட்டல் சரியாவே வரமாட்டேங் கறது. டாலியாகலை.''

''ஏண்டி?''

''எல்லாம் அந்த தண்டால் ஜோக்கினால்தான். உன் பால்பாய்ண்ட் பேனாவே கண்முன்னால் நிக்கறது. எனக்கு மூடே அவுட்டாயிடுத்து போ.''

இந்த முறை புனிதா வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.

''என்னம்மா அங்க... மறுபடி...'' அக்கௌண் டெண்ட் குரல் உயர, நாகலஷ்மி பொத்தென்று பேனாவை மேஜை மீது போட்டாள்.

''புனிதா மறுபடி இப்படி சிரிச்சே— என்னால டோட்டல் போட முடியாது.''

''புனிதா—வாட்ஸ் த மேட்டர். இதென்ன ஆபீஸா— பள்ளிக்கூடமா?'' சுரீரென்று அக்கௌண்டெண்ட் கோபித்துக் கொண்டார்.

''சார்...நோ சார். சாரி, நான் வந்து...சாரி ஸார்'' புனிதா எழுந்து நின்று தடுமாறினாள்.

மறுபடி எதிர்க்கோடியில் சாவித்திரி கண்ணடித்தாள்.

ஆபீஸ் சற்று கலைந்து அமைதியானது. புனிதா லெட்ஜரில் புதைந்து கொள்ள, நாகலக்ஷ்மி கூட்டலைத் துவங்க, அரைமணியில் மந்த்லி ஸ்டேட்மெண்ட் வேலை



முடிந்து போயிற்று. வரவும் செலவும், இருப்புத் தொகையும் பைசா பிறழாமல் எதிர் எதிரே நின்றன.

''மனசு ஒப்பி உட்கார்ந்தா அரைமணி வேலைதான். உட்காரத்தான் முடியலை.'' தனக்குத்தானே பேசியபடி நாகு விரல்களை நொடித்து பின்னி கைகளை நீட்டினாள்.

''புனிதா, போஸ்டிங் முடிச்சிட்டியா, சாப்பிடப் போகலாமா?''

''பேசாத என்கூட.''

''கோவமாடா?''

''ச்சீ போ.''

''எதுக்குப்பா சுள்ளுங்கற?''

''லஞ்ச் ரூமுக்கு வா. கிள்ளி கிள்ளி ரத்தம் வரவழைக்கிறேன்.''

''செய்... செய்... உன் இஷ்டப்படி செய். பேசாத மட்டும் போகாதப்பா.''

''சனியனே, மாட்டிக் கொடுத்தேல்ல—உன்னை...''

''தமாஷ்தானடி.''

''என்ன தமாஷ்? அழுகையே வந்துடுச்சு எனக்கு.''

''எல்லாத்துக்கும் ஒரு அழுகை வரும் உனக்கு. எப்ப தான் உருப்படப்போறியோ?''

''அதெல்லாம் தெரியாது. லஞ்ச் ரூம்ல நுழைஞ்சவுடன் பழி தீர்த்துக்கப் போறேன்.''

# 2

"ஐயோ...ஐயோ...கிள்ளாதடி சனியனே...அம்மா... தாயே விட்டுருடி. தோள்பட்டைல நகம் பதிஞ்சா தப்பா நெனைச்சுக்கப் போறாங்கடி."

ஆறு ஏழு இடங்களில் நகம் பதியக் கிள்ளி விட்டு புனிதா அமைதியானாள்.

"பீடை... குரங்கு... வெறி பிடிச்சு ஆடறது." நாகலக்ஷ்மி முதுகைத் தடவிக் கொண்டு கத்தினாள்.

"வெறியெல்லாம் உனக்குத்தான். ஜோக் சொன்னா கேட்கறதோட நிறுத்திக்கணும். கெக்கெ கெக்கேன்னா."

"நீயும்தான் சிரிச்ச ரெண்டாம் தடவை."

"பால்பாய்ண்ட் பேனாவே கண்முன்ன நிக்குதுன்னா சிரிப்பு வராதா?"

"நீ கிள்ளின பிறகு பால்பாயிண்ட் பேனா குபு குபுன்னு வளர்ந்து தூணா நிக்கிறது."

"ஐயோ எழவே. சோறு திங்கறதுக்கு முன்ன என்னாடி இது?"

"சரி, சாப்ட்டுட்டு பேசலாமா?"

"என்ன குட்டிகளா, ஆபீஸ்ல கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்கீங்க? ஒரே சிரிப்பும், கும்மாளமுமா இருக்கே. செமை மூடா ரெண்டு பேருக்கும்." சாவித்திரி எதிரே உட்கார்ந்து கேரியரைத் திறந்தாள்.

"மாமி, மாமி...இன்னொரு ஜோக் சொல்லுங்க மாமி" நாகலக்ஷ்மி, சாவித்திரியிடம் குழைந்தாள்,



"மாமி கீமின்னே நாக்கை இழுத்து வெச்சி அறுத்துடுவேன். ஏண்டி என்னைப் பார்த்தா மாமி மாதிரியா இருக்கு?"

"ஹைய், நீ மட்டும் குட்டின்னு கூப்பிடலாமா?"

"அது ஒரு மாதிரி லவ்வுடி."

"உங்க வீட்டுக்காரர் குட்டின்னுதான் உங்களைக் கூப்பிடுவாரா மேடம்" புனிதா எதிரே உட்கார்ந்தாள்.

"சில சமயம் கூப்பிடும். நானும் கண்டுக்காத என்ன மச்சான்னுடுவேன்."

"ஆர் யூ இன் ஃபோர்ட்டிஸ் சாவித்திரி" நாகலக்ஷ்மி இடைமறித்தாள்.

"ஃபோர்ட்டி ஒன், ஏன் என்ன விஷயம்?"

"இந்த வயசுல இத்தனை கெட்ட ஜோக் எங்க படிக்கற?"

"ம்... படிக்கிறதுக்குப் பொழுது எங்க எனக்கு, பொங்கித் தின்னுட்டு ஆபீஸ் வரவே சரியா இருக்கு. எல்லாம் அந்த மனுஷன் சொல்ற ஜோக்தான்."

"தினம் சொல்வாரா?"

"எங்கயாவது ஆபீஸ்ல கேட்டுண்டு வரும். ராத்திரி தூங்கறதுக்கு முன்ன நாலு ஜோக்காவது அறுத்துட்டுத்தான் தூங்கும்."

"இந்த மாதிரி ஜோக் கேட்டுட்டு எப்படி தூங்க முடியும் சாவித்திரி?"

"நாப்பத்தோரு வயசுல வேற என்னடி பண்றது நாகு, ஜோக் சுகத்திலே தூங்கிட வேண்டியதுதான்."

"நோ செக்ஸ்?"

"அலுத்துப் போச்சு."

''முடியாத போது ஏற்படற வக்ரம்தான் கெட்ட ஜோக்கா?''

''கிட்டதட்ட அப்படித்தான். ரொமான்ஸ் இருக்கற வரைதான் கவிதை, கொஞ்சல், உருகல் எல்லாம். அப்புறம் க்ருயலிடிதான். க்ருயலிடியின் விளைவுதான் கெட்ட ஜோக். க்ருயலிடியும் ஒரு மாதிரி சுகம்.''

''அப்பட்டமா பேசறீங்க மேடம்.'' புனிதா ஆச்சரியப்பட்டாள்.

''உனக்கும் இது ஏற்படும். ஒரு ஸ்டேஜ்ல எல்லாருக்கும் இந்த புத்தி நிச்சயம் வரும்.''

''நாகலக்ஷ்மிக்குக் கெட்ட ஜோக்குன்னா உசிரு.''

''முத்திப் போய்ட்டாள்ன்னு அர்த்தம்.''

''எனக்கு லவ்வுல நம்பிக்கையில்லை சாவித்திரி.'' நாகு டிபன் பாக்ஸைத் திறந்தாள்.

''தட்ஸ் குட். லவ் ஒரு மயக்கம்தான். ஆனா உள்ளூற அதுவும் இருக்கும்.''

''புரியலையே மேடம்?''

''மனசு விசித்திரமானது புனிதா. எனக்கு லவ்வே இல்லேன்னு அர்த்தம் இல்லை. அது கொஞ்சாது. உருகாது. அமைதியா பூமியடி தண்ணீர் மாதிரி சத்தமில்லாத ஓடிக்கிட்டு இருக்கு. அந்த மனுஷனுக்கு ஒரு தலைவலி காச்சல்னா தாங்கவே தாங்காது எனக்கு....''

''உங்களுக்கு வந்தா அவரு எப்படி நெனைப்பார்?''

''ஆலா பறக்கும் தலைல தூக்கிண்டு அலையும். மூணு வருஷம் முன்ன அபார்ஷன் ஆச்சு எனக்கு. ஜாக்கிரதைக்கு இருக்கட்டும்னு ஆக்ஸிஜன் குடுத்தாங்க. இது என்னவோ, ஏதோன்னு சுவத்துல முட்டிண்டு ஒரேயடியா அழுதது. ஆக்ஸிஜனை புடுங்கிப் போட்டுட்டு, இட்ட வாங்கன்னு கூப்பிட்டு, எனக்கு



இருக்கிற வேதனை போறும். நீங்க வேற கலாட்டா பண்ண வேணாம். இரண்டு நாளைக்கு இந்தப் பக்கமே வராதீங்க. போங்கன்னு திட்டி அனுப்பிச்சேன். நிஜமாகவே ரெண்டு நாளும் வரலை.''

''ச்சீ, பாவம் அவரு. மேடம் நீங்க ரொம்ப மோசம்.''

''அப்படி ஒரு டோஸ் விட்ட உடனேதான் அடங்கித்து. தொந்தரவு பண்றதேயில்லை. ஏதாவது கெட்ட ஜோக் சொல்லிட்டு தூங்கிடும். நானும் சரி பேசித் தீர்த்துக்கட்டும்னு பொறுமையா கேட்டுக்குவேன்.''

''அவர் நல்ல மனுஷன் இல்ல நாகு?''

''எந்த ஆம்பளை கெட்டவன்? எல்லாம் நம்மகிட்ட இருக்கு புனிதா. ஜோக்கும் சொல்லாதன்னா அது என்னதான் செய்யும்?''

''உங்க வீட்டுக்காரர் உன்கிட்ட சொல்ற கெட்ட ஜோக்கெல்லாம் இங்க வந்து கக்கிட்டு எங்களை டோஸ் வாங்க விடற.'' நாகலக்ஷ்மி அலுத்துக் கொண்டாள்.

''என்ன ஆச்சு காலைல, ஒரே வெடிச்சிரிப்பு. தண்டால் ஜோக்கா?''

''ஐயோ போறும். அக்ஸிடெண்டை நினைச்சா இப்பவும் நடுங்குது.'' புனிதா நடுங்கினாள்.

''இன்னொரு ஜோக் சொல்லட்டா, குரங்கு ஜோக்?''

''ஐய்யோ....வேணாம்.''

''நீ சொல்லு சாவித்திரி.''

''ஒரு ஜூவுல ஒரு குரங்கு இருந்தது...''

''மேடம், ப்ளீஸ் வேணாம்.''

''இது செக்ஸ் ஜோக் இல்ல புனிதா. ஆனா ஒரு மாதிரி கெட்ட ஜோக். கேளேன்.''

''கஷ்ட... காலம்...''

''சும்மா இரு புனிதா. நீ சொல்லு சாவித்திரி.''

''ஒரு ஜூவுல ஒரு குரங்கு இருந்ததாம். அது யாரைப் பார்த்தாலும் ரெண்டு கையையும் தட்டி, வலது கை நடு விரலை நீட்டி காமிக்குமாம்.'' சாவித்திரி செய்து காட்டினாள்.

பெண்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''ஒரு நாள் கவர்னர் பெண்டாட்டி ஜூ பார்க்க வந்தாளாம். அவகிட்டேயும் குரங்கு கை தட்டி, வலது கை நடுவிரலை நீட்டித்தாம். கவர்னர் பெண்டாட்டிக்கு கன்னம் செவந்து போச்சாம். 'என்ன இது? யார் இதுக்கு சூப்பர்வைஸர்? எப்படி இந்த கெட்ட பழக்கம் குரங்குக்கு வந்தது? வி ஐ.பிஸ் எல்லாம் வர்ற எடத்துல இப்படி ஒரு குரங்கு இருந்தா அசிங்கம் மொதல்ல இதைத் துரத்துங்க வெளியில'ன்னு கத்தினாளாம்.''

''குட்டிலேர்ந்து இங்க இருக்கிற குரங்கு. துரத்தினாலும் போகாது. யாரோ வேடிக்கை பார்க்க வர்றவன் கத்து குடுத்துட்டான். நாங்க என்னம்மா செய்றது''ன்னு சூப்பர்வைஸர் அழுதானாம்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. குரங்கு இங்கு இருக்கக் கூடாது''ன்னு சொல்லிட்டு கவர்னர் பெண்டாட்டி போய்ட்டாளாம்.

''சூப்பர்வைஸருக்கு ரொம்ப கவலையா போச்சு. குரங்கைத் துரத்தவும் முடியாது. கொல்றதும் பாவம். என்ன செய்யறதுன்னு முழிக்கிறப்போ, ஒரு அட்டெண்டர் நான் ட்ரை பண்றேன்னு பர்மிஷன் வாங்கி இரண்டு கத்தியை எடுத்துக்கிட்டு குரங்கு கூண்டுக்குள்ள போய் கதவைச் சாத்திக்கிட்டான்.

''ஒரு கத்தியைக் குரங்குகிட்ட கொடுத்தான். இன்னொரு கத்தியைத் தன் கைல வெச்சிக்கிட்டான். விஷ் விஷ்னு சுத்தினான். குரங்கும் விஷ்விஷ்னு சுத்தித்து. கத்தியால தன் நெத்தில பரபரன்னு அறுத்துக்கிட்டான். குரங்கும் பரபரன்னு தன் நெத்திய அறுத்துண்டுது. மோவாய்க்கட்டைக்கிட்ட கத்தி வச்சி அறுத்தான். குரங்கும் தன் மோவாய்ல கத்தி வச்சி அறுத்துண்டுது. சட்டுன்னு அறுத்துக்கிட்டான். குரங்கு என்ன பண்ணித்து தெரியுமோ?''



''கூர்ப்பு மாத்தாம கழுத்தை அறுத்துகிட்டு செத்துப் போயிருக்கும்.''

''அதான் இல்ல. குரங்கு கத்தியைக் கீழ்ப் போட்டுட்டு ரெண்டு கையையும் தட்டி வலது கை நடுவிரலை நீட்டி ஹைய்னு' சொல்லித்தாம்.''

பெண்கள் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தார்கள். கண்ணில் ஜலம் தளும்ப நகைத்தார்கள்.

''யம்மா....எனக்கு சோறு வேணாம். இந்த ஜோக்கே போதும்.'' பாதி டிபன் பாக்ஸ் சாதத்தை எடுத்து ஓடிப் போய் ஜன்னல் வழியே புனிதா கொட்டினாள். கையலம்பினாள். பின் பக்கம் போனாள்.

''என்னடி இவ? இந்த ஜோக்குக்கே எழுந்துட்டா?''

''அவ கொஞ்சம் ஸென்ஸிட்டிவ் டைப்டி சாவித்திரி. அவளுக்கு எதுவுமே தாங்காது. நாலு வருஷத்துல இப்பத்தானே வாய்விட்டு சிரிக்கறா. மனசு விட்டுப் பேசறா.''

''ஏண்டீ அப்படி?''

''அவ குடும்பச் சூழ்நிலை அப்படி. முதல் முதலா படிச்சு வேலைக்குப் போற பொண்ணு இவதான், இவங்க குடும்பத்திலேயே. வீட்ல கெடுபிடி, ஜாஸ்தி. தொட்டதுக்கெல்லாம் சந்தேகம். படிச்சவங்க குறைச்சலா உள்ள சூழல். ஆபீஸ்ங்கறது கெட்டுப் போறதுக்கு வாய்ப்பான இடம்னு அவங்களுக்கு ஒரு பயம்.

''பாவம் பொண்ணு.''

''சரியா புடவை கட்டிக்கறதுக்கே இப்பத்தான் கத்துக்கிட்டா. தஸ்ஸுபுஸுன்னு வரும். கணுக்காலுக்கு மேல பெட்டிக்கோட் நிக்கும். நாலு வார்த்தை சேர்ந்தாப்பல பேச இன்னிக்கும் பயம்தான்.''

''நீ எப்படி ஃபிரண்டானே?''

''பக்கத்து சீட். பேசியே ஆகணும். கொஞ்சம் கொஞ்சமா பேசறப்போ விஷயம் தெரிஞ்சது. 'நான் இருக்கேன், கவலைப்படாதே'ன்னு கொஞ்சம் கொஞ்சமா தேத்திக்கிட்டு வரேன். யூ நோ, சானிடரி நாப்கின்னே நான் சொல்லிக் கொடுத்துதான் தெரியும்.''

''அட கஷ்ட காலமே... இந்த காலத்துல இப்படி ஒரு பொண்ணா?''

''அவ சூழ்நிலை அப்படி சாவித்திரி. ஆனா, வேலைல படுகெட்டிக்காரி. மேத்தமாடிக்ஸ்ல புலி. கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்திருக்கா. பி.காம் ஃபர்ஸ்ட் க்ளாஸ். நானோ, நீயோ க்ளாஸ் வாங்கினது அதிசயமே இல்லை. அந்த பேக்ரவுண்ட்ல படிச்சு வெளியே வந்திருக்கிறா பாரு. ரொம்ப அதிசயம். அதனாலயே எனக்குப் புடிச்சுப் போச்சு. ரொம்ப நல்லவ. கெடுதல் பண்ணத் தெரியாது. கேலி பண்ணினா பதில் கேலி பண்ணத் தெரியாத அழும்.''

''நீ பிஞ்சிலேயே பழுத்தவ. உனக்கு இப்படி ஒரு ஸ்நேகிதமா?''

''வேண்டியிருக்கு சாவித்திரி. எல்லார்கிட்டயும் கன்னிங்கா, கால்குலேடிவ்வா பழகிப் பழகி போரடிக்கறது. இப்படி ஒரு நல்ல ஸ்நேகம் தேவைப்படறது.''

''ஐ விஷ் யூ போத் பெஸ்ட் ஆஃப் லக்.''

''தாங்க்யூ.''



''யேய் புனிதா, இங்க வாயேன்,'' சாவித்திரி உள்ளே இருந்தவளை அழைத்தாள். ''இறால் சமைக்கத் தெரியுமா?''

''ஐயய்யோ. தெரியாது மேடம். நான் சாப்பிடற தில்லே.''

''என்னடி இது? உங்க வீட்ல சமைப்பாங்கள்ள...''

''ம்... செய்வாங்க. அம்மாதான் அதெல்லாம் செய்வாங்க. நான் அந்தப் பக்கமே போக மாட்டேன்.''

''ஏண்டி நான்வேஜ் எதுவுமே சாப்புடற தில்லையா?''

''ம்ஹூம்.''

''ஏண்டி நாகு, இதையும் மாத்திட்டியா?''

''இது வரும்போதே பருப்பு சாம்பார்தான். மீன் எடுத்துண்டு வாடி, முள்ளு, தலையெல்லாம் வேடிக்கை பார்க்கலாம்னு சொன்னேன். கருமம் கருமம்னு தலைல அடிச்சுக்கறா.''

''உங்க ரெண்டு பேர்ல எவ பாப்பாத்தின்னே தெரியலை எனக்கு?'' சாவித்திரி அதிசயப்பட்டாள்.

''இப்ப எல்லாரும் பாப்பாத்திங்கதான்.''

''கரெட். ஜாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி சொல்லல் மிகப் பாபம். நான் எழுந்துக்கறேன் தாயே. தாங்க்யூ ஃபார் யுவர் கம்பெனி.''

''இத மறந்துட்டேனே, புனிதா பொயட்ரியெல்லாம் எழுதுவா, நீ படிக்கணும் சாவித்திரி. ஏய்... அந்த நோட் புக்க எடு.''

''லஞ்ச் டயத்த வேஸ்ட் பண்ணாத, ஒரு தூக்கம் போடப் போறேன். உன் கவிதையை ஆபீஸ் டயத்துல குடுத்தனுப்பு.''

சாவித்திரி பெஞ்சில் கால் மடக்கித் தூங்க, தோழிகள் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். ஒருவர் உடுத்தியிருந்த புடவையை இன்னொருவர் நீவி விட்டுக் கொண்டார்கள். ஜாக்கெட் இறுக்கம் சரியாய் இருக்கிறதா என்று சோதித்துக் கொண்டார்கள். ஈவ்ஸ் வீக்லி திறந்து உயர்தர பிரா பெயர்களைக் குறித்து கொண்டார்கள். வாரப் பத்திரிகைகளைப் பிரித்து கிசுகிசு படித்து ஆராய்ந்தார்கள். அம்பிகா, ராதா இருவரில் யார் அழகு என்ற விவாதித்தார்கள். பத்மினி, வைஜயந்திமாலா மாதிரி இனி எவரும் வரப்போவதில்லை என்று தீர்மானித்தார்கள். வரவர தொடர்கதையே படிக்க முடியறதில்லை என அலுத்துக் கொண்டார்கள். வரும் சனிக்கிழமை மாலை ஒரு இலக்கியக் கூட்டம் போகலாமா எனக் கேட்டுக் கொண்டார்கள். அயர்ந்து தூங்குகிற சாவித்திரியை எழுப்பி விட்டு சீட்டுக்குப் போனார்கள்.

பகல் நேரத்து வெம்மையில், சாப்பிட்ட களைப்பில் மின்விசிறி இதத்தில், மௌனமாய், நிதானமாய் வேலை செய்தார்கள்.

## 3

ஆபீஸ் விடுகிற நேரத்துக்கு முன்னால் டாய்லெட்டுக்குப் போய் முகம் கழுவி, பௌடர் பேப்பரால் துடைத்துக் கொண்டார்கள். பசையுள்ள பொட்டை நெற்றியில் ஒட்ட வைத்துக் கொண்டார்கள்.

'வீட்டுக்குப் போறதுக்குப் போரடிக்கிறது. பேசாம என் வீட்டுக்கிட்ட மாத்திண்டு வந்துடேன் புனிதா. ராத்திரி முழுக்க வாசப்படில உக்காந்து பேசிண்டிருக்கலாம்.''



''ட்ரிப்ளிகேன்ல வாடகை கொடுத்து கட்டுப்படியாகுமா எங்களுக்கு? அரும்பாக்கம்தான் சரி. இருநூறு ரூபாய்க்குத் தனி வீடு. ஓட்டு வீடா இருந்தாலும் இன்னொருத்தர் தொந்தரவு இல்லாத வீடு கிடைக்குமா?''

''சரி, வீட்டுக்குப் போய் என்ன செய்வ...?''

''டிபன் பாக்ஸை விளக்கிக் கழுவி வச்சுட்டு முகம் கழுவுவேன். விளக்கேத்துவேன். ரேடியோவை மடில வச்சுக்கிட்டு பாட்டு கேட்பேன். எட்டு மணிக்கு சாப்பாடு. ஒன்பது மணிக்குத் தூக்கம். காலைல அஞ்சு மணிக்கு எழுந்துருச்சிடுவேன் — நீ...?''

''சோத்துக்கடை முடியவே பத்தாயிடும். அண்ணா எட்டு மணிக்குத்தான் வருவான். இரண்டு தம்பியும் படிச்சு முடிச்சுட்டு ஒன்பது மணிக்குத்தான் மாடியை விட்டு இறங்குவானுங்க. ஒன்பது மணிக்கு எல்லாரும் சாப்பிட உட்காந்தா — அரட்டையும், சிரிப்புமா கையலம்ப பத்தாயிடும். சமையலுள் அலம்பிவிடும்போது பத்தரை. சில நாள் பதினொன்னு கூட ஆயிடும்.''

''நீதான் அதெல்லாம் செய்வியா?''

''தோணித்துன்னா செய்வேன்.''

''திட்ட மாட்டாங்களா?''

''நான் ஒரே பொண்ணு. எங்கம்மா சில சமயம் கத்துவா. விடு, நான் அலம்பறேன், அவளை தொந்தரவு பண்ணாதன்னு அண்ணா என்னை நகர்த்திடுவான்.''

''எனக்கு அப்படி ஒரு அண்ணன் இருக்கக் கூடாதா?''

''ச்சீ, ரொம்பப் பாராட்டாத. அது கொஞ்சம் முசுடு. ஹெரால்ட் ராபின்ஸ் படிச்சா பேயா கத்துவான். சினிமா பாட்டு கேட்டா மூஞ்சி சுளிப்பான். வாசல்ல நின்னா உள்ள போன்னு விரட்டுவான்.''

''நல்லதுக்குத்தான்...''

''புல் ஷிட். பொம்மனாட்டி கற்பை ஒரு நாளும் ஆம்பளையால காப்பாத்த முடியாதுன்னு அவனுக்குத் தெரியல. என் கற்பு என் ரெஸ்பான்ஸிபிலிடினு அவனுக்குப் புரியல.''

''உன்கிட்ட பிரியமாத்தான நடந்துக்கறாரு உங்க அண்ணா.''

''ஆட்டுக்குப் புல்லு வாங்கிப் போடற பிரியம்.''

''அதிகமா அலட்டிக்கற நாகலக்ஷ்மி.''

''நோ. இது ஒரு வேதனைன்னே நிறைய பேருக்குத் தெரியலை. என்னைத் தன்னோட கஸ்டடில வளர்த்து இன்னொருத்தர் கிட்ட கை பிடிச்சு அவர் கஸ்டடில கொடுக்கிற வரைக்கும் அவனுக்கு நிம்மதியில்லையாம். நான் என்ன ஆடா, மாடா கஸ்டடில வச்சுக்க...?''

''அவர் பேச்சு நார்மலாதான் எனக்குப் படுது நாகு.''

''நோ. டோட்டலி அப்நார்மல். முழுக்க அப்நார்மல். எனக்கு சீக்கிரம் வரன் தகையணும்னும் ஆஞ்சநேயருக்கு வேண்டிண்டு தினம் பூஜை பண்ணி, பொட்டு வெச்சு, வெறும் தரைல படுத்துண்டு வெள்ளிக்கிழமை முழுப் பட்டினி கிடந்து—எனக்கு ரொம்ப வேதனையா இருக்கும் புனிதா. பூஜைலேர்ந்து அவனைத் தரதரன்னு இழுத்துண்டு வரணும் போல இருக்கும். எனக்காக இன்னொருத்தர் வருத்திக்கறது எனக்குப் பிடிக்கலை புனிதா. உலகம் புரியாதவனா இருக்கானேன்னு தோணும்.''

''வாட் டூ யூ மீன்? ஒரு அண்ணா இவ்வளவு பொறுப்பா நடந்துக்கறது தப்பா? தங்கைக்குக் கல்யாணம்னு பூஜை பண்றது பாவமா? இவரை விட நல்லவன்...''



''ஸ்டாப் இட்.''

''ஏன் நிறுத்தணும்? உன் கல்யாணம், உங்க அண்ணா ரெஸ்பான்ஸிபிலிடி இல்லையா?''

''மக்கு— மக்கு— சனியனே. படிச்சவளா நீ? உன் பி.காம் ஃபர்ஸ்ட் கிளாஸுக்கு அர்த்தம் ஏதாவது உண்டா? நீ எல்லாம் படிச்சு என்ன பிரயோசனம்? யோசிக்கத் தெரியாத முட்டாள் பெண்கள். இடியட்ஸ், அப்நார்மல் சென்டிமெண்டல் இடியட்ஸ்.''

''எதுக்கடி கத்தறே? எனக்கு இப்படி ஒரு அண்ணா இருந்தா—''

''ஆமா...உங்களுக்கு அண்ணா. அப்பா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி சகலரும் இருந்தா சௌகர்யமா இருக்கும். அண்ணா வரன் தேடுவான். அப்பா கல்யாணம் பண்ணுவார். சித்தப்பா பந்தி பரிமாறுவார்னு கனாக் காணலாம். தங்கு தடையில்லாம யாராவது நூல் பிடிச்சா மாதிரி டிராக் போட்டுக் கொடுத்தா கடைசி வரைக்கும் ஓடுவேள். ஆனா புனிதவல்லி—வாழ்க்கை டிராக் போட்ட மாதிரி இல்லை. அது ஒரு காடு. திசை தெரியாத—பாதை இல்லாத காடு. எதுவேணா, எப்ப வேணா, யாருக்கு வேணும்னாலும் நடக்கலாம். மரம் முறிஞ்சு விழலாம். புலி பாஞ்சு அறையலாம். எதுக்கும் தயாரா இருக்கத் தெரியாத வரை பெண்கள் கஸ்டடில இருக்கிற சாமான்கள்தான். கால் நடைகள்தான். அப்புறம் ஆம்பிளை டாமினேஷன்னு வெட்கமில்லாம குரல் மட்டும் கொடுக்கறதுல என்ன பிரயோசனம்?''

''நீ என்ன சொல்றன்னு புரியலை.''

''புரிஞ்சுக்க இஷ்டமில்லைன்னு சொல்லு, என் கல்யாணம் என் பிராப்ளம் புனிதா. எனக்கு நான்தான் சுமை. எங்கண்ணாவுக்கு நான் சுமையா இருக்க இஷ்ட

மில்லை. எங்க அண்ணாவை நான் சுமக்கத் தயாராயில்லை.''

''அவர் என்ன பண்ணணும்கிற?''

''அவன் சௌகர்யத்தை அவன் பார்த்துக்கட்டும். முடிஞ்சா என் கல்யாணத்துக்கு உதவி பண்ணிட்டும். என் கல்யாணத்துக்கு நானே முடிச்சுக்க உதவி பண்ணட்டும். எனக்காகப் பட்டினியோ, படுக்கையில்லாத தூக்கமோ குரூரமாப் படறது. ஈகோ ப்ராப்ளம் மாதிரி தோன்றது. ஆஹா பிள்ளை எத்தனை கரிசனமா தங்கை கல்யாணத்துக்காகப் பூஜை பண்றதுன்னு அம்மா, அப்பா புகழணும். எங்க அண்ணா பாத்துப் பண்ணி வச்சான்னு நான் வாய் நிறைய பேசணும். தலைல பூவா கொட்டணும். தேவர்கள் வந்து வாழ்த்து சொல்லி உனக்கு வைகுந்தப் பதவி அளித்தோம் என்று திருவாய் மலர்ந்தருளணும்'னு ஈகோ ப்ராப்ளம். தனக்குப் புகழ் தேடிக்க, தான் கர்வப்பட, தங்கை கல்யாணம் ஒரு சாக்கு.''

''நீ பொம்பளையே இல்லடி.''

''யெஸ். அதனாலதான் என்னால லவ் பண்ண முடியலை. கவிதை எழுத முடியலை. சினிமா பார்த்துட்டு விக்கி விக்கி அழ முடியலை. தொடர்கதை படிச்சுட்டு அனத்த முடியலை.''

''கெட்ட ஜோக் மட்டும் காது நிறைய கேப்பியாக்கும்?''

''அது அடிப்படை உணர்ச்சி புனிதா. சோறு மட்டும் திம்பியாக்கும்னு சொல்ற மாதிரி இருக்கு நீ பேசறது. சென்டிமெண்ட்ஸ் இல்லேன்னு சொன்னா சொரணையே இல்லேன்னு அர்த்தமாயிடுமா? எனக்கு, பசி, தாகம், காமம், களைப்பு எல்லாம் உண்டு.''

''குழப்பறடி...வெளிப்படையா சொல்லணும்னா....''



''பைத்தியம் மாதிரி படறது இல்லையா? சொல்லு பரவாயில்லை. உன்னை மாதிரி கவிதையும், கனவுமா இருக்க என்னால் முடியாது.''

''கவிதையே கேலியாயிடுச்சா உனக்கு?''

''யெஸ். அது உணர்ச்சிக் கொதிப்பு. புயலா வீசும். வெந்நீரா கொப்பளிக்கும். ஜலதாரையா திசை தெரியாது ஓடும்.''

''நீ எப்படி இருக்கே?''

''கிணத்துல போட்ட கல் மாதிரி இருக்கேன். மெல்லிசா அலை மட்டும் மோதறது. ஆர்ப்பாட்டம் பண்றதில்லை.''

''ஸ்டில் ஐயாம் ப்ளாங்க் நாகு.''

''பரவாயில்லை. இப்ப என்ன நடந்துடுத்து? வெறுமன புத்தி பரிமாற்றம்தான்.''

''இப்படி இருக்கிற என்னை எப்படி சிநேகிதியா ஏத்துக்கிட்டு உசிராப் பழகற? மனசார நேசிக்கற?''

''என் அண்ணாவையும் நேசிக்கிறேன். எங்க அப்பாவை, அம்மாவை, தம்பியை, உன்னை, சாவித்திரியை சகலரையும் நேசிக்கிறேன். எம்மாதிரி இருக்கிறவாளைத்தான் லவ் பண்ணணும்னு கட்டாயமா என்ன?''

''நேரமாயிடுச்சு நாகு.''

''பேசிண்டே திருவல்லிக்கேணிவரை வந்துட்டோம். பஸ் ஏறிப் போறயா?''

''நீ....''

''இப்படி கடைத் தெருவைச் சுத்திட்டு வீட்டுக்குப் போயிடுவேன்.''

''தனியாவா?''

''ஏன், என்ன பயம்?''

''தனியா, மெதுவா, பைய தோள்ல மாட்டிண்டு ஒரு வயசுப் பொண்ணு போனா, எவனாவது வித்தியாசமா பார்க்க மாட்டான்—?''

''ஏதோ கிராக்கி போறதுன்னு நினைச்சுப்பான். நினைச்சுக்கட்டுமே.''

''ச்சீய்.''

''நான் என்னடி பண்ணட்டும். தனியா போற பொண்ணு தேவடியான்னு அவன் நினைச்சா, அவன் பார்வைல கோளாறு. நான் தேவடியா இல்லை. மாதர்குல மாணிக்கம்னு அவன் கிட்ட ப்ரூப் பண்ணணுமா என்ன.''

''ராத்திரி எனக்குத் தூக்கமே வராது போ.''

''ஏன். தண்டால் ஜோக்கா?''

''அது செத்தே போச்சு. உன் பேச்சுதான் மண்டையைக் குடையறது.''

''நாளைக்கு ஏதாவது கவிதை எழுதிண்டு வா.''

''கேலியா...?''

''ஸீரியஸா சொல்றேன்.''

''கவிதை மண்ணாங்கட்டின்னு சொன்னே.''

''உனக்கு என் பேச்சு என்ன புரிஞ்சுதுன்னு தெரிஞ்சிக்கத்தான் கேக்கறேன். எழுதிண்டு வா.''

## 4

புனிதவல்லிக்கு, அன்றிரவு தூக்கம் வர வெகு நேரமாயிற்று.



''ஏம்மா லேட்டு?'' என்று திண்ணையிலேயே கேட்ட அப்பாவுக்கு ''ஏதோ ஊர்வலம் போச்சுப்பா ஒரு மணி நேரம் மவுண்ட் ரோட்ல பஸ்ஸை நிறுத்திட்டான்'' என்று பொய் சொன்னாள்.

''காலைலயே ஒரு வார்த்தை ஊர்வலம் இருக்குது இன்னிக்குன்னு சொல்லிட்டுப் போயிருக்கக் கூடாது?'' அம்மா உள்ளேயிருந்தபடியே பேசினாள். ''என்னவோ ஏதோன்னு வச்ச பொருளு, எடுத்த பொருளு தெரியாதல்ல வேலை செய்ய வேண்டியிருக்கு.''

''உன்னையும் என்னையும் கேட்டுக்கிட்டா ஊர்வலம் நடக்குது? வெளியேன்னு போனா முன்ன பின்னதான் ஆவும். இதோ கிளப்பும் இதோ கிளப்பும்னு பஸ்ஸிலேயே உக்காந்து முதுகே விட்டுப் போச்சு.''

''பரபரன்னு நடக்கறதுதானே... அஞ்சு மணிக்கு கிளப்பியிருந்தா ஆறு மணிக்கெல்லாம அரும்பாக்கம் தொட்டிருக்கலாமே.''

''நடந்துடலாம். நாளைக்கு யார் ஆபீஸ் போறது எனக்கு பதிலா நீ போவியா?''

''யாரும் வூட்டுப் பக்கத்திலேர்ந்து போவாத இடமா போய்ட்டு வரியேன்னுதானடி கவலைப்படுறோம். எதிர் வூடு, பக்கத்து வூடுன்னு போயிருந்தா திரும்பற நேரம் பத்தி கேட்டுக்கிட்டு இருப்பமா?''

''உங்களுக்குப் பொண்ணு வேலைக்குப் போவணும், வேலை பாக்கற இடம் எதிர் வூடாவும் இருக்கணும்.''

''த்த... என்ன அங்க புலம்பற. களைச்சு வர்ற பொண்ணுக்கு காபித் தண்ணி கொடுக்கறத வுட்டுட்டு.''

''இப்ப காபி குடிச்சுட்டு எப்ப சோறு தின்றது? ஏண்டி, காப்பித் தண்ணி வேணுமா? ஒரேயடியா சாப்பாட்டுக்கு உக்கார்ந்திர்றியா?''

''மொதல்ல காபி குடு. தலையைப் பொளக்குது வலி.''

''சோறு ஒட்டாதப் பூடும்.''

''நீ நகரு. நானே போட்டுக்கறேன்.''

காபித் தம்ளரை கையில் ஏந்தி, புனிதவல்லி கொல்லைப்புறம் போனாள். கிணத்துக் கல்லில் ஒரு காலைக் குத்திட்டு உட்கார்ந்து கொண்டாள். பகலின் வெம்மை குறைந்து இரவும், குளிர்காற்றும் மேலே கவிழ்ந்து கொண்டன. மேலே சுடர்கள் சிரித்தன. மேகங்கள் மெல்ல அலைக்கழிந்தன. பையைத் தோளில் மாட்டிக் கொண்டு திருவல்லிக்கேணித் தெருவில் மெல்ல நடக்கும் நாகலக்ஷ்மி மாதிரி இலக்கின்றி சோம்பலாய் நகர்ந்தன.

''ஏண்டி இத்தனை நேரம்?'' என்று நாகலக்ஷ்மியை யாரும் கேட்டிருக்க மாட்டார்கள்.

''க்யோன் பேட்டி. கித்னா லேட்?'' என்று நாகுவின் அப்பா செல்லமாய் கேட்டிருக்கலாம். நாகுவின் அப்பா ரொம்ப சந்தோஷமாய் இருந்தால் ஹிந்தியில்தான் பேசுவாராம். சரளமாய் ஹிந்தி பேச வேண்டுமென்று நாகு அப்பாவுக்கு ரொம்ப ஆசையாம்.

''ஏன் லேட்?'' என்கிற கேள்வி வந்தால், ''லேட்'' என்று நாகு பதில் சொல்வாளாம். பிறகு யாருமே, எதுவுமே கேட்க மாட்டார்களாம். 'நாளைக்கும் இப்படி லேட் ஆகுமா' என்று மெதுவாய் குரல் தாழ்த்தி அம்மா சாதம் போடும்போது கேட்பாளாம். 'ஏன் கேக்கற' என்று நாகு விழி உயர்த்தினால், 'ஒண்ணுமில்லை. சும்மாதான்' என்று அம்மா பதில் சொல்வாளாம்.

சாப்பிடுகிற போதுதான் நிறைய பேச்சு நடக்குமாம். விவாதங்கள நிகழுமாம்.



''தங்கை கல்யாணத்துக்கு தாடி வளர்க்காதடா. விடுதலைப்புலி மாதிரி இருக்கு' என்று அப்பா கமெண்ட் அடிக்க...

'விடுதலைப் புலின்னா என்ன மட்டப்? இதுல என்ன கேலி?' அண்ணா எதிர்ப்பானாம்.

'புரட்சிக்கும் தாடிக்கும் மறைமுக சம்பந்தம் உண்டு. தாடி ஒரு சிம்பல். உனக்கும் எந்தவித புரட்சிக்கும் சம்பந்தமே இல்லையே; எதுக்கு தாடிங்கறார் அப்பா' நாகு சீண்டுவாளாம்.

'நான்சென்ஸ். வாட் டு யூ நோ அபௌட் சிலோன்? உனக்கு மட்டும் புரட்சி பத்தி என்ன தெரியும்? உன் புரட்சி புடவை கலரோட சரி, காண்ட்ராஸ்ட் பார்ட்ரோட சரி, நீ பேசாத' அண்ணன் சீறுவானாம்.

''உன்னைவிட இலங்கைப் பிரச்சினை எனக்கு நன்னாத் தெரியும். அலட்டாத.''

''நோ...நோ உங்க யாருக்கும் அதுபத்தி சரியாத் தெரியாது. நான் சொல்றதைக் கேளுங்கோ.' அப்பா ஆரம்பிப்பாராம்.

'மக்கள் கூட்டம் கூட்டமாய் கொல்லப்படுகிறார்கள். சித்ரவதைக்கு ஆட்படுகிறார்கள் என்பது முதல் பிரச் சினை. யாரால் எவர் என்பது இரண்டாம் பிரச்சினை. உலகத்தில் எங்கேனும் ஒரு கோடியில் இம்மாதிரி மக்கள படுகொலை நடந்து கொண்டேதான் இருக்கிறது. எல்லா கொலைகளுமேவா நம்மைப் பாதிக்கின்றன? எல்லாவற் றுக்கும் நாம் பதைபதைக்கிறோமா? இல்லை. இலங்கை மிக அருகில் இருக்கிற நாடு அங்கு தாக்கப்படுகிறவர்கள் நம்மினத்தவர் என்பதால் நம் பதைப்பு அதிகமா கிறது. இங்கே குரூரம் படுகொலைகூட அல்ல. அது நடக்கும் விதம் நன்றாய் கவனிக்க வேண்டும். ஒரு படுகொலை துவங்குகிறது. நூறு நூற்றைம்பது பேர்

மரணமடைகிறார்கள். உடனே பிரச்சினை சூடாகி, இதை சுமூகமாகத் தீர்க்கும்படியான ஒரு பேச்சுவார்த்தை பிரச்சினை நடக்கும் இடத்திலிருந்து வெகு தொலைவு உள்ள இடத்தில் நடக்கிறது. மக்களின் உணர்வு எட்டாத டெல்லியில் பேச்சுவார்த்தை நடக்கிறது. ஏதோ ஒரு முடிவு செய்கிறார்கள். மறுபடி சிறிது இடைவெளி விட்டு மீண்டும் படுகொலைகள் மறுபடி பேச்சுவார்த்தை இடைவெளி. மீண்டும் படுகொலைகள். இது ஒன்றும் புதிய பிரச்சினைகள் அல்ல. நிரந்தரமான தொந்தரவு என்கிற எண்ணம் வரும் வரை பேச்சு வார்த்தைகளாகவே தொடர்கிறார்கள். காலம் காயத்தை ஆற்றும் என்கிறார்கள். இதுதான் பிரிட்டிஷ் பாணி. அரசியல் பிரச்சினையை நீர்க்க வைக்கும் தந்திரம். கட்டியைப் பழுக்க வைத்து, அது தானே முற்ற வைத்து. தானே உடைந்து, தானாகவே சீழ் வெளியேறும் என்கிற அரக்க வைத்தியம். கட்டி தரும வலி பற்றி வைத்திய னுக்கு கவலையில்லை. கட்டி உள்ளவனின் துடிப்பு காத்திருக்கிறவனுக்கு தெரிவதில்லை. அறிந்தும் அறியாத பாவனை. அது அப்படித்தான், என்ற பெரும்போக்கு சமாதானம். வலி உச்சக் கட்டம் போகுமானால், பேச்சு வார்த்தை என்கிற மயக்க மருந்து. படுகொலைகள் ஒரு முடிவை தருமானால் அக்குரூரத்தை பாராட்டக்கூடச் செய்யலாம். முடிவுறாத பிரச்சினை, முடிவில்லாத படுகொலைகள் என்று நகர்த்தப்படுகின்றதே தொடர்ந்து ஒரு அமைதியின்மையே வாழ்க்கை என்று மக்களை ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தப் படுகிறதே இதுதான் மிகக் குரூரம். வியட்நாம், ஈரான், தென்கொரியா, சிலோன் எல்லாம் ஒரே வகை. சரித்திரத்தில் ஒரு தலைமுறை நசுக்கப்படுகிற அவலம். வல்லரசுகள், போரிடுவதில்லை போரிடுமானால் உலகமே முடிந்து போயிற்று. எனவே சிறு நாடுகள் கலவரம் செய்கின்றன. கலவரத்திற்குத் தூண்டப்படுகின்றன, இன உணர்வோ,



மத உணர்வோ, மொழி உணர்வோ காரணம் காட்டப் படுகின்றன.

திரிகோணமலை இந்தியாவுக்கு சொந்தமாயிருந்தால் அமெரிக்கா இந்தியாவைத்தான் ஆதரிக்கும். ஏன்? அங்கு படைத்தளம் அமைப்பது அமெரிக்காவின் குறிக்கோள். ஆனால், திரிகோணமலை இலங்கைக்குச் சொந்தம். அதனால், சிங்கள அரசை ஆதரிக்கிறது. 'நீயும் உன் தேசமும் அபாயத்தில் இருக்கிறீர்கள். உனக்கு நான் உதவுவேன். கவலைப்படாதே' என்று பேரம் பேச, அங்கே பிரச்சினை ஒன்று தேவையாய் இருக்கிறது. ஒரு வல்லரசின் ஆதரவு மற்றவருக்குப் பிரச்சினையை அணுக பயமுறுத்தலாய் போகிறது. எனவே பேச்சு வார்த்தை......பேச்சு வார்த்தை...... பேச்சு வார்த்தைதான்.''

'புல் ஷிட். எல்லாத்துக்கும் அமெரிக்காவை குத்தம் சொல்றது ஒரு மேனியா. கம்யூனிஸ்ட் மாதிரி பேசாத' நாகு சீறுவாளாம்.

''அமெரிக்காவை எதிர்த்துப் பேசறவாள்ளாம் கம்யூனிஸ்ட் என்பது இன்னொரு வகை மேனியா. நாகலக்ஷ்மி, நான் அமெரிக்க ஆதரவா, கம்யூனிஸ்டா என்பதல்ல முக்கியம். தொடர்ந்து பல வருடங்களுக்கு எல்லா பிரச்சினைகளையும், சித்திரவதைகளையும், படுகொலைகளையும் அழைத்துப்போகிற அரசியல் சூழ்நிலை ஒன்று இருக்கிறதே, உலகம் முழுவதும் அதைக் கண்டு வருத்தப்படுகிறேன். தீர்வை தள்ளிப் போடப் போட பாதிப்பு அதிகமாவது தெரியாமல் இருக்கிறார்களே, அதைக் கண்டு நோகிறேன்.''

வீடு நிசப்தமாய் போகுமாம்.

இது மாதிரி நிறையப் பேசுவார்களாம். விவாதிப்பார்களாம். தெரிந்து சொல்வார்களாம்.

புனிதவல்லியின் விவாதமும் சண்டையும் வேறு என்னென்னவோவாகத்தான் இருக்கும்.

மேற்கண்ட சிரிப்புப் படத்துக்கு வசனம் தேவையில்லைன்னு போட்டிருக்குது புனிதா, உனக்கு எதுனா புரியுதா? தங்கைக்கு சிரிப்புப்படம் பற்றி விளக்க வேண்டியிருக்கும்.

ஏழு கன்னிமார் கதை பொய்யா. அவ்வவ்வா— நாக்கு அழுகிப்போகும். 'ஏம்மா, புனிதா என்ன சொல்லுது பாரேன்.'

'பேய் உண்டு நம்ம அம்மாவே பாத்திருக்குது. ரத்தக் காட்டேரிக்கு பல்லு இருக்கும்'

புனித விவாதத்தில் இறங்காமல் தோற்றுப் போவாள். வீட்டுச் சந்தோஷங்களில்கூட ஒட்ட முடியாமல் தள்ளி நிற்பாள்.

சத்தம் போட்டு சொல்லணும். 'பொங்கலோ பொங்கல்' சோறு பொங்கப்பொங்க குரல் பெரிசாவணும் கும்பிடுங்க எல்லாரும். 'பொங்கலோ பொங்கல் ஏண்டி நீயும் சொல்லேன். இப்பதான் எல்லார் வீட்லயும் சேர்த்து குக்கரே உய்யின்னுதே. நீ கூவுனா ஒண்ணும் கொறைஞ்சிடமாட்ட.'

**நித்தமும் கனவுகள் நீரிலா நெஞ்சங்கள்**
**போராய் வாழ்வு புலராப் பொழுதாய்**
**புன்னகைப் பூக்கள் பொடித்தே போயினும்**
**பொங்கலே வந்தனை சொல்லேன்.**
**எங்கள் புதுயுகம் பிறக்குமா சொல்லேன்**

டைரியில் எழுதியதை படித்துக்காட்டத் தோன்றாது. பகிர்ந்து கொள்ள முடியாது.

ஆனால் நாகலக்ஷ்மி டைரியை எடுத்துக் கொண்டு, புனிதாவின் கவிதைகளை அவள் வீட்டில் படித்துக் காட்டினாள். 'க்ளாஸ்' என்றாராம் நாகுவின் அப்பா.



'ஆத்துக்குக் கூட்டிண்டு வா' என்றாளாம் அம்மா. 'தமிழ்ல கவிதை எழுதறவாளைப் பாத்தா ஆச்சரியமா இருக்கு' என்றானாம் அண்ணா.

நாகு கவிதை எழுதி வரச் சொல்லியிருக்கிறாள். மாலை பேசினதெல்லாம் நினைவில் வைத்து உனக்கு என்ன தோன்றிற்று என்று எழுதி வரச் சொல்லியிருக்கிறாள். என்ன எழுதுவது? எனக்கு என்ன புரிந்தது— எப்படி எழுதுவது? எதை எழுதுவது?

பெண் விடுதலை என்பது மாதிரி என்னவோ பேசினாள். தனித்து நிற்றல், தானே இயங்குதல், நல்லதுச்கும் கெட்டதுக்கும். தானே காரணமாய் இருத்தல், எது வரினும் மறுக்காது ஏற்றல், எவர் முதுகின் பின்னாலும் ஒளியாது வருவதைத் தாங்குதல், படிப்பு வேலை, திருமணம், குழந்தைகள் எல்லாமும் தன் விருப்பம் போலவே நடத்துதல். சாத்தியமோ இது. ஆண்களுக்குக் கூட சாத்தியமில்லா இலைகள் பெண்களுக்கு சாத்தியம் தானா?' இந்த வருஷம் பொங்கலுக்கு எனக்கு புதுசு வேணாம்' என்றால் அம்மா விடுவாங்களா?

''ஏன்—மகாராணி கட்டிக் கட்டி அலுத்துப் போய்ட்டாளாக்கும். நாளும் கிழமையுமா துக்கிரித்தனமா வேணாங்கிறாளா...அதெல்லாம் முடியாது. நாங்களாம் கட்டிக்கும்போது நீயும் கட்டிக்கத்தான் வேணும்னு சொல்லு.''

இங்கே தனித்து நிற்றல் எப்படி சாத்தியம்? 'வாழ்க்கை காடு மாதிரி இருக்கிறது' என்கிறாள் நாகு. அதனால்தான் ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோமோ? கைகோர்த்தபடி போகிறோமோ? பயம்தான் குடும்பமா? அச்சத்தினால் பயமுறுத்துகிறது. பயத்தை வெற்றி கொள்ள முடியாமல் போகிறது. தனிமையைத் தவிர்க்க திருமணத்தாலேயே தனிமை. இப்பேர்ப்பட்ட சிக்கல். பயத்தைத் தவிர்க்க குடும்பம். குடும்பமே பயமுறுத்தும்.

இங்கே சுயமாய் நிற்றல் எவ்விதம்?

எனக்கு நாகலக்ஷ்மியின் வேகம் புரிகிறது. எவருக்கும் சுமையில்லாமல் இருக்கிற ஆசை எனக்கும் வருகிறது. ஆனால் அது எப்படி முடியும்? என்ன முயற்சியில் விளையும்?

புனிதா மெல்ல நடந்து கிணற்றை எட்டிப் பார்த்தாள். காரை உதிர்ந்து ஜலம் தெறித்து வட்ட அலைகள் கிளம்பின. மனசுக்குள்ளே சொற்கள் வடிவம் பெறத் துவங்கின. புனிதா நெஞ்சுக்குள் கவிதை எழுதத் துவங்கினாள்.

குளத்து முதுகைக் கூழாங்கல்லால்
குத்திக் கிளறுவதை நிறுத்து.
அடங்கின நெஞ்சில்
ஆசைகள் எறிந்து
ஆட்டம் பார்ப்பது அசிங்கம்,
யாரும் அறியாது கெட்டிக்கரை உடைக்க
வட்டச் சிற்றலையால் முடியாது,
ஓடுகால் நதியல்ல
எறிந்ததும் சிலுக்கென்று
சிரித்து விட்டுப் போக
இது குளம் சலனத்தை
சல்லாபத்தால் மறைக்கத் தெரியாத ஜடம்.
பல் காட்டும் உன் பட்டணக்கரை
அலைவரிசையில் நின்று உன் வரிசை காட்டு
இடுப்பு நனைய இளித்து நில்.
எழுந்து போ
என்னையும் குளத்தையும்
விட்டு

மனசுக்குள் கவிதை முழு உருவம் பெற்றதும் உள்ளே போய்க் கட்டிலில் உட்கார்ந்து எழுதினாள். தோழி என்று வாளிப்பாய் தலைப்பிட்டாள்.



பிறகு சாப்பாடு முடிந்து, சிறுசிறு வேலைகள் செய்து விட்டு படுக்கைக்கு வந்தாள். மறுபடி கவிதையைப் படித்தாள். சுருண்டு கொண்டபடி தூங்கிப் போனாள்.

## 5

''க்ளாஸ்...ரியலி. இது ஏ க்ளாஸ் கவிதை அழகா ஒரு ரிதம் மெய்ன்டெயின் பண்ணியிருக்க...

கெட்டிக்கரை உடைக்க
வட்டச் சிற்றலையால் முடியாது
ஓடுகால் நதியல்ல.

''ரொம்பப் பிடிச்சிருக்கு இந்த இடம். நீ பேசற மாதிரியே இருக்கு. ஒண்ணு புரிஞ்சுக்கோ. எனக்கு கவிதை எழுத முடியாது. கவிதையோட ஒட்டுதல் கிடையாது. ஆனால் மத்தவங்க கவிதை படிக்கப் பிடிக்கும். இன்னொருத்தர் குரல், பேச்சு, செய்தி அந்தக் கவிதையில் கேக்கறது பிடிக்கும். இது ரொம்ப நல்ல கவிதை புனிதா. இதை நானே வெச்சுக்கட்டுமா? நீ நிறைய எழுது. ஆனா ஒண்ணு. இந்தக் கவிதை மூலமா என்ன சொல்ற கடைசியா? நகர்ந்து போயிடு—ஒட்டாதங்கற...எழுந்து போங்கற இல்லையா?'' நாகலக்ஷ்மி நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

''இல்லை.''

''பின்ன?''

''நீ சொல்றது புரியறது. வட்ட அலையா அதுக்கு ரியாக்ட் பண்ண முடியுமே தவிர, என் வாழ்க்கைல அதை நடத்திக் காட்ட முடியாது. அதை என் வாழ்க்கையா ஏத்துக்க முடியாதுங்கறேன். அண்ணா, அப்பா, அம்மா உறவு இல்லாம தனிச்சு தானா இருக்கற தைர்யம்

இல்லைன்னு சொல்றேன். அதே சமயம் இருக்க முடியும் ஒரு பெண்ணாலேன்னு சொல்றதை ஏத்துக்கறேன்.''

''ரொம்ப கரெக்ட். உன் வாழ்க்கை உன் விருப்பப் படிதான். உனக்கு உறவுகள் வேணும்னா வேணும்தான். ஆனா உறவோட இருக்கறதுதான் வாழ்க்கைன்னு யாரையும் கம்பெல் பண்ண முடியாது. சரி, நாளைக்கு சாயந்திரம் இலக்கிய வீதி கூட்டம் போகலாமா?''

★

''என்னடி, கூட்டம்னு சொன்ன...முப்பது நாற்பது பேர்தான் இருக்காங்க.'' புனிதா உள்ளே நுழைந்தவுடன் கேட்டாள்.

''இலக்கியக் கூட்டம்னு சொன்னதை மறந்துட்டியா, இதுவே அதிசயம். பத்துப் பன்னெண்டு பேர்தான் சில சமயம் தேறும்.''

'மேடைல இருக்கறது யாரு?''

''வயசானவர் ஒரு எழுத்தாளர். இந்த மாசக் கதை களை விமர்சனம் பண்ணி ஒரு கதை தேர்ந்தெடுக்கப் போறார். அடுத்தபடி இருக்கிறது சந்திரமௌலி. அவர் கவிதை படிக்கப் போறார். கவிதை படிச்சதும் கலந்துரை யாடல்.''

''கலந்துரையாடல்னா?''

''கீழே உட்கார்ந்திருக்கிறவர் கேள்வி கேக்கலாம்....''

''ரொம்ப நேரமாயிடுமா? பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போகணும்டி.''

''வந்தவுடனே கிளம்பறது பத்தி யோசனையா? இரு போகலாம்.''

பெரியவர் தேர்ந்தெடுத்த கதைக்கு பலமாய் கை தட்டினார்கள். பெரியவர் கதையைப் பாராட்டிவிட்டு கட்டுரையைத் தொடர்ந்தார்.



''குறிக்கோள் இல்லாத இலக்கியம், உள்ளே பருப்பு இல்லாத தேங்காய் மாதிரி. தேரை உறிஞ்சின தேங்காய் மாதிரி. எல்லா தேங்காயோட அதுவும் கிடைக்கும். உடைச்சுப் பாத்ததும் அருவருப்போட தூக்கிப் போட்டு விடப்படும்.''

''இலக்கியத்துக்கு மட்டுமில்லை, எல்லா கலைகளுக் கும் குறிக்கோள் அவசியம். செய்திகள் எதுவும் புதுசு இல்லை. மகாபாரதத்தோட, எழுத்துக்கு தீம் முடிஞ்சு போச்சு. ஆனால் அவை மறுபடி மறுபடி தலைமுறை தலைமுறையாகப் பேசப்பட வேண்டும். ஞாபகப் படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.''

''மேகங்கள் போல புத்தியை மறைக்கும் தீமைகளி லிருந்து மனிதனை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.''

''எழுத்து எனக்கு வியாபாரம் என்று சிலர் பேசு வதைக் கேட்டிருக்கிறேன்.''

''வியாபாரம் என்பது கூட குறிக்கோள் உடையது. உதவுவது என்ற பொருளுடையது. மக்களுக்காகப் பாரம் சுமத்தல் என்று சொல்லப்படுகிறது. வியாபாரம் என்பதற்கு ஏமாற்றுதல் என்று அர்த்தமில்லை. எனக்கு மட்டும் லாபம் என்று சொல்வதில்லை. மோசமான பொருளை விற்கும் வியாபாரியை நாம் புறக்கணிப்ப தில்லையா?''

ஆனால், இன்னொரு விஷயம்—எல்லாவற்றையும் வியாபாரம் என்று அடக்கி விட முடியாது.

அன்பு வியாபாரி என்று யாராவது உண்டா? மரண பயத்தை வியாபாரம் யாராவது செய்வதுண்டா? நீதி நெறிகளை யாராவது விற்க முடியுமா? தாயன்பு இங்கு கிடைக்குமென்று யாராவது போர்டு போட முடியுமா? சகாய விலையில் சகோரத்துவம் என்று யாராவது பார்த் திருக்கிறீர்களா?

இலக்கியம், உணர்வுகளை மையமாகக் கொண்டது. அதை விற்பதோ வாங்குவதோ முடியாத விஷயம். அதனால்தான் எழுதுபவனுக்கு விலை என்று பேசாமல் சன்மானம் என்று சொல்கிறார்கள்.

எனக்குப் பணத்தேவை அதிகமாக இருக்கிறது. அதனால் இப்படி எழுதுகிறேன் என்று ஒரு எழுத்தாளன் சொன்னால் அது கவலைக்குரிய விஷயம். வறுமை வாட்டுகிறது என்று எழுதுபவன் சொன்னால் பாவமாய்த் தான் இருக்கிறது. பசிக்கொடுமையில் விபச்சாரம் செய்ய வந்தேன் என்கிற பெண்ணைக் கண்டு வரும் இரக்கம் போல, ஒரு வேதனை பிறக்கிறது.

நல்லபடி விபச்சாரம் செய்து 'ஓஹோ' என்று வர வேண்டும் என்று வாழ்த்த முடியுமா?

'இப்படி ஒரு நிலையில் சமுதாயம் வைத்திருக்கிறதே இவளை' என்கிற வேதனைதான் பட முடியும். மீட்புக்கு வழியென்ன என்று யோசிக்க வேண்டும்.

எழுத்து தனக்கு வியாபாரம் என்று எழுத்தாளன் சொன்னால் அதில் பெருமைப்பட ஏதுமில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்படி சொல்கிற நபரைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டும்.

பாலில் தண்ணீர் கலப்பது தண்டனைக்குரிய விஷயம். அரிசியில் கல் சேர்ப்பது கேவலமான காரியம். மூனு வருஷ ஜெயில் நிச்சயம். போலி மருந்து விற்பவரை தூக்கில் கூடப் போடலாம்.

இவ்வித கலப்படத்தை எழுத்தில், இலக்கியத்தில் வரையறுத்து கண்டுபிடிக்க இயலாது என்பதாலேயே தப்பித்துப் போகிறீர்கள். தண்டணைக்கு வழியில்லாததாலேயே வியாபாரம் என்று நெஞ்சை நிமிர்த்துகிறீர்கள்.

நீங்கள் போலி வியாபாரிகள். கலப்படக்காரர்களை சட்டம் தண்டிக்காது போனாலும், சமூகம் புறக்கணிக்கும்



நிலை உங்களுக்கு உண்டு. புறக்கணிப்பை விட பெரிய தண்டனை ஏதும் இல்லை.''

கூட்டம் ஆரவாரித்து கை தட்டிற்று. புனிதாவும், நாகலக்ஷ்மியும் கூட கை தட்டினார்கள்.

மேடையில் இருந்த இளைஞன் எழுந்தான். சபைக்கு வணக்கம் சொன்னான். வெள்ளைச் சட்டையை பிரவுன் பேண்டில் சொருகி, பட்டை பெல்ட்டும், ஸூவுமாய் மேடை விளிம்பில் நின்றான். தலையைக் கோதிக் கொண்டான்.

''பார்த்தா ஆபீஸர் மாதிரி இருக்கு. கவிஞர் மாதிரி தெரியலை.'' புனிதா மெல்ல கிசுகிசுத்தாள்.

''கவிஞர்னா எப்படி இருக்கணும்?''

''ஜிப்பா, வேஷ்டி, மேல்துண்டு, வெத்தலை, பாக்கு.''

''இப்ப அந்தமாதிரி வேஷம் யாரும் போடறதில்லை. கேட்கலாம் இரு.''

''நண்பர்களே, தமிழில் கவிதை இலக்கியம் மிகுந்த வளம் கொண்ட முழுமை கண்ட விஷயம். தமிழ் மொழியின் வளமையும், தமிழ் நாகரிகமும் பல உச்ச நிலைகளைக் கண்டவை. இங்கே சோதனை முயற்சிகள் சிரமமானவை. வளர்ந்து வரும் மொழியில் செய்யப் படுவது போன்று புதிய முயற்சிகள் செய்ய எதிர்ப்பு கடுமையாய் இருக்கும். எனினும் ஜப்பானிய ஹைக்கூ முறைப்படி எழுதிய என் சில தமிழ்க் கவிதைகளை இங்கு வாசிக்க விரும்புகிறேன்.

ஜப்பானில் பிரபலமான இந்த ஹைக்கூ கவிதை வடிவம் மூன்று வரிகளைக் கொண்டது. ஒரு உணர்வை ஒரு படிமத்தால் விளக்கி, அதோடு நின்று விடுகிறது. அதுபோல் என்று விளக்கிச் சொல்லாமல் வெறும் உப மானமாய் அல்லது குறியீடாய் கவிதை நின்று விடுகிறது.

உதாரணத்திற்கு ஒரு ஜப்பானிய கவிதை தமிழாக்கம் தருகிறேன். கவிதைத் தலைப்பு-வண்ணத்துப்பூச்சி.

**எழுதி முடிக்கப்பட்ட ஒரு காதல் கடிதம்**
**விலாசம் தேடித் தவிக்கிறது.**

இவ்வளவுதான் கவிதை. மலர்களுக்கு மலர் தாவும் அழகிய வண்ணத்துப் பூச்சியை எழுதி முடிக்கப்பட்ட காதல் கடிதம் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மேல் வண்ணத்துப் பூச்சிக்கு வளர்ச்சியில்லை. அதாவது அப் பூச்சி எழுதி முடித்து போஸ்ட் செய்யப்பட்ட ஒரு காதல் கடிதம். ஒரு கடிதம் எப்போது நிறைவு பெறும்? குறிப் பிட்டவரை சென்றடைகிற பொழுதுதான். விலாசம் சரி யில்லாத கடிதம் குறிப்பிட்ட ஆளை தேடித் தவிப்பது போல். முடிவு பெற்றும் முடிவுறாததைப் போல வண்ணத்துப்பூச்சி படுகிறது கவிஞனுக்கு. உள்ளார்ந்த சோகம் இழையோடுகிறது இக்கவிதையில். அழகுணர்ச் சிக்கு அப்பால் ஒரு தவிப்பைக் காண்கிறான் கவிஞன். இரண்டே வரியில் மிகப்பெரிய உணர்வு தெரிவிக்கப்பட்டு விட்டது. இந்த முறைதான் ஹைக்கூவின் வடிவம். இம் மாதிரியே சில ஹைக்கூ கவிதைகளை சோதனை முயற்சி யாய் செய்திருக்கிறேன்.

இலக்கியம், உணர்வுகளை மையமாகக் கொண்டது என்றார் எனக்கு முன் பேசியவர். என் உணர்வுகளை உங்கள் முன் வைக்கிறேன். இது முதல் கவிதை.

**முட்டி முட்டி பால்குடிக்கின்றன**
**நீலக்குழல் விளக்கில்**
**விட்டில் பூச்சிகள்.**

கூட்டம் மௌனமாய்க் கேட்டது. யாரோ கொட் டாவி விட்டார்கள்.

இது அடுத்த கவிதை. தலைப்பு : விடலைகள்.

**துள்ளித் துவண்டு தென்றல் கடக்க**
**விஸில் அடித்தன மூங்கில் மரங்கள்.**



அடுத்து, நகரம் என்கிற கவிதை :

**''பறவைகள் அடையும் பெருமரங்கள் வீழ்ந்து**
**மனிதர் அடையும் கல் மரங்கள் முளைத்த**
**காடு.''**

கூட்டத்தில் யாரோ ஒருவன், வெரிகுட்' என்று குரல் கொடுத்தான்.

அந்த இளைஞன் மெல்ல நிமிர்ந்து, 'புரிகிறதா?' என்று கேட்டான்.

'மேலே படிங்க.' யாரோ பதில் சொன்னார்கள்.

அடுத்து தென்னை மரங்கள் பற்றி சில ஹைக்கூக் களில் ஒன்று :

**ஏரிக்கரையின் தென்னையின் நிழல்கள்**
**வெயில் ஏறவும்**
**நீரில் குதித்தன.**

''ஐயா, ஒரு நிமிஷம்.'' யாரோ எழுந்து இடைமறித் தார். ''உங்களுக்கு முன்ன பேசினவரு இலக்கியத்தில் குறிக்கோள் இருக்கணும்னு சொன்னாரு. இப்ப நீங்க சொன்ன கவிதையில குறிக்கோள் ஏதாச்சும் இருக்கா? இருந்தா அது என்னான்னு சொல்ல முடியுமா?''

அந்த கவிஞன், எதிர்பாராத இந்த இடைமறிப்புக்குக் குழப்பமடைந்தான்.

''மிச்ச கவிதைகளையும் வாசிச்சுடறேனே?''

''வாசிச்ச வரைக்கும் எங்களுக்கு ஒண்ணும் புரிய லையே? அதனால கேக்கறேன். குறிக்கோள் புரிய வைச் சீங்கன்னா மேற்கொண்டு கவிதையை ரசிக்க முடியும்.''

கூட்டத்தில் சிலர் சங்கடத்தில் நெளிய, சிலர் கேலி யாய்ச் சிரிக்க, இரண்டு பேர் பாராட்டாய் கைதட்ட, அமைதியின்மை தோன்றிற்று.

அந்த கவிஞன் இறுகிய முகத்தோடு ஒரு நிமிடம் மௌனமாய் நின்றான். கூட்டம் ஆவலுடன் காத் திருந்தது. "சற்று முன் நம் நண்பர் பேசியது போல குறிக்கோள் என்பது தேங்காயினுள் பருப்புமாதிரி இருக்க வேண்டியது அவஸ்யமில்லை. மலரிலிருந்து வரும் வாசனை போலவும் இருக்கலாம். ஒரு மலர் வாசனையின் கனபரிமாணம் சொல்வது சாத்தியமில்லை, அது உங்கள் மூக்குத் திறனைப் பொறுத்தது."

நாகலெக்ஷ்மி வாய்விட்டுச் சிரித்தாள், "சபாஷ். நல்லா மூக்கை உடைச்சான்."

"அப்ப உங்கக் கவிதைல ஏதோ இருக்குங்கிறீங்க. அது என்னன்னு சொல்லணும்."

"புரியலை உங்க கேள்வி."

"நான் கேக்கறேன்." ஒரு பெண் எழுந்தாள். "அவர் கேக்கறதை நான் வேற விதமாகக் கேக்கறேன். உங்க முதல் கவிதை-முட்டி முட்டி பால் குடிக்கின்றன நீலக் குழல் விளக்கில் விட்டில் பூச்சிகள். இதுக்கு என்ன அர்த்தம்? இது எதைச் சொல்கிறது? வெறும் வடிவமா அல்லது இதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா?" கேள்வி கேட்டு பதில் தேவையில்லை என்பது போல் சட்டென்று உட்கார்ந்து விட்டாள்.

"எழுதியவனே தன் கவிதைக்கு அர்த்தம். சொல்வது ஒரு பரிதாபமான நிலை" கவிஞன் மெல்ல முனகினான்.

"ப்ரதர், எங்க நிலையும் பரிதாபம்தான். நீங்க என்ன சொல்றீங்க? இது கவிதையான்னே தெரியலையே?"

கூட்டத்தில் மறுபடி கேலிச் சிரிப்புகள் எழுந்தன.

"சரி. முதலில் கவிதைக்கு மட்டும் சொல்கிறேன். மூன்று நான்கு ஆட்டுக் குட்டிகள் தன் தாயிடம் பால் குடிப்பது போல், அந்த வேகம் போல், அந்த ஆத்திரத் தோடு, பசியோடு விட்டில்கள் குழல் விளக்கில் மோது



கின்றன. பாலாய் இறங்குகின்ற நீல ஒளியை குடிக்க முயற்சிப்பது போல் எனக்குப் படுகிறது."

"சரி புரியுது. மேற்கொண்டு—"

"ஆனால், உண்மையில் அங்கு உணவில்லை. மாறாக வெப்பம், விட்டிலைக் கொல்லும் வெப்பம் இருக்கிறது. தன் மரணம் தெரியாது—இல்லாத ஒன்றை இருப்பதுபோல நினைத்து விட்டில்கள் மரணமடை கின்றன. மரணத்துக்குத் தவிக்கின்றன. அந்த விட்டிலும் மனித வாழ்க்கையின் சோகமும் ஒன்றே என்று எனக்குத் தோன்றுகிறது."

"நீங்க கவிதை போட்டா கூடவே கோனார் நோட்ஸும் போட்டுறணும்" கேள்வி கேட்டவர் எகத்தாளமாய் பேசினார்.

கூட்டம் மறுபடி சிரித்தது.

"கோனார் நோட்ஸ் போடறது, பாடம் புரியாத பையனுக்குத்தான்."

"ஐயா, நான் மக்குதான். எல்லாரும் கவிஞராயிட முடியுமா? எல்லார்க்கும் புரியற மாதிரி எழுதறது முக்கியமில்லையா?"

"கவிதை என்பது கை குலுக்குவது போல. கவிஞன். ரசிகன் இருவரின் முயற்சியும் புரிதலுக்குத் தேவை. எல்லோருக்கும் புரிந்த கவிதை இதுவரை எழுதப்பட வில்லை. மேலும், புரிதல் என்பது அவரவர் அனுபவம் ஒட்டியும் இருக்கிறது. இந்த என் கவிதையில் புரியாதது எதையும் சொல்லவில்லை. விட்டில், நீலக் குழல் விளக்கு இரண்டுமே உங்களுக்குத் தெரிந்தவை. கோணம்தான் வேறு. என் கவிதையைக் கேட்ட பிறகு மழைக்கால விட்டில்கள் மோதும் குழல் விளக்கைப்

பார்த்தால், உங்களுக்கு என் கவிதை ஒரு வேளை புரிபடலாம்.''

''அதுக்கு மழைக்காலம் வரைக்கும் காத்திருக்கணுமே?''

கூட்டம் மறுபடி சிரித்தது.

''அது இருக்கட்டும். நீங்க இப்ப பேசினதுல ஒரு அப்ஜெக்ஷன்'' இன்னொருவர் எழுந்தார். ''எல்லாருக்கும் புரிந்த கவிதை இதுவரை எழுதப்படவில்லைன்னு சொல்றது தப்பு. உங்களுக்கு எழுதத் தெரியலைன்னு சொல்லுங்க. 'தாயின் மணிக்கொடி பாரீர். அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்'னு பாரதியார் கவிதை யாருக்குய்யா புரியாது?''

''அவ்வளவு நிச்சயமா சொல்ல முடியாது. 'தாயின் மணிக்கொடி' என்பதை எங்க அம்மா போட்டுக்கற கருகமணின்னு யாரும் புரிஞ்சுக்கலாம்.''

''எந்த மடையனும் அப்படிப் புரிஞ்சுக்க மாட்டான்'' கேள்வி கேட்டவர் ஆத்திரத்துடன் கத்தினார். கூட்டத்தில் அதிகச் சலசலப்பு ஏற்பட்டது. ''விதண்டாவாதம் பண்றாரு, இவர் கவிதை புரியலைன்னா யார் கவிதையும் புரியாதுங்கறாரு'' ஆளுக்கு ஆள் எழுந்து பேசினார்கள். சில பேர் சமாதானப் படுத்தினார்கள்.

''நான் விதண்டாவாதம் செய்யவில்லை. என் கவிதைகளை முழுவதும் படிக்கவிடாமல் நீங்கள்தான் வாதம் செய்கிறீர்கள். எல்லார் கவிதையும் எல்லாருக்கும் ஒரே விதமாய் புரிவதில்லை—பாரதியார் கவிதைகள் உட்பட. பாரதியின் குயில்பாட்டுக்கு சரியான விளக்கம் இதுவரை யாராலும் சொல்லப்படவில்லை. அதில் வரும் மாடும், குரங்கும், குயிலும் எதைக் குறிப்பன என்பது பற்றி தெளிவில்லை. அதே சமயம் பாரதியின் குயில் பாட்டு மகத்தான காவியம் என்று போற்றப்படுகிறது.''



''அப்போ, புரிஞ்சுக்க கஷ்டமான கவிதை நல்ல கவிதைங்கறீங்க. அதுக்காகவே கஷ்டமாக்கி எழுதறீங்களா?''

''இதற்கு நான் பதில் சொல்ல முடியாது.''

''சொல்லித்தான் ஆவணும்.''

சற்று முதிர்ந்த வயதுக்காரர் எழுந்தார். ''கோபப்படாதீங்க தோழரே'' கூவியவரை உட்கார வைத்தார். ''கவிஞர் ஐயா, நான் பேச்சைக் கொஞ்சம் திசை மாத்தறேன். உங்க குறிக்கோள் என்னன்னு அவர் கேட்டதை வேறுவிதமா கேக்கறேன்; நீங்கள் ஜனநாயகவாதியா, இல்லை கம்யூனிஸ்டா? நீங்க ஏகாதிபத்தியவாதியா? இல்லை மக்கள் பக்கமா? இதைத் தெளிவாக்கிடுங்க. எந்தக் கொள்கை அடிப்படையில் உங்கள் கவிதை வெளிவருகிறது? இன்றைக்கு நம்மைத் தாக்குகிற வறுமை, வரதட்சணைக் கொடுமை, வேலை இல்லாத் திண்டாட்டம்போன்ற பிரச்சினைகளை மையமாக்கி எழுதாம வேறு ஏதோ விஷயம் எழுதறீங்களே, அது ஏன்? இதுக்கு பதில் சொல்லுங்கள்.''

சற்று முன்வழுக்கையாய், கண்ணாடி அணிந்து, கனமான உடம்போடு அரைக்கை சட்டையும், கரை வேட்டியும், அக்குளில் தோல்பையுமாய் எழுந்து கேள்வி கேட்டவரை நோக்கி அந்தக் கவிஞன் புன்னகை செய்தான்.

''நல்லது சிவசங்கரன் அவர்களே, உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லும் முன் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். என் கவிதைகளைக் கேட்டுவிட்டு நான் ஐயரா, ஐயங்காரா, முதலியாரா, செட்டியாரா என்று கேட்பீர்களா?''

''மாட்டேன். அது அநாகரீகம்.''

''அவ்வளவு அநாகரீகம் இந்தக் கேள்வியும்.''

கூட்டத்தின் ஒரு பகுதி கோபமாய் எழுந்தது. கூச்சலிட்டது. கவிஞன் கூட்டத்தின் கோபம் அடங்கக் காத்திருந்தான்.

கேள்வி கேட்ட சிவசங்கரனே கூட்டத்தை மறுபடி அமைதியாக்கினார்.

''தொழில் பிடிப்பால் ஜாதிகள் தோன்றியது போல, சில கொள்கைகள், இஸங்கள் பிடிப்பால் கட்சிகள் தோன்றின. இந்த இஸம் உள்ளவர் இன்ன கட்சி என்று அனுமானிக்கப்படுகிறது. ஆனால் கவிஞன் ஜாதி, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன். மனித வாழ்க்கையில் இன்றைய நிலைக்களன் மட்டுமே அவன் பார்வைக்கு வருகிறது. நீங்கள் சொல்லுகிற வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வரதட்சனைக் கொடுமைகளை முற்றிலும் ஒழித்த தேசத்தில்கூட மானுடப் பிரச்சினைகள் உண்டு. அங்கிருந்து தப்பித்து ஆட்கள் வேறு தேசம் வருகிறார்கள். தஞ்சம் கேட்கிறார்கள். சோறும், கரன்ஸியும் மட்டுமே பிரச்சினை என்று நான் நம்பவில்லை. ரொட்டித் துண்டுக்குப் பிறகும் பிரச்சினை உண்டு. மரண பயம் உண்டு. இன்னதைத்தான் எழுத வேண்டும் என்று கவிஞனுக்கு யாரும் கட்டளை இட முடியாது. கட்டளையில் கவிதை வராது. கவிஞனை நீங்கள் என்ன இஸம் என்று கேட்பதும், என்ன ஜாதி என்று கேட்பதும் ஒரே மாதிரிதான்.''

''உனக்கு பாங்க்ல உத்தியோகம். சோத்துக்குக் கவலையில்லை. ஸ்கூட்டர்ல ஊர் சுத்தறே, சோபால சாஞ்சிக்கிட்டு நீலக்குழலு, விளக்குப் பூச்சின்னு எழுதுவ. ஊர்ல அவனவன் சோத்துக்கில்லாத சாவறான்—'' யாரோ இளைஞன் கோபமாய்க் கையாட்டிப் பேசினான்.

அமைப்பாளர் இந்தப் பேச்சை அடக்க முயல, குழப்பம் அதிகமாகியது. கூட்டம் முடிந்ததாய் அறிவிக்கப் பட்டது.



''ஊர்ல ஜனங்க சோத்துக்கில்லாம சாவறாங்கன்னு சமுதாய உணர்ச்சி பொங்கறவருக்கு, இலக்கியக் கூட்டத்துக்கு மட்டும் வரமுடியுதா? வேறயெங்கயோல்ல போயிருக்கணும். இங்க புல்லு புடுங்க வந்தாராக்கும்—'' யாரோ கேட்க, யாரோ பதில் சொல்ல, எவர் சட்டையை எவரோ பிடிக்க, பல பேர் புகுந்து விலக்கிவிட, அந்தக் கவிஞன் மௌனமாய் நாற்காலியில் முகத்தைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்தான். கொஞ்சம் பரிதாபமாய்த் தெரிந்தான்.

நாகலக்ஷ்மி, புனிதாவுடன் அவனை நெருங்கினாள்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

## 6

''இங்கு நடந்தவைகளைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் கவிதைகள் சிறப்பாய் இருந்தன.''

''நன்று.''

''கல் மரங்கள் முளைத்த காடு என்று நீங்கள் வர்ணித்தது ஆச்சரியமாய் இருந்தது. நானும் அவ்விதமாகவே நகரத்தை உணர்ந்திருக்கிறேன். காங்கிரீட் காடுகள் என்று யோசித்திருக்கிறேன்.''

''நன்றி.''

''அதிகம் பாதிக்கப்பட்டுவிட்டீர்களா?''

''கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறேன். இவர்களுக்கு புரியும்படியான கவிதை எது என்று குழம்புகிறேன்.''

''பாராட்டவில்லையே என்பதால் குழம்புகிறீர்களா? பாராட்டுப் பெறுவது மிகச் சுலபம், மிஸ்டர் சந்திரமௌலி.

**மங்கைவெளி தந்தக்கிளி**
**சொந்த மொழி—கந்தைத்துணி**

என்று சப்தமிட்டால் போதும். கூட்டம் விடாமல் கைதட்டும். எல்லோர்க்கும் புரிதல் என்பது அவசியமில்லை.''

''நீங்கள் கவிதை எழுதுவீர்களா நாகலக்ஷ்மி?''

''இல்லை, படிப்பவள். எழுதுபவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தவே இங்கு வந்தேன். இது புனிதவல்லி. என் தோழி மெல்லிய தமிழ் வெறி உண்டு இவளுக்கு.''

புனிதா கரம் கூப்பினாள். கூட்டம் நகர, ஹால் விளக்குகளை அணைக்கத் துவங்கினார்கள்.

''சீக்கிரம் போகச் சொல்கிறார்கள் போலிருக்கிறதே?''

''போவோமே'' நாகலக்ஷ்மி நகர்ந்தாள்.

''பஸ் ஸ்டாண்டில் நின்று பேசலாமா?''

''எங்காணும் ஹோட்டலுக்குப் போவோம். டீ குடிப்போம். ஆட்சேபணை இல்லையே?'' திருப்பிக் கேட்டாள்.

''எனக்கா? நானே அழைக்க விரும்பினேன் பெண்கள் என்பதால் சற்றுத் தயங்கினேன்.''

''நாங்கள் கொஞ்சம் திமிர் பிடிதத பெண்கள், இல்லையா புனிதவல்லி?''

''ரொம்ப சந்தோஷம்.''

''தமிழ்லயே பேசு, நாகலக்ஷ்மி, இங்கிலீஷ் எதுக்கு?'' புனிதா இடைமறித்து மெல்லப் பேசினாள்.

''அது சரி. இரண்டு பேரும் எங்க வேலை செய்யறீங்க? நான் பாங்க்ல குமாஸ்தா. மவுண்ட்ரோட் பிராஞ்ச். வீடு அமிஞ்சிக்கரை. அப்பா இல்லை. நான், அம்மா,



இரண்டு தங்கை. ஒரு தங்கை ஒன்பதாவது. இன்னொருத்தி எட்டாவது படிக்கறா, முஸ்லீம் ஹோட்டல்ல டீ சாப்பிடுவீங்களா நாகலக்ஷ்மி?''

''சிக்கன் ஸிக்ஸ்டி ஃபைவே சாப்பிடுவோம்.''

''நிஜம்மாவா?''

''இல்லை, சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்.''

''ச்சீய்...ரொம்ப விளையாடற நாகு.''

''ஏன்...நீங்க சாப்பிடமாட்டீங்களா புனிதா?''

''பேர்கூட சொல்ல மாட்டா.''

''நான்கூட டீ மட்டும்தாங்க சாப்பிடுவேன் போலாமா?''

''சரி, இப்போ சொல்லுங்க. கவிதை என்பது என்ன? எது கவிதை?'' டீயை மெல்ல உறிஞ்சியபடி நாகு கேட்டாள்.

''ரொம்ப சிரமமான கேள்விங்க இது. திருப்தியா, தெளிவா பதில் சொல்ல முடியாது. அன்பு என்பது என்ன, காதல் என்பது எதுன்னு கேட்டா என்ன பதில் சொல்ல முடியும். தெரிஞ்சதைத்தான் சொல்ல முடியும். அது மாதிரியே கவிதை பற்றி எனக்குத் தெரிஞ்சதை சொல்கிறேன். புரிஞ்சுக்கறது உங்க பாடு.''

''வார்த்தைகளுக்கு மிஞ்சி, சொல்லின் அர்த்தம் மீறி ஒரு உணர்வு அல்லது பிரமிப்பு ஏற்படுத்துவது கவிதை வார்த்தைகளுக்கு இடையே தொக்கி நிற்கும் அர்த்தம் கனமாக, கனமாகக் கவிதை உயர்வாகிறது. ஒருவன் ஒரு பெண்ணுக்கு மான்போல மருண்ட கண்கள் என்று வர்ணித்தால் அது வெறும் உபமானம் மட்டுமில்லை. அந்தப் பெண்ணை அவனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்கிற த்வனியும் அதில் தொக்கி நிற்கிறது. அவள் அழகான கண்களை உடையவள்

என்பது புரிகிறது. கவிதையில் அந்தப் பெண்ணைப் பிடித்திருப்பது பற்றி சொல்லப்படவில்லை. ஆனால், உணர்கிறோம் இல்லையா? அதுபோல, கவிதையில் சொல்லப்பட்ட அர்த்தம் தாண்டி ஒரு உணர்வு புரிபட வேண்டும். உணர்வு மரத்தின் உச்சாணிக் கிளை கவிதை.''

''இன்னும் விளக்கமாய், நல்ல கவிதைக்கு உதாரணம் சொல்லுங்க.''

''பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து சொல்கிறேன்.

கௌவையஞ்சிற் காமம் எய்க்கும்
எள்ளறவிடினே உள்ளது நாணே
பெருங்களிரு வாங்க முறிந்து நிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசிற்றோ, அழிய அவர் உண்ட என்நலனே.

இந்தக் கவிதை புரிகிறதா? கொஞ்சம் கதையா அர்த்தம் சொல்றேன்.

''யாரோ ஒரு தலைவன், ஒரு தலைவியைக் காதலிச்சு ஊருக்கு அப்பால் தோப்புக்குத் தனியாக்கூட்டிண்டுபோய் விளையாடறான். முழுக்க இல்ல, மேலோட்டமா. ஸாரி, இப்படி பேசறதுக்குத் தப்பா நினைக்க வேண்டாம். முழுக்க முழுக்க வாய்ப்பில்லாம யாரோ வர சத்தம் கேட்டு நகர்ந்துடறான். அந்தத் தலைவி சொல்கிறா, தோழி இப்ப என் நிலைமை எப்படி இருக்கு தெரியுமா? உண்ணுதற் பொருட்டு ஒரு பெரிய யானை மரக்கிளையை ஒடித்துவிட்டுப் போக, அந்த மரக்கிளை உண்ணப் படாமலும் அதே சமயம் பழைய நிலையில் இல்லாமலும் பாதி ஒடிந்து மரப்பட்டையில் தொங்கிக் கொண்டிருப் பதைப்போல இருக்கிறது என்கிறாள். நான் சொல்ற போது அந்தப் படம் மனசுல வர்றதா. காமமும் முழுவதுமாய் பெறப்படவில்லை. பழைய கற்பு நிலை யிலும் இல்லை. பட்டை உரிந்து ஊசலாடுகிற



மரக்கிளை மாதிரி, மெல்ல மெல்ல பட்டுப் போகிறேன் என்கிறாள்.

''இதே மன வேதனையை, மெல்லிய காம உணர்வை இதைவிட வேற எப்படிச் சொல்ல முடியும் நாகலக்ஷ்மி? உவமானம் மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கு. ஆனா வேதனை, அந்தப் பெண் மனசு முழுக்கத் தெரியறது. இதைப் படிச்சுட்டு பலநாள் ஹான்னு பிரமிச்சுக் கிடந்தேன் நாகலக்ஷ்மி.''

''இது குறுந்தொகை, ஆலந்தூர் கிழார்னு ஒருத்தர் எழுதியிருக்கார். கிட்டத்தட்ட ஆயிரத்து எண்ணூறு வருஷத்துக்கு முன்னாடி எழுதின கவிதை. இது கவிதை. இதுதான் கவிதை.''

இன்னும் இரண்டு மூன்று கவிதைகள் சொன்னான். விளக்கம் சொன்னான்.

பெண்கள் இருவரும் குனிந்து அவன் பேசுவதையே வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''எனக்கு நேரமாயிடுச்சே. எட்டு மணிக்குள்ள வரேன்னு சொன்னேன். அம்மாகிட்ட.'' மெல்ல கடி காரத்தைத் திருப்பி சரி செய்து கொண்டாள்.

''எட்டா... மணி எட்டா? நாகு, எங்க வீட்ல இன்னிக்குக் கொலை நடக்கப் போவுது. நான் கிளம்ப றேண்டி. பஸ் பிடிச்சுப் போக ஒன்பதாயிடும்.'' புனிதா பதறினாள்.

''எங்க போகணும் நீங்க?''

''அரும்பாக்கம்.''

''அரும்பாக்கமா? இங்கேர்ந்து என்ன பஸ்? இரண்டு பஸ்ஸுல்ல மாத்தணும்?''

''ஆமாங்க. நேத்திக்கும் லேட், இன்னிக்கும் லேட்டுன்னா ஒரே திட்டு திட்டுவாங்க.'' நாகலக்ஷ்மியும் சட்டென்று எழுந்தாள்.

''ஒண்ணு செய்யுங்க... எங்ககூட ஸ்கூட்டர்ல அமிஞ்சிக்கரை வரைக்கும் வந்துடுங்க. அங்கிருந்து பஸ் பிடிச்சு அரும்பாக்கம் போயிடலாம்.''

''வேணாங்க. யாரும் பார்த்துட்டா கஷ்டம்.''

''ஒன் அவர் ஆயிடுங்க வீடு போறதுக்கு. ஒன்பது மணிக்குக் கதவு தட்டினா...''

''இன்னிக்கு செருப்படிதான் வாங்கப் போறேன்.''

''பதறாதடி.''

''நோ. அவங்க அவசரம் புரியறது, என் தப்புதான். ஆள் கிடைச்சதுன்னு அறுத்துத் தள்ளிட்டேன்.''

''இல்லீங்க, இன்னும் நெறைய கேக்கணும் போலத்தான் இருக்கு. ஆனா என் வீடு கொஞ்சம் கஷ்டம்.''

''புரியறது ஸ்கூட்டர்ஸ் வரமாட்டேங்கறீங்களே'' உங்களை பஸ் ஏத்தி அனுப்பிச்சுட்டு அதே கவலையால்லே வீட்டுக்குப் போகணும்.''

''இவ கவலைப்படறாளா பாருங்க.''

''என் கவலை இப்ப ஆலந்தூர் கிழார் பத்திதான்.''

''விளையாடாதீங்க நாகலக்ஷ்மி. அவங்களை என்கூட வரச் சொல்லுங்க.''

''போயேண்டி. உனக்காகவா வரார். அவர் போற வழிதானே. அப்புறம்... உன் கவிதை நோட்டை அவர் கிட்ட கொடு.''

''வாணாண்டி,''



''கம் ஆன் புனிதா. கவிதையைக் கொடுங்க. படிச்சுட்டு என் அபிப்ராயம் சொல்றேன். உங்க ஆபீஸ் போன் நம்பர் என்ன?''

நாகலக்ஷ்மி போன் நம்பர்களைச் சொன்னாள்.

''வாங்க, புனிதா, பத்து நிமிஷத்துல போய்டலாம். பஸ் பிடிச்சா இன்னொரு பத்து நிமிஷம். எட்டு இருபதுக்கு வீட்டுக்குள்ளே நுழைஞ்சிடலாம்.''

புனிதா தயங்க, நாகலக்ஷ்மி வற்புறுத்தி, சந்திரமௌலி மன்றாட, ஸ்கூட்டர் பின் சீட்டின் வளையத்தை வலக் கையால் இறுக பிடித்துக் கொண்டு இடக்கையால புடவைத் தலைப்பு, தோல் பையை அழுத்திக் கொண்டு முதுகு வளைய உட்கார்ந்தாள். ஸ்கூட்டர் நகர, நாகலக்ஷ்மிக்கு கையசைத்ததால் சட்டென்று அவன் தோளில் இடித்துக் கொண்டாள். போலீஸ் பீட்டைச் சுற்றிக் கொண்டு ஸ்கூட்டர் பறந்தது.

நாகலக்ஷ்மி மெல்ல பையை இடது தோளுக்கு மாற்றி ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்கு முன் ஒரு பெண்ணுக்கு நடந்ததை யோசித்துக் கொண்டு போனாள்.

# 7

''அரும்பாக்கம் டெர்மினஸ்லிலே விட்டுட்டார்டி. பன்னெண்டு நிமிஷம்தான் வீட்டுக்குப் போயாச்சு. என்னாடி இதுன்னாங்க அம்மா. ஓவர் டைம்னுட்டேன். இன்னிக்கு ஒன் அவர் பர்மிஷன் போட்டுட்டு வெய்யில் சாயறதுக்கு முன்ன வீட்டுக்குப் போயிடப் போறேன்.''

''என்ன பேசினீங்க வழியில ரெண்டு பேரும்.''

''ஒண்ணும் பேசலை. இறங்கின இடத்திலேர்ந்து வீட்டை காமிச்சேன். நான் வீட்டுப் படியேர்ற வரைக்கும் நின்னுட்டு அப்புறம் திரும்பிட்டார்.''

''ஒண்ணும் பேசலை?''

''பாடிக்கிட்டு வந்தார். பேசலை.''

''என்ன பாட்டு?''

''கொட்டியிடிக்குது மேகம். பாரதியார் பாட்டு. ஸ்கூட்டர் ஸ்பீடா போறப்போ இந்தப் பாட்டுதான் பாடத் தோணுமாம்.''

''நீ பாடினியா?''

''ச்சீ...''

''சாதாரணமாக கேட்டேண்டி. எதுக்கு வெட்கப் படறே?''

''ஐயராடி அவரு?''

''பேர் பாத்தா அப்படித்தான் தெரியறது. வழி முழுக்க ஒரே ஒரு பாட்டுதானா?''

''அமிஞ்சிக்கரைகிட்ட மொள்ளமா போனாரு. அப்ப 'எந்தரோ மகானுபாவலு' பாடினாரு. என்ன திடீர்னு கர்நாடக சங்கீதம் பாடறீங்கன்னேன். ஆலந்தூர் கிழாரை நினைச்சுட்டேன்னாரு.''

''அப்புறம்...?''

''லஞ்ச் அவர்ல போன் பண்றேன். உங்க கவிதை பத்தி அப்ப சொல்றேன்னாரு.''

''சதா ஒரு தவிப்பு இருக்குல்ல அந்த ஆள்கிட்ட.''

''தெரியலையே.''

''எனக்குத் தெரியறது. படபடப்புப் போகலை. கவிதை தோட்டு ஜாக்கிரதைன்னு சொன்னியா?''



''இறங்கின உடனே சொன்னேன். ஸ்கூட்டர் பெட்டிலேர்ந்து எடுத்து கண்ல ஒத்திக்கிட்டு, சிரிச்சுட்டு மறுபடி உள்ள வச்சுக்கிட்டாரு. ராத்திரி ரொம்ப நேரம் தூக்கம் வரலை.''

''ஏன், ஆலத்தூர் கிழார் ஞாபகமா?''

''இல்லை.''

''பின்ன?''

''ஆமாம்.''

''என்ன... கொஞ்சம் கிக்கு தெரிகிறது பேச்சில. டாவடிக்கிறியா அந்த ஆளை?''

''ச்சீ, போ.''

''என்னடி குட்டிகளா, வரதுக்குள்ள சாப்ட்டு முடிச்சிட்டீங்க? வெளிய பர்ச்சேஸுக்குப் போறீங்களா?'' சாவித்திரி அதிசயப்பட்டாள்.

''இல்லை.''

''என்னை விட்டுட்டு எனக்குத் தெரியாம புடவை, வளையல் கடைக்குப் போனீங்க... கொன்னுட்டேன் உங்களை.''

'டாவடிக்க போறோம், சாவித்திரி வர்யா?' நாகலக்ஷ்மி இடுப்பில் கை வைத்துக் கொண்டு பேசினாள்.

''அதுக்கு எனக்கு வயசில்லை தாயே.''

''அப்போ ஆளை விடு.''

''யாருடி, நம்ம ஆபீஸரா?''

''இல்லை வெளி ஆள்.''

''ரெண்டு பேருமா போறீங்க?''

''யெஸ்.''

புனிதா முகம் சிவந்தாள். ''தேங்க் யூ'' வெட்கிக் குறுகினாள். ''தேங்க் யூ'' புனிதா மேஜையைக் கீறினாள். ''தேங்க் யூ'' புனிதா விட்டம் பார்த்தாள். 'ரொம்ப நன்றிங்க. விஷயம் தெரிஞ்சவங்க பாராட்டறபோது பேசவே தோணலை. நான் பயந்து கிட்டே இருந்தேன் என்னுடைய வளர்ச்சிக்குக் காரணம் நாகக்ஷ்மிதான். அவ இல்லைன்னா நான் இவ்வளவு தைரியமாக உங்க கூடப் பேசக்கூட மாட்டேன். நாகு, உன்கிட்ட பேசணும்கறாரு.''

''என்ன மௌலி சார், டன் டன்னா ஐஸ் வச்சிட்டீங்களா? உடம்பு சில்லிட்டுப் போய்டும். நோ, அவ உடம்பு கொதிக்குது. வேர்த்து வழியறா. ஐஸ் வச்சா உடம்பு கொதிக்குமா?''

பெண்கள் மாறிமாறி பேசினார்கள். இடைவேளை முடியும்வரை வம்பளந்தார்கள், பிரிய மனமின்றி போனை வைத்தார்கள். அவன் பேசினதை பரிமாறிக் கொண்டார்கள்.

''க்யூட், வெரி க்யூட்'' நாகலக்ஷ்மி பாராட்டினாள்.

''எவ்வளவு மிருதுவான பேச்சு நாகு....எத்தினி கேலி பண்ணினாலும் கோபமே வராத பேச்சு.''

''மறுபடி எப்பப் பார்க்கறதுன்னு கேட்டான்.''

''ஐய்யயோ, இன்னிக்கு வேணாம். நான் வீட்டுக்குப் போறேன்''

''அப்ப ஒண்ணு செய்வோம். நாளைக்கு அரை நாள் மட்டம் போட்ருவோம். அவனையும் போடச் சொல்வோம். பீச்சில் எங்கயாவது மரத்தடில உக்காந்து பேசுவோம்.''

''அவரு வரலைன்னுட்டா? லீவ் போட முடியாதுன்னா...?''



''ரெண்டு பொண்ணுங்க கூப்பிட்டு வரலைன்னா அவன் கவிஞனே இல்லை. 'லாஸ் ஆஃப் பே' யா இருந்தாக்கூட வருவான். கவலைப்படாதே.''

''மட்டமா பேசாதடி.''

''இது நிஜம் புனிதா. மட்டமா சொல்லணும்னு சொல்லலை. வரலைன்னாதான் மட்டம். அப் நார்மல்.''

''என்ன பேசறது?''

மறுபடி கவிதை பற்றிப் பேசினார்கள். உலக இலக்கியங்களை எடுத்துக்கொண்டார்கள். மதம் வளர்த்த கவிதைகள் பற்றி யோசித்தார்கள்.

''உளன் எனில் உளன் அவன் உருவம் இவ்வுருவுகள் அலன் எனில் அலன் அவன் அருவம் இவ்வுருகள்''— அர்த்தம் தெரிந்து கொண்டார்கள்.

கடற்கரை பாதையில் மத்தியான வெய்யிலில் நடந்துகொண்டே கூவத்து முன் ஹோட்டலுக்குப் போனார்கள். வெஜிடபிள் கட்லட்டில் ஸாஸ் ஊற்றிக் கொண்டார்கள். ஜெல்லி ஃபலூடா சாப்பிட்டார்கள். 'மா...மனோ...ராமன மாரு பல்கே' பாடுவதைக் கேட்டார்கள். ஹோட்டல் ஜன்னல் வழியே கடற்காற்று பொங்குவதை அனுபவித்தார்கள். 'இதயம் தனிலிருந்து கிருபையாகி இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே' பாட்டுக்குத் தாளமிட்டார்கள்.

**''அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே**
**இத்திக்காய் காயாதே என்னுயிரும் நீயல்லவோ''**

கண்ணதாசன் சினிமா பாடலுக்கு மூலப்பாடல் பற்றி தெரிந்து கொண்டார்கள். மூலப்பாடலை நாகலக்ஷ்மி மனனம் செய்து கொண்டாள் புனிதா பஸ்ஸில்

வீட்டுக்குப் போகும்வரை மிச்ச சினிமா பாட்டைத் தொடர்ந்து பாடிக்கொண்டாள்.

**உறவுக்காய் இரவுக்காய் ஏங்கும் இந்த ஏழைக்காய்**
**நீயும்காய் நிலவும் காய் நேரில் நிற்கும் இவளைக்காய்**

படுக்கையில் புரண்டு தூக்கம் வராமல் முனகினாள்.

**உள்ளமெல்லாம்மிளகாயோ தூதுவிளங்காய் வெண்ணிலா**
**என்னை நீ காயாதே என்னுயிரும் நீயல்லவோ**

ஜன்னலின் வெளியே தெரியும் மேகங்களைப் பார்த்துக் கெஞ்சினாள். தூங்கிப் போனாள். தூக்கத்தில் சிரித்தாள். வேதனைப்பட்டாள். நிறைய பேசினாள். முகம் சுருங்கி சிணுங்கினாள். தன்னையறியாது இரண்டு கைகளையும் தொடையில் இடுக்கிக் கொண்டு சுருண்டு கொண்டாள். குளிக்கிறபோது தலையில் தண்ணீர் ஊற்றி உடல் முழுவதும் நீர்த் திவலைகள் வழிவதை வேடிக்கை பார்த்து 'மா... மனோ... ராமன மாரு பல்கே' என்று பாடினாள்.

உடுத்தி தலை சீவி, பூ வைத்து, பொட்டு வைத்துக் கொண்டு படத்தின் முன் கைகூப்பி,

**'இதயம் தனிலிருந்து கிருபையாகி**
**இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே'**

என்றாள். மெல்ல மெல்ல பித்தானாள்.

**''ஏதேனும் கற்றுக்கொடு**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**கல்விதனைக் காதலோடு செய்,**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**உயிர் காதலையே கல்வியாக்கு**

**பாலுக்குப் பிள்ளையழும்**
**பசி அடக்க ஊர் அலையும்**



**இங்கு ஞானத்தை விற்பவன் யார்?**
**வேணும் பொருள் வாங்குவதற்கு**
**விற்பனைத் தேடிப்போ.**
**உன் தேடுதலைச் சுண்டிப்போடு**
**சுண்டிவிட்ட காசுக்கு**
**விற்பவன் முன் வாய்பிளந்து**
**மேன்மேலும் கையேந்திக் கேள்.**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**கல்விதனைக் காதலோடு செய்.**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**ஏதேனும் கற்றுக்கொடு**
**உயிர்க் காதலையே கல்வியாக்கு''**

கவிதை எழுதினாள்.

''யம்மா—யம்மா. இவ்வளவு ஆர்வம், ஆசை, தவிப்பு தேடல் மனசில வெச்சுண்டா பயத்தோட அலையறீங்க? புனிதா, நான் என்ன சொல்லிக் கொடுத்தேன். சொல்லிக் கொடுக்கும்படி எனக்கு என்ன தெரியும்? நான் செய்தது பகிர்தல் புனிதா. ஜஸ்ட் ஷேரிங் மை தாட்ஸ். நான் அத்தனை பெரியவன் இல்லையம்மா. உங்ககிட்ட ஒரு கவிதை சொல்றப்போ நானும் அதை மறுபடி அனுபவிக்கிறேன். என்னது வெறும் லௌட் திங்கிங். உரத்த சிந்தனை. இப்படி ஒரு கவிதை எழுதிக் கொண்டு வந்து என்னை சிறுமைப் படுத்தாதீங்க புனிதா. என்னைப் பாடம் சொல்ற குருவா நினைக்காதீங்க. ரொம்ப உசரத்துல வச்சி விலகி நிக்காதீங்க. உங்களை வெகுளின்னு நாகலக்ஷ்மி சொல்றாங்க. அது தப்பு. உங்க கிட்ட சத்தியம் இருக்கு. உங்க கவிதைல உங்க குரலா அது வெளிப்படறது. வெள்ளை வெளேர்னு சுத்தமான மனசா நிக்கிறீங்க. அதான் சின்ன விஷயத்துக்குக்கூடப் பிரவாகமாப் பொங்கிடறீங்க. நீங்க குளமா இருக்கலாம் புனிதா, இருக்கும்படி நிர்ப்பந்தப்பட்டிருக்கலாம். ஆனா,

ஸ்படிகமா தரை தெரியற மாதிரி தெளிவா இருக்கீங்க. இது எல்லார்க்கும் கிடைக்காது புனிதா.''

அவன் பேச்சுக்கு புனிதா தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். நாகலக்ஷ்மி, அவர்கள் இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வாங்க நாகலக்ஷ்மி புனிதா எங்க—வரலையா?''

''இல்லை. எங்கேயோ கோவிலுக்குப் போயிருக்கா.''

''அடடா. நாமும் சேர்ந்து போயிருக்கலாமே.''

''இல்லை, அவ வீட்டோட போயிருக்கா. நாளைக்கு வரதா சொல்லச் சொன்னா.''

''போரடிக்குங்க.''

''புனிதா இல்லாமலா?''

''அப்படியில்லை, எனக்குத் தெரிஞ்சதெல்லாம் கக்கிட்டேன். படிச்சது எல்லாம் கொட்டிட்டேன். நீங்க யாராவது பேசினா கேக்க நல்லா இருக்கும்.'' கடல் மணலை அளைந்துகொண்டு பேசினான்.

''இத்தனை கவிதை பேச எனக்குத் தெரியாது மௌலி. ஹைக்கூ மட்டும்தான் எழுதுவீங்களா? நீளமா பொயட்ரி ஏதும் எழுதறதில்லையா?''

''நாளைக்கு எழுதிக்கொண்டு வரேன் நாகு—''

''உனக்கென்ன கோவில் குளம்
சாமிபூதம் ஆயிரம் ஆயிரம்
ஜாலியாய் பொழுது போகும்.
வலப்பக்கம் கடல் மணலை
இடப்பக்கம் இறைத்திறைத்து
நகக்கணுக்கள் வலிக்கின்றன
அடியே
நாளையேனும் மறக்காமல் வா.''



''ஐய்யோ, செமை லவ் பொயட்ரி இது. புனிதா வரலைன்னாலும் கோச்சுக்க முடியலை உங்களால, உங்களால காத்திருக்கத்தான் முடியறது. எத்தனை நாள் வேணுமுன்னாலும் காத்திருக்கேன்னு கவிதை சொல்லறது. அப்படித்தானே.'' நாகலக்ஷ்மி கவிதை படித்து விட்டு கூவினாள்.

''அது வந்து நாகு...ஏதோ தோணித்து எழுதினேன்.''

''இந்தக் கவிதை உதிச்ச நேரம் அப்ப மூஞ்சில தெரிஞ்ச வேதனை நேத்துப் பார்த்தேனே. என்னக்கா—புனிதவல்லி, கவிதையைப் பார்த்தியா?'' பக்கத்தில் உட்கார்ந்திருந்தவளை இடித்தாள்.

''எனக்குப் பிடிக்கலை.''

''எது, கவிதையா?''

''எதுவுமே பிடிக்கலை.''

''பாலும் கசந்தது, படுக்கையும் நொந்ததுங்கற மாதிரியா?''

''இல்லே நாகலக்ஷ்மி. இது சரியில்லே.''

''ஏன்?''

''கஷ்டம்தான் வரும்.''

''யாருக்கு?''

''அவருக்கு. எனக்கு. ஏன், உனக்கும் வருத்தம்தான் மிஞ்சும்.''

''வாட் டு யூ மீன்?''

''வேணாம் நாகலக்ஷ்மி. நாம சந்திக்கறதை நிறுத்திடலாம்.''

''ஏன் புனிதா?'' சத்திரமௌலி நடுங்கும் குரலில் வினவினான்.

''எனக்குத் தைரியமில்லை.''

''ஹ... போதும் உன் அசட்டுத்தனம், பயங் கொள்ளித்தனம்.'' நாலக்ஷ்மி கைவீசி அதட்டினாள்.

''அஞ்சுவது அஞ்சாமை பேதமை.''

''அஞ்சுவது—எதுக்குடி அஞ்சுவது?''

''ஹி ஈஸ் ஏ நைஸ் மேன்.''

''ஸோ வாட்?''

புனிதா மௌனமாய் இருந்தாள்.

''ஐ லவ் ஹிம்.''

''வெரிகுட், வெரிகுட், கீப் இட் அப்.''

''அவருக்குக் கெடுதல்தான் வரும். நேசிக்கிறவங் களுக்கு கெடுதல் பண்றதுக்குப் பேர் காதல் இல்லை.''

''எது கெடுதல்?''

''அவர் என்னை விரும்பறது.''

''என்ன கெடுதல்?''

''எங்க வீடு—என்னை விட்டுக் கொடுக்காது.''

''என்ன செய்யும்?''

''எது வேணா செய்யும்.''

சந்திரமௌலி சட்டென்று நகர்ந்து, அவள் வலக்கை யைப் பிடித்துக் கொண்டான். ''இதை நான் அரும் பாக்கம் தெருவுல வந்து செய்யணும். அவ்வளவுதானே புனிதா?''

புனிதா கையை விடுவிக்க மனமின்றி தலை குனிந் தாள். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கேவினாள்.

சந்திரமௌலி மெல்ல விலகிக் கொண்டான்.



''வெரிகுட். இப்ப லவ் டிக்ளர் பண்ணியாச்சு. மனசு திறந்து இரண்டு பேருமே சொல்லிட்டீங்க. சரி, நாம சந்திக்கறத நிறுத்துவோம். ஒரு மாசம் பார்க்காத இருப்போம். இந்த லவ் பத்தி விலகி நின்னு யோசிப் போம். தெளிவா இருக்கான்னு சோதனை செய்வோம். நோ மீட்டிங். நோ போன் கால்ஸ், ஓகே?'' நாகலக்ஷ்மி கடிகாரத்தைத் திருப்பி தேதி பார்த்தாள். ''இனி அடுத்த மாசம் முப்பதாம் தேதி இதே இடத்தில் சந்திக்கப் போறோம். குட் பை சந்திரமௌலி.''

''குட் பை நாகு, குட் பை புனிதா, ஸோ லாங்.''

''ஸோ லாங்''

ஒரு வாரப் பத்திரிகையில் சந்திரமௌலியின் போட்டோவும், கவிதையும் வெளியாகியிருந்தன.

கவிழ்ந்த இருட்டில் மறைந்து கிடந்த
உயரத் தென்னை நெற்றொன்று
வீசிய காற்றில் பிடிப்பைத் தளர்த்தி
மண்ணில் வீழ்ந்தது சொத்தென்று
இருளில் கையை விரித்துத் தடவி
நெற்றைத் தேடிய ஐயங்கார்!
திரும்பக் காயுடன் என்னைக் கடக்க
குனிந்து கேட்டார், 'தூங்கலையா.'
பதிலாய் மெல்லிய சிரிப்பைக் கொடுப்பினும்
மனசோ சொல்லும் வெகு உரக்க
நெற்றுத் தென்னைக் கழன்றதற்கே
தூக்கம் போச்சே உங்களுக்கு
நெஞ்சே கழன்று வீழ்ந்து கிடக்க
தூக்கம் எங்கே சொல்லுங்கோ.

புனிதா போட்டோவை விட்டுவிட்டு கவிதையை கத்தரித்து அட்டையில் ஒட்டி கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள்.

''பாவம், சாகறதுடி கிடந்து. ஏண்டா உங்களைப் பிரிச்சோம்னு இருக்கு. ஒரு மாசத்துக்குப் பாக்க முடியாம பண்ணிட்டமேன்னு வருத்தமா இருக்கு'' நாகலக்ஷ்மி வேதனைப்பட்டாள்.

''நல்லதுக்குத்தான் நாகு.''

''இன்னும் லவ் பண்றியா அவனை?''

''முன்னைவிட அதிகமா... ஆழமா...''

''கல்யாணம் பண்ணிப்பியா?''

''காதல்ங்கறது டாவடிக்கிற சமாச்சாரமில்ல நாகு.''

''நான் கேக்கறது வேற. உங்க வீட்டை எதிர்த்து வருவியா?''

''வந்துதான் ஆகணும்.''

''பேசட்டுமா அவன் கிட்ட.''

''ம்...''

''சகலத்துக்கு தாயாரா இருன்னு சொல்லட்டுமா?''

''சொல்லு.''

''நான் அவங்க வீட்டுக்கு ஒரு தரம் போய்ட்டு வரேன். பிரிவு உங்களுக்குத்தான். எனக்கு என்ன பெண்டிங்?''

''உன் இஷ்டம்.''

## 8

''சுருக்குன்னு இளைச்சுப் போயிருக்குடி. வண்டி வண்டியா கவிதை எழுதியிருக்கு. அதரம் புனிதம், மதுரம் புனிதம், வதனம் புனிதம், மனனம் புனிதம்,



மதுராதிபதே புனிதம். புனிதம்னு கொட்டையா எழுதி பெயிண்ட் பண்ணி ஒட்டி வச்சிருக்கு. அவங்க அம்மா ஏதோ சாமி பாட்டுன்னு நெனைச்சுக்கிட்டாங்களாம்.''

''அவங்க எப்படி இருக்காங்க?''

''யாரு?''

''அவருடைய அம்மா.''

''மிடில் க்ளாஸ் ப்ராமின் லேடி. அப்பர் மிடில் க்ளாஸ். விடோ. சின்னதா சாந்து பொட்டு வச்சிருக்காங்க. நல்லா இங்கிலீஷ் பேசறாங்க. ரெண்டு தங்கைகளும் ரொம்ப சூட்டிகை. அழகு. ஆன்ட்டி, ஆன்ட்டின்னு நெறைய பேசினாங்க. சொந்த வீடாம். சொப்பு மாதிரி அழகா, அமைதியா இருக்கு. அங்க உனக்கு கஷ்டம் வரும்னு தோணலை.''

புனிதா கனவுகளில் மூழ்கிப் போனாள்.

**''வானம் பார்த்த பூமிபோல் நாளிருப்பேனா**
**மழை வந்திடுமோ உயிர் தந்திடுமோ.''**

உணவு இடைவேளையில் மேஜையில் கவிழ்ந்து கொண்டு பாடினாள். நாகலக்ஷ்மி மெல்ல நகர்ந்து அவளை அணைத்துக் கொண்டாள். காதல் என்பது பெண்களை எப்படி உருக்கிப் போடுகிறது. கன்னம் ஒட்டி, உதடு வெளுத்து, விலா எலும்பு தெரிய பறித்துப் போட்ட கொடியாய் எப்படித் தவிக்க விடுகிறது. பசலை படர்ந்தது என்று தமிழில் வருகிற வார்த்தை இதுதானா? இது ஆணுக்கும் உண்டா?

''இத்தினி நாள் கழிச்சு இன்னிக்கு நீங்க மீட் பண்றச்ச நான்கூட வர வேண்டாம்னு பார்க்கறேன். புனிதா.''

''வேணாம் நாகு, அப்படிச் செய்யாதே.''

''ஏன்?''

''வேணாம்.''

''காரணம் சொல்லு?''

''ஒரு வேளை அவர் அத்துமீறினா என்னால தடுக்க முடியாது நாகு.''

''காட்... டாமிட்.''

''ப்ளீஸ் புரிஞ்சுக்கோ நாகு உள்ளுக்குள்ள நான் செத்துப் போயிண்டிருக்கேன். ஸேவ் மீ ப்ளீஸ்.''

''சரி கத்தாதே, புலம்பாத, நானும் வரேன்.''

அன்பு என்பது சுமையானது. அன்பு என்பது கனமானது. அது பெரும் பாரம். அடர்த்தி மிகுந்த வஸ்து. பிரித்துப் பார்க்க முடியாத பொருள். இப்படியா கண்ணால் விழுங்கித் தின்பார்கள்? இப்படியா கண் கலங்குவார்கள்? இப்படியா துவண்டு போவார்கள்? முகத்தில் இத்தனை சோகம் மூடிக்கொள்ளுமா? சந்திர மௌலி உதட்டை இறுக்கிக் கொண்டு 'ஹலோ' என்று புனிதாவுக்குக் கை நீட்டினான். அலைகள் வெள்ளைக் குதிரைகளாய் எழும்பி குதித்து ஓடி வந்தன. வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து... நாகலக்ஷ்மி பாசுரம் நினைத்துக் கொண்டாள். புனிதா மெல்ல கைநீட்டி அவன் கைக்குள் பொத்திக் கொண்டாள். தலையை குனிந்துகொண்டாள். நாகலக்ஷ்மி காதுக்குள் தமிழ்ப் படங்களில் கேட்ட ரீ-ரிக்கார்டிங் வயலின் எல்லாம் மறுபடி கேட்டன. மெல்ல திரும்பி அவர்களைத் தனித்து விட்டு அலைகள் பக்கம் போனாள். நின்றாள். இவ்வித உணர்வுகள் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. இது கிடைப்பவர்கள் பாக்யவான்கள். சகல வேதனைகளை யும் மீறி இதில் ஒரு சுகம் இருக்கிறது. இந்த சுகத்திற்கு சிரமப்பட வேண்டியிருக்கிறது. என்னால் இப்படி சிரமப் பட முடியாது என்று நினைத்துக் கொண்டார்கள். சற்று பொறுத்து நிதானமாய் கரை ஏறி, அவர்களுக்கு அருகில் வந்தாள்.



''இந்த சந்தோஷமான வேளையில் இன்னொரு குட் நியூஸ்.''

அவர்கள் வியப்புடன் நாகலக்ஷ்மியை நோக்கித் திரும்பினார்கள்.

''எனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிருக்கு. நேத்திக்கு சம்மதம் சொல்லி லெட்டர் வந்தது. பத்து நாள் முன்னாடி பெண் பார்த்துட்டுப் போனாங்க. நான் புனிதா கிட்டக்கூட சொல்லலை. இந்த மனநிலையில் என் கல்யாண விஷயம் அவளுக்கு அதிகமா கவலையை, ஏக்கத் தைக் கொடுத்துடும்னு சொல்லலை. தப்பா இருந்தா மன்னிச்சிடு புனிதா. மாப்பிள்ளை பிலாய்ல இஞ்சினியர். சிவில் இஞ்சினியர். இரண்டு மாசம் கழிச்சு கல்யாணம் நடக்கலாம். மெட்ராஸ்லதான் கல்யாணம். வரதட்சிணை கேட்கலை. முப்பது பவுன் நகை போடறதா அப்பா சொன்னார். சரின்னு ஒத்துண்டுட்டா. எது செய்றதும் எங்க இஷ்டம்தான். கல்யாணம் கொஞ்சம் கிராண்டா பண்ணணும்னு சொல்லிருக்கா.''

''திருடி. எதுக்குடா இப்படி பிரிஞ்சு போய்ட்ட... உன் கல்யாணம் எனக்கு வேதனையா, என்ன பேச்சு?''

''மனசு முழுக்க சந்திரமௌலி வீடும், கல்யாணப் பிரச்சினையுமா தவிக்கிற உன்கிட்ட, என் கல்யாண விஷயம் ஆடம்பரமா, வசதியா நடக்கற விஷயம் எப்படி சொல்றது புனிதா? அது உனக்கு குழப்பத்தைக் கொடுக் காதா? பயத்தை ஏற்படுத்தாதா? ஏற்கனவே தவிக்கிறது போறாதா? நான் வேற இதைச் சொல்லி தவிக்க விடணுமா? உசிரா இருக்கேன் உம் மேல, உனக்குக் கெடுதல் பண்ண முடியாதும்மா.''

புனிதா சுருண்டு நாகலக்ஷ்மி மடியில் படுத்துக் கொண்டாள்.

''இனிமே கஷ்டமெல்லாம் உங்களுக்குத்தான் சந்திர மௌலி. சாதாரண நெகிழ்வுக்குக்கூட சுருண்டுபடுத்துடற பெண் இவ. உங்களைப் பாடா படுத்தப் போறான்னு நினைக்கிறேன்.''

''நான் தயாரா இருக்கேன் நாகு.''

''தயார் பண்ணிடுவேன். எங்க அம்மா முரண்டு பிடிக்கிறவ இல்லை. ஊர் வாய்க்கு பயப்படுவா. என் மனசு வேதனைப்பட்டா சகிக்காது அவளுக்கு. நல்ல மருமகள் வேணும்கறதுதான் அவளுடைய உண்மையான லட்சியம்.''

''அப்ப உங்க வீடு ப்ராப்ளம் இல்லை. ஏய் புனிதா— எழுந்திரு. நீ எப்ப சொல்லப் போற உங்க வீட்ல?''

''சொல் பேச்சு கேக்கற வீடு இல்லை என்னுது. பெட்டியோட கிளம்பி டூர் போறேன்னு பொய் சொல்லி விட்டு, வீட்டை விட்டு வந்துட வேண்டியதுதான். கழுத்துல தாலி ஏறினப்புறம்தான் திரும்பிப் போக முடியும்.''

''அப்ப ரிஜிஸ்டர் ஆபீஸுக்குப் ஃபார்மாலிட்டிஸ் விசாரிக்கிறீங்களா மௌலி?''

''உடனே பறக்காதடி உன் கல்யாணம் முடியட்டும்'' புனிதா பேசினாள்.

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?''

''ஒண்ணுமில்ல. இருந்தாலும் இன்னும் கொஞ்சம் பொறுத்துப் போகலாம்.''

''மௌலி, நீங்க என்ன சொல்றீங்க?''

''புனிதா சௌகர்யம் எப்படியோ. அப்படி. இந்த க்ஷணம் கூட நான் தயார்.''



''கொஞ்சம் இருங்களேன் நீங்க. நாகு, உன் கல்யாணம் பத்திப் பேசு. எப்படி இருக்கார் பார்க்கறதுக்கு? என்ன பேரு? பேசிப் பாத்தியா?''

''ம். அரை மணி நேரம் பேசினேன். சபேசன்னு பேரு. டிரிம்மா இருக்கார். ஐம்பது மார்க் சுலபமா கொடுக்கலாம்.''

''ச்சீய்—அப்புறம்.''

''தனியா பேசினோம். ஹி ஈஸ் ஆல்ரைட், கொஞ்சம் உறவு முறைகள் அதிகம். பெண் பார்க்கவே பத்து பேர் திமுதிமுன்னு வந்தாங்க. ஒரே பொம்பளைக் கூட்டம்.''

''இதை ஸெலிபரேட் பண்ணணுமே.'' மௌலி இடைமறித்தான்.

''எதை? பொம்பளைக் கூட்டத்தையா?''

''உங்களுக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கறதை. மூணு பேருமா சினிமாக்குப் போலாமா?'' ஆர்வத்துடன் வினவினான்.

''நான் மொள்ள உங்க ரெண்டு பேர் கிட்டேர்ந்து கழண்டுக்கலாம்னு பாக்கறேன்.''

''சும்மா இரு நாகு. கழண்டுக்க, நான் சொல்றபோது கழண்டுக்க.''

''இந்த ஆளைவிட நான் பெரிய துணையா உனக்கு?''

''அவருக்கு துணை வேணாமா?''

''கஷ்டகாலம். நான் வரலை சினிமாக்கு.''

''நானும் வரலை.''

''நாகலக்ஷ்மி, மூணு டிக்கெட் எடுத்துடறேன். ஆட்க்ஷேபணை இல்லேன்னா வாங்க.''

நாகலக்ஷ்மி நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். புனிதாவுடன் சினிமாவுக்கும் போகும் அவன் ஆசை அப்பட்டமாய் தெரிந்தது. "சரி" என்றாள்.

"சொல்றதைக் கேள் புனிதா. தியேட்டர் வாசல்ல வம்பு பண்ணாத. அவன்கூட நீ மட்டும் போ. நான் வேண்டாம். உன்கூட தனியா இருக்கணும்னுதான் ஆசைப்படறான். புரிஞ்சுக்கமாட்டேங்கறியே?"

"நீ வந்தா நான் வரேன். இல்லேன்னா அவர் மட்டும் தனியா போகட்டும்."

"சரியான சனியன்டி நீ."

"வாங்க நாகு, பரவாயில்லை." மௌலி மெல்ல தியேட்டருக்குள் நுழைந்தான்.

"பின்னாலே போயேன் புனிதா."

"நீ போ."

"அவன் பக்கத்துல நீதான் உக்காரணும். அங்க வந்து அதற்கும் அடம் பிடிக்காத."

"முடியாது."

"எக்கேடும் கெட்டு ஒழி. நான் வீட்டுக்குப் போறேன்."

"என்ன தகராறு இது நாகு?" அவன் அலுத்துக் கொண்டான்.

"நானா தகராறு பண்றேன்? பளீர்னு அறைஞ்சு உள்ள இழுத்துண்டு போகத் தெரியலை—"

"செய்யறேன். நிச்சயம். செய்யறேன். இப்ப வேண்டாம். உள்ளே போலாம் வாங்க."

"இரண்டு பேருக்கும் நடுவுல அவன் உட்கார்ந்தா அசிங்கமடி."



"நீயே உக்காரு. நான் முதல் சீட், அடுத்தது நீ, அடுத்தது மௌலி."

"பாவம் இதுக்கா அவன் எட்டு ரூபாய்ல ப்ளாக்ல டிக்கெட் வாங்கினான்?"

"எனக்கு பயமா இருக்கு."

"உட்காருங்க நாகு. பின்னாடி மொறைக்கிறாங்க" மௌலி அலுத்துக் கொண்டான். "பரவாயில்லை நீங்களே உக்காருங்க. இந்த நேரத்துல ஆர்க்யூ பண்ணின்டிருந்தா நல்லா இருக்காது."

நாகு அரை மனதாய் அவனுக்கு அடுத்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

படம் துவங்கியதும் உற்சாகமானாள்.

கல்லூரி இளைஞர்களின் காதல் பற்றிப் படம், படிப்பு தவிர, மற்ற எல்லா காரியமும் அந்த இளைஞர்கள் செய்தார்கள்.

வீட்டுக்குப் பயந்து காதல் செய்யும் அந்தக் கதாநாயகி, தாளம் தப்பாது டப்பாங்குத்து ஆடினாள்.

**'வயிற்றுக்குள்ள மீன் துள்ளுது—அது**
**வச்சக்கண்ண வச்சபடி பார்க்குது'**

என்று பாடினாள்.

"வாழ்க்கை இவ்ளோ ம்யூசிக்கலா இருக்கா மௌலி? சினிமால எல்லா உணர்ச்சிகளையும் பாட்டுப் பாடி காட்டறாங்க. கம்யூனிகேஷன் எவ்வளவு சுலபம்கற்ற மாதிரி காட்டறாங்க."

"சினிமா பொழுதுபோக்குத்தானே—மிகைப்படுத்தறது பொழுது போக்குல சகஜம் நாகு."

"உங்களுக்கு இப்படி பாட்டுப் பாடி லவ் பண்ண ஆசை வராதா?"

''வரும், அதுல தப்பு என்ன? சினிமா மாதிரி அந்த ஆசையும் டெம்ப்ரரி.''

''கொஞ்ச நேரம் பொய்யா நடந்துக்கணும் இல்லையா?''

''இதுல பொய் எப்படி?''

''உங்க பக்கத்துல நான் உட்காந்திருக்கச்சே அப்படியே சிலிர்த்துப் போயிடற மாதிரி தவிக்கிற மாதிரி காட்டிண்டா அது பொய் இல்லையா?''

''லவ் பண்றதே கொஞ்சம் மிகைப்படுத்தல்தான் நாகு. அடுத்த ஆளை இம்ரப்ஸ் பண்ற வேலைதான். இல்லேன்னா, ஏன் பொய்ட்ரி எழுதறோம் மாத்தி மாத்தி.''

''மிகைப்படுத்தலை. தெரிஞ்சிண்டே செய்ய முடியுமா?''

''ம்ம்ம்... முடியும். இது படம். இது கண்ணாடிச் சட்டம்னு தெரிஞ்ச பிறகும் பக்தியோட கைகூப்பற மாதிரி நிறைய விஷயங்கள் இருக்கு.''

திரையில் படம் ஓட, நாகுவும், சந்திரமௌளியும் தாழ்ந்த குரலில் நிறைய விவாதித்துக் கொண்டிருந் தார்கள். புனிதா படத்தில் லயித்துக் கிடந்தாள். குரல் அதிகம் உரத்துவிடாமல் இருக்க, மிக நெருக்கமாய் தலை வைத்துப் பேச வேண்டியிருந்தது. சில சமயம் இருட்டில் தலை நெருங்கியிருப்பது தெரியாமல் முட்டிக் கொள்ளும்படி ஆயிற்று.

இடைவேளை என்று திரையில் மின்னியபோது நாகலக்ஷ்மி சோம்பல் முறித்து, ''இன்னும் முக்கால் மணி நேரம்தான்'' என்றாள். யாரோ முன் பக்கத்தில் உள்ள வர்கள் எழுந்து இவர்களை திரும்பிப் பார்த்தார்கள்:



முதலில் திரும்பிப் பார்த்தது ஒரு பெண். பிறகு ஒரு பெரியவர். பிறகு ஒரு வயதான மாமி. பிறகு இன்னொரு இளம் வயதுப் பெண். எல்லோரும் ஒட்டு மொத்தமாகத் திரும்ப, திக்கென்றது நாகலக்ஷ்மிக்கு.

இவர்கள் பெண் பார்க்க வந்தவர்கள். பெண் பார்த்துப் போய் 'சரி' என்று சம்மதம் எழுதிய குடும்பத் தினர்கள். அந்தப் பெரியவர், அந்தப் பிலாய் வரனின் அப்பா. அந்தப் பெண், அன்று பேசிப் போனவனின் தங்கை.

''கடவுளே... தப்பாய் புரிந்து கொண்டார்களா? முன்னே குனிந்து பேசலாமா? இவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தலாமா? வெறும் நண்பர்கள்தான் என்று நாமே சொல்லிவிடலாமா?'' ஆனால், எல்லோரும் சட்டென்று திரும்பிக் கொண்டார்கள். அந்தப் பெண், பிலாய் இஞ்சினியரின் தங்கை மறுபடி திரும்பு கிறது. 'ஹலோ சொல்வோமா?' மீண்டும் முகத்தை திருப்பி நேர் பார்வைக்குப் போய்விட்டது. தவறுதான். ஏதோ தப்பு அபிப்ராயம்தான். இதை உடனடியாய் போக்க வேண்டுமே? ஏன் செய்யவேண்டும்? எது வேணாலும் நினைத்துக் கொள்ளட்டும். பேசாமல் போவது குற்றமாய் பட்டு விடுமோ? மறுபடி அந்தப் பெண் திரும்பிப் பார்க்கிறது.

நாகலக்ஷ்மி அந்தப் பெண்ணை நோக்கி சிரித்தாள். ''ஹலோ'' என்றாள். வெகு வேகமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டது. ஏதோ சரியில்லை, புனிதாவிடம் சொல்லிவிட்டு எழுந்து விடலாமா? அப்படி எழுந்து போனால் இன்னும் தவறாய் பட்டுவிடாதா? குற்றம் என்பதாய் தெரியாதா? நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? முன்னேபோய் பேசவா... எழுந்துபோய் விடவா... மௌனமாய் உட்கார்ந்திருக்கவா? மௌனி

எழுந்து. ''கோன் ஐஸ்கிரீம் வாங்குகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான். அவனை நிறுத்தி விளக்கம் சொல்ல வைக்கலாமா? மௌலிக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்?''

கடவுளே, இது என்ன குழப்பமான நிலைமை?

நான் இப்போது என்ன செய்வது?

புனிதா இவை எதுவும் கவனிக்காது திரைப்படத்துப் பாட்டிலேயே மூழ்கியிருந்தாள். இவளை உலுக்கிப் பேச வைப்போமா?

யோசிக்கும்போதே விளக்குகள் மங்கின, மௌலி கோன் ஐஸ்கிரீமுடன் நுழைய, மறுபடி படம் ஆரம்பித்தது. இப்போதாவது இடம் மாற்றிக் கொள்ளலாமா? புனிதா முடியாது என்று மறுப்பாள். மறுபடி குழப்பம் உண்டாக்குவாள். என்னைச் சுற்றி ஏதோ சிக்கல் உருவாகிறது. நான் என்ன செய்யவேண்டும் இப்போது?

மௌலி மெல்ல இருட்டில் தடுமாறி இவளிடம் கோன் ஐஸ்கிரீம் கொடுத்தான். புனிதாவிடம் ஒன்று நீட்டினான். ஐஸ்கிரீம் சாப்பிட முடியவில்லை. ஏதோ இனம் புரியாத வேதனை நெஞ்சில் நின்றது. மரண பயம் போல வெளியே தெரிவிக்க முடியாத ஒரு தவிப்பு குழம்பியது.

மறுபடி படம் ஆரம்பித்தது, ஐந்து நிமிடங்களுக்குள் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த எட்டு பேரும் வெளியேறினார்கள். பெரியவர் ஒரு பெரிய சொற்றொடரை கலிகாலம் என்று ஆரம்பித்து பேசிக்கொண்டு போனது காதில் விழுந்தது.

இந்தப் பெரியவர் நேரே என் வீட்டிற்குப் போகலாம். அல்லது தன் வீட்டிற்குப் போய் காரசாரமாய் கடிதம் எழுதலாம். ஏதோ மிகுந்த வேதனையாய் ஒன்று நடக்கப் போகிறது. நாமும் எழுந்து விடலாமா?



பின்னால் போய் பேசலாமா? புனிதாவும் கிளம்புவாள். விஷயம் சொன்னால் அதிகமாய் புலம்புவாள். ''தப்பு உம் பேர்லதான் புனிதா'' என்று சொல்லி மௌலி சிடுசிடுக்கலாம். இவர்கள் சினிமா சந்தோஷம் சிதறி விழ, நான் வீட்டிற்கு ஓட வேண்டும்.

நடக்கட்டும், நடக்கிறபடி நடக்கட்டும். குழப்பத்தில் பேச்சைவிட, மௌனமே உசத்தி. என்ன நடக்கிறது என்று பார்ப்போம். கற்பனையான பயங்களைவிட, நேரிடையான கலவரம் மேல்.

''என்ன நாகு, சட்டுன்னு அமைதியாயிட்டிங்க?''

''தலை வலிக்கிறது.''

''படம் பிடிக்கலையா?''

''பார்க்கவேயில்லை.''

''மாத்திரை வாங்கி வரட்டுமா?''

''வேண்டாம்.''

படம் முடிந்ததும் விரைந்து எழுந்து வெளியே வந்தாள். காபி அழைப்புகளை மறுத்துவிட்டு, ஆட்டோ பிடித்தாள்.

## 9

வீட்டு வெராண்டாவில் கனத்த செருப்புகள் அந்நியரின் வருகையைக் காட்டின.

கால் துவண்டது. தலையில் பாரம் கூடிற்று.

''வா நாகலக்ஷ்மி, பெரியவா வந்திருக்கா பாரு. நமஸ்காரம் பண்ணு'' அப்பா வரவேற்றார்.

''இருக்கட்டும். நமஸ்காரமெல்லாம் வேண்டாம்.''

''பெரியவா அப்படிச் சொல்லப்படாது. உங்காத்து பொண்ணா வரப்போறவ.''

''வயதில் முதிர்ந்தவனே, அனுபவம் அறிவாய்க் கொண்டவனே, உன்னை நமஸ்கரிக்கிறேன். நான் குற்றமற்றவள். துவேஷங்கள் இல்லாமல் என்னை பார்ப்பாயாக'' நாகலஷ்மி நமஸ்கரித்து எழுந்தாள்.

''மனசுக்குப் பிடிச்ச வரனா கிடைச்சு சந்தோஷமாக இருக்கணும்.'' பலமான குரலில் ஆசீர்வாதம் கேட்டது.

''என்ன சொல்றேள்? உங்க பையனை பிடிச்சிருக்குன்னுதான் குழந்தை சொன்னாள், பிடிக்காத சரின்னு சொல்லமாட்டாள். குழந்தை அபிப்ராயம் கேட்டுத்தான் மேற்கொண்டு பேசினோம்.''

''பெண் குழந்தைகள் மனசு சட்டுன்னு தெரியாது நமக்கு. உள்ளே ஆயிரம் விஷயங்கள் இருக்கும். நமக்கு பயந்துண்டுகூட தலையாட்டிடும்.''

''எங்க பொண்ணு அப்படி இல்லை.''

''நம்பினேன்.''

''புரியலையே—பூடகமாப் பேசறேளே!''

''இன்னிக்கு அரை நாள்தானே ஆபீஸ்?''

''ஆமா, லேட்டா வராளேன்னு கேக்கறேளோ? ஓவர் டைம் உண்டு. எப்பவாது செய்துட்டு வருவா.''

''சினிமா கினிமா போய்ட்டு வராளோன்னு கேட்டேன்.''

''சினிமா போனா, சொல்லிட்டுப் போவா. தடுக்கறதில்லை. சரின்னுடுவோம்.''

''இப்ப ஓவர் டைமா? சினிமாவா?''



''ஓவர் டைமாகத்தான் இருக்கும். நாகலக்ஷ்மி, எங்கம்மா போய்ட்டு வர்றே...? சினிமாவா இருந்தா சொல்லியிருப்பாளே, முன்னாடியே.''

''சினிமாவுக்குப் போனேப்பா.''

தந்தை மிரண்டார். ''ஏம்மா, சொல்லாம போக மாட்டியே...?''

அண்ணா முன் வந்தான். ''மாமா ஏதோ பூடகமாய் பேசறார். சரியா புரிபடலை. சந்தேகமா கேள்வி கேக்கறார். சரியா சொல்லு நாகலக்ஷ்மி, எங்க போயிருந்த?''

''அதான் ஒரு வார்த்தைல சொல்லிட்டாளே. யாரோட போயிருந்தா? ஒண்ணுவிட்ட அண்ணாக்கள் யாரும் உண்டா?''

''சார், தெளிவாப் பேசுங்கோ.''

நாகலக்ஷ்மி கண்களை மூடிக்கொண்டாள். கத்தி அடிவயிற்றில் அழுந்தத் துவங்கிவிட்டது. இனி மெல்ல கிழித்து முதுகுவரை போய், புறம் வந்து மறுபடி குடலைச் சுருட்டிக் கொண்டு வெளிவரும். மரணம் நிச்சயம். கவசமின்றி, தடுத்துப் போராட சக்தியின்றி மாட்டிக் கொண்டு விட்டோம். கதறினால் எக்காளம் அதிகமாகும். நாலு வீட்டுக்குச் செய்தி பரவும். நடக்கட்டும். என்னவேண்டுமானாலும் நடக்கட்டும்.

''சரி. சம்பந்தம் பண்ணின இடத்தில பூடகமாக பேசறது தப்புத்தான். சுருக்கமாச் சொல்றேன். உங்க பொண் நாகலக்ஷ்மியை இன்னிக்கு மத்தியானம் சினிமா தியேட்டர்ல பாத்தேன். யாரோ பிராமணப் பையன் மாதிரிதான் தெரிஞ்சுது. பக்கத்துல உட்காந்து பேசிண்டிருந்தான். பேசினது நிறைய காதில் விழுந்தது. அது அண்ணா, தங்கை பேசறது மாதிரி இல்லை. பாத்தது நான் மட்டுமா இருந்தா வெளிய சொல்ல முடியாதபடி தவிர்த்திருப்பேன். எங்க வீட்டுப் பெண்கள் உள்பட

நிறைய பேர் பார்த்தோம், வீட்டுப் பொம்மனாட்டிகளுக்கு இந்த சம்பந்தம் சரின்னு படலை. விரதம் தாண்டிகூட கல்யாணம் நம்ம ஜாதில நிக்கறது உண்டு. நாம வெறும் பாக்கு வெத்திலை மட்டும் மாத்தியிருக்கோம்; நிக்கறது பெரிய பாதகமில்லை.''

''சம்பந்தம் நிக்கறதா எதனால? அப்படி தப்பா சொன்ன உங்காத்துப் பொம்மனாட்டி யார்?'' அண்ணா குரல் உயர்த்தினான்.

''ச்சு, கத்தாத...கத்திப் பேசினா உங்களுக்குத்தான் கெடுதல்.''

''வாக்குக் கொடுத்தப்புறம் மாறிப் பேசறது உங்க மாதிரி பெரியவாளுக்கழகில்லை.''

''உம் பேரு என்ன...ரங்கராஜனா... பொண்ணுக்கு அண்ணாதான நீ? இதோ பாரு, ரங்கராஜன். எந்தப் பொண் பேர்லயும் அபாண்டமா பழி சொல்றதுக்கு உண்டான வலிவு எனக்கோ, என் குடும்பத்துக்கோ இல்லை. நேரிடையா பாத்தோம். காதால கேட்டோம். கண்ணால பார்க்கறதும் பொய், காதால கேக்கறதும் பொய், தீர விசாரிப்போம்னு வந்தேன். உங்க பொண் ஒரே வார்த்தைல சினிமாவுக்கு நான் போனேன்னு சொல்லிட்டா.''

''நீங்க இன்னும் தீர விசாரிக்கலை. அவர் எனக்கு ஸ்நேகிதர்.'' நாகலக்ஷ்மி மெல்லிய குரலில் பேசினாள்.

''எவர்டீ...'' அண்ணா கர்ஜித்தான். இடுப்பில் கை வைத்து முறைத்தான்.

''அப்பா ரங்கராஜா, நான் போனப்புறம் விசாரிச்சுக்கோ. இப்ப வேண்டாம். அதனால் இந்த சம்பந்தம் இதோட நிக்கட்டும். உங்க பொண்ணுக்கும் வேற இடம் தெகையாம போகாது. என் பையனுக்கும் வேற இடம் கிடைக்காம இருக்காது. நான் மட்டுமே பாத்திருந்தாக்



கூட சரின்னு விட்டிருப்பேன். எட்டு பேர். என் தங்கை,
தம்பியாம்படையாள்னு நிறைய பெண்டுகள் பாத்து
கேட்டுதுகள். நாளைக்குக் கல்யாணத்துல ஒண்ணு
இல்லேன்னா ஒண்ணு வாயத் திறக்கும். குசுகுசுன்னு
வரவா போறவாகிட்டப் பேசும். சகலமும் யோசிச்சு
ரொம்ப மனக்கஷ்டத்தோட வேண்டாம்னு சொல்ல
வந்திருக்கேன். அப்ப நான் கிளம்பட்டுமா? நாழியாறது?''

''நாகலக்ஷ்மி, யார் அந்தப் பையன்? இந்தப்
பெரியவர் சொல்றதைப் பார், பதில் சொல்லு.'' அண்ணா
கத்தினான்.

''புனிதாவோட வுட்பி. பேர் சந்திரமௌலி. புனி
தாவும் வந்திருந்தா.''

''ஆனா, நீதானம்மா பக்கத்துல உக்காந்திருந்த?''

''ஆமாம். அவ புனிதா உக்சார மாட்டேனுட்டா.''

நாகலக்ஷ்மியின் தகப்பனார் தள்ளாடியபடி பின்
பக்கம் போனார். அண்ணா இடிந்து சுவரோடு சரிந்து,
தரையில் உட்கார்ந்தான்.

''சார், அவ வெறும் சிநேகித'தான்னு சொல்றா.''
அண்ணா திடுமென எழுந்து கைகூப்பினான்.

''நான் நம்பறேன். என் வீட்டுப் பெண்டுகளுக்கு
இதுக்கு அர்த்தம் தெரியுமா? அவா கட்டுப்பெட்டிகள்
ரங்கராஜா. வயதுக்கு வந்த பொண் அண்ணா, தம்பி
யோடயே இழைஞ்சு பேசக்கூடாதுன்னு நினைக்கறவா.
அவாளுக்கு மத்தியில இந்தப் பொண் வளைய வர்றது.
இவாளுக்கும் சிரமம், அவாளுக்கும் சிரமம்.''

''நிச்சயமா வேண்டாம்னு முடிவு பண்ணிட்டேளா?''

''சரின்னு சொல்றதுக்கு நான் மட்டும் போறும்.
வேண்டாம்னு வீடே தீர்மானம் பண்ணியிருக்கு.
கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர். யாரையும் எதிர்த்து
முரட்டுத்தனமா நிக்க முடியாது.''

''எங்க நிலைமை ரொம்பக் கஷ்டம் சார். நாலு பேருக்கு முன்னாடி பாக்கு வெத்திலை மாத்தினோம் சார்.''

''வாஸ்தவம் ரங்கராஜன். அதையும் யோசனை செய்தேன். இதற்கான காரணம் காட்டி நிறுத்தறது எனக்கும் நல்லதில்லை. உங்களுக்கும் கெடுதல். லௌகீகப் பேச்சு முறிஞ்சுப் போச்சுன்னு சொல்லிக்குவோம் முதல்ல பதினைஞ்சு கேட்டா. இப்ப இருபது கேக்க றான்னு நீ சொல்லு. மொதல்ல பதினைஞ்சுக்கு ஒத் துண்டா. இப்பப் பத்துதான் தருவேங்கறா மாதிரி நான் ஏதாவது சொல்றேன். மத்தபடி வேற எதுவும் வேண் டாம். அப்ப நான் கிளம்பட்டுமா?''

''சார், தயவு செய்து யோசனை பண்ணுங்கோ. இப்படி வயத்துல நெருப்பை கொட்டிட்டு போறேளே? எங்க தகப்பனார் ரொப்ப இடிஞ்சு போய்டுவார்.''

''ஐயா நான் தவறா ஒரு வார்த்தைகூடப் பேசலை, கூட வரேன்ன பொம்மனாட்டிகளை அதட்டி நிறுத்திட்டு நான் மட்டும் வந்திருக்கேன். தப்பா ஒரு வார்த்தைகூடப் பேசக்கூடாதுன்னு தீர்மானம் பண்ணிண்டு வந்திருக் கேன். எம்புள்ளைக்கு பிராப்தம் இல்லைன்னு நினைச் சுண்டு போறேன். என்னை ரொம்ப தொந்தரவு பண்ணா தப்பா. நாள் கிளம்பறேன். நாழியாறது, அப்பாக்கிட்ட சொல்லிடு. கஷ்டம்தான், எல்லார்க்கும் வேதனைதான். வழக்கமா நான் சினிமாவுக்கே போகமாட்டேன். இன்னிக்குன்னு போகணுமா? எல்லாம் அவன் செயல். அப்போ உத்தரவு.'' கைகூப்பினார். செருப்புகளை மாட்டிக் கொண்டு இறங்கி வெளியே நடந்தார்.

அண்ணா பேய் மாதிரி கூடத்துள் நுழைந்தான். வலக்கையை ஓங்கிக்கொண்டு நின்றான். நாகலக்ஷ்மி முகத்தைப் பொத்தி குனிந்து கொண்டாள். அம்மா



இடையில் புகுந்து நின்றாள். ''அந்தப் பக்கம் போ ரங்கா. வயசுப் பொண்ணை கை நீட்டி அடிக்கப்படாது.''

''வெட்டிப் போடணும் போல இருக்கும்மா.''

''உன் விரல்கூட அவ மேல படப்படாது. போ அந்தப் பக்கம்.'' அதட்டி நிறுத்தினாள்.

''எல்லாம் நான் பண்ணின பாவம். என் தலை யெழுத்து. நான்தான் அடிச்சுண்டு சாகணும் தூக்கு மாட்டிண்டு சாகணும்.'' ரங்கு தலையிலடித்துக் கொண்டு புலம்பினான்.

''ரங்கா, போதும் நிறுத்து'' அப்பா அவனை அதட்டி சமாதானப்படுத்த முயன்றார்.

''அவமானம் வந்துடுத்தே. அசிங்கம் பண்ணிட் டாளே?''

''நான் ஒரு அசிங்கமும் பண்ணலை.'' நாகலக்ஷ்மி கோபத்தில் இரைந்தாள்.

''எதானும் பேசினா, கொலை பண்ணிடுவேன். வாய் வேற....சனியனே—மானங்கெட்ட சனியனே—சண்டாளி... குடிகேடி.''

''சிநேகிதனோட சினிமா போறது தப்பா?''

''யாருடி சிநேகிதன்? யாருடி அவன்?'' அண்ணா மீண்டும் எழுந்தான்.

''பதறாத ரங்கா. யார் நாகு அது?'' அம்மா வலிய வரவழைத்துக் கொண்ட சாத்வீகத்துடன் கேட்டாள்.

''புனிதாவோட சிநேகிதர். அவளைக் காதலிக் கறவர்.''

''காதல் மண்ணாங்கட்டி. அங்க நீ ஏண்டி போன? ஆத்தானின் பொண்ணுக்கு காதல்ன்னா, உனக்கு என்ன வேலை அங்க?''

''அனாவஸ்யமா ஜாதியெல்லாம் இழுக்காத அண்ணா.''

''அவனவன் ஜாதி ஜாதியா சங்கமே வச்சிருக்கான்டி. தனித்தனியா கொடி கட்டிப் பறக்கிறான். ஜாதி சொன்னா தப்பு என்ன?''

புனிதாவுக்கு உன்னைப் பொண் பார்த்தது தெரியு மில்லையா?'' அம்மா கேட்டாள்.

''தெரியும்.''

''தெரிஞ்சும் அவன் பக்கத்துல உன்னை உட்கார விட்டாளா? அவளுக்குத்தான் தெரியலை. நீ பார்த்து நடந்துக்கப்படாதா. நீ ரொம்ப ஜாக்கிரதையா நடந் துக்க வேணாமா? இப்போ பெரிய கல் விழுந்துடுத்தேடி தலைல.''

''பீடையே போச்சு.''

''நாகு...'' அண்ணா இரைந்தான். ''பார்த்துப் பார்த்து வரன் தேடிண்டு வந்தா பீடையே போச்சுங் கறியா? வேலைக்குப் போற திமிர்தானே? படிச்ச கர்வம் தானே—எல்லாம் அப்பா கொடுக்கற செல்லப் ஆதரவா மனுஷா இருக்கிற திமிர். பொட்டை நாயே— உன்னை என்ன பண்றேன், பார். எனக்கு முப்பத் திரண்டு வயசாறது. நான் எவனையாவது இழுத்துண்டு ஓடியிருக்கப்படாதா? காச எறிஞ்சா படுத்துக்க பொம் பளை கிடைக்காதா? அந்தண்ட இந்தண்ட திரும்பாத மிச்சம் பண்ணி, குருவி சேக்கற மாதுரி காசு சேர்த்து கல்யாணம் பேசினா பீடைன்னா சொல்ற—?''

''நீ ஒண்ணும் எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டாம்.''



''ஏன், உடம்புல தெம்பு இருக்கிற வரைக்கும் ஊர் மேயலாம்னு பார்க்கறயா? அது நான் உசிரோட இருக்கற வரைக்கும் நடக்காது. நடக்க விடமாட்டேன். யார் அவன்? பிராமணப் பையன்னு சொன்னாரே... அவன் பேர் என்ன? எங்க வேலை பண்றான்? சரி... நான் பார்த்த வரன் வேண்டாம். நீ கூட உட்கார்ந்து சினிமா பார்த்தவனையே உனக்குத் தாலி கட்ட வைக்கறேன். உங்க அண்ணா மக்கு, மடையன். இலக்கியமோ, கவிதையோ தெரியாத முட்டாள்னு நினைக்கிற இல்லையா? எனக்குத் தெரிஞ்ச வித்தையை நான் காமிக்கிறேன். உனக்குத் தெரிஞ்சதை நீ காமி. யார்? யாருடி அவன்?''

''அது நடக்காது. பைத்தியம் மாதிரி உளறாத. அவர் புனிதாவ லவ் பண்றார்.''

''அவன் நூறு பேரை லவ் பண்ணட்டும். அவன் யாருன்னு சொல்லு.''

''சந்திரமௌலி, பிகாம். நேஷனல் பாங்க், அறுபத்தி னாலு, சதாசிவம் தெரு, அமிஞ்சிக்கரை.''

''போறும்.''

''வீட்டுல காட்டற முரட்டுத்தனம் தெருவுல செல்லு படியாகாதண்ணா.''

''ஆகாதா இல்லையா பார்த்துருவோம்.''

''அவமானப் படப்போறே.''

''இப்ப நடந்ததைவிட அவமானம் எதுவுமில்லையடி. அப்பா, அதே முகூர்த்தத்தில இவ கல்யாணம் நடக்கும். நடத்திக் காமிக்கிறேன்.''

''சினிமாத்தனமா பிஹேவ் பண்ணாதண்ணா.''

''சினிமா வானத்துலேர்ந்து குதிக்கற விஷயம் இல்லை. தெருவுல நடக்கறதுதான்.''

அண்ணா சட்டையை மாற்றிக்கொண்டான். தோல் பையை இடுக்கிக் கொண்டான். உள்ளே போய் ஆஞ்ச நேயரை நமஸ்காரம் செய்தான். நமஸ்கரிக்கும்போது வாய் விட்டு அழுதான். வெளியே இறங்கினான்.

நாகு, அவனை மறிக்க முடியாமல் தவித்தாள். தவறு தன்னுடையதா, அந்தப் பெரியவருடையதா என்று குழம்பினாள். நின்ற இடத்திலேயே சுருண்டு படுத்தாள்.

வாழ்க்கை காடு மாதிரி இருக்கிறது. எப்போது எது நடக்கும் என்று சொல்லமுடியாமல் இருக்கிறது. மரம் முறிந்து விழுமோ... புலி பாய்ந்து அறையுமோ என்று பயந்தபடியே நடக்க வேண்டியிருக்கிறது. பாதையற்ற இருட்டில் வனம் முழுவதும் தடவித் தடவி பயந்து பயந்து நடக்க வேண்டியிருக்கிறது. சற்று முன் மரம் முறிந்து விழுந்தது. அண்ணா வெளியே கோபத்துடன் ஓடியிருக்கிறான். இனி புலி பாய்ந்து அறையலாம், தேன்கூடு கலைந்து சீறலாம். பாம்பாய் எவரும் கொத் தலாம். என்ன செய்ய முடியும்... வருவதை எதிர் கொள்வதை தவிர, எவரை நோக முடியும்? பெரியவர் மீது கோபம் வரவில்லை. அந்த வீட்டுப் பெண்கள் அவரைத் துரத்தியிருக்கிறார்கள். அந்தப் பெண்கள்தான் தன்னைக் கெட்டவள் எனறு தீர்மானித்திருக்கிறார்கள். முதலில் பெண்களுக்கு பெண்களிடமிருந்துதான் விடுதலை வேண்டும். பெண்களே பெண்களை நசுக்கு வதிலிருந்து மீள வேண்டும்.

## 10

''நமஸ்காரம், இங்க சந்திரமௌலின்னு ஒருத்தர்—'' ரங்கன் கை கூப்பினான்.



எதிரே ஐம்பது வயதில் உருண்டையான சாதுவான முகத்துடன் இருந்த பெண்மணியை நோக்கி நமஸ்கரித் தான்.

''வாங்கோ, என் பிள்ளைதான். வெளிய போயிருக் கான். வாங்கோ.''

''நீங்கதான் தாயாரா? சார் வெளியே போயிருக் காரா? இருக்கட்டும். உங்களிடமும் சித்த பேசணும்.''

வெகுநாள் குங்குமம் பதிந்து பதிந்து கருப்பான கழும்பில் சிறிய சாந்துப் பொட்டும், மாம்பழக்கட்டுப் புடவையுமாய் அந்தப் பெண்மணி வாத்தியார் அம்மா மாதிரி தெரிந்தாள்.

''எம்பேர் ரங்கராஜன். பூர்வீகம் தஞ்சாவூர், மெட்ராஸ்ல இரண்டு தலைமுறையா செட்டில் ஆயிட் டோம். உங்க பிள்ளைக்கு வரன் பாக்கறேளா?''

''ம்... அப்படி இப்படின்னு பார்த்துண்டுதானிருக் கேன். தீவிரமா இல்லை. ஜாதகம் கொடுத்தா வாங்கிக் கறதுதான்.''

''கல்யாண வயசுதானே... கூடப் பிறந்த பெண்கள் உண்டா?''

''உண்டு. சின்ன குழந்தைகள். ஒண்ணு பத்துப் படிக்கறா. இன்னொருத்தி எட்டாவது படிக்கறா.''

''என் தங்கைக்குத்தான் வரன் தேடறேன். ஜாதகம் கைவசம் வச்சிருக்கேன். நாங்க ஆத்ரேய கோத்திரம் ப்ரஹச்சரணம் கேட்டது செய்யமுடியும். இவ ஒரே பெண் எங்களுக்கு. எங்கப்பா ரயில்வே வேலை பார்த்து ரிடையர் ஆனவர். சொந்த வீடு இருக்கு.''

''கொடுத்துட்டுப் போங்கோ. பொருந்தியிருந்தாப் பேசலாம்.''

''ஜாதகப் பொருத்தம் மட்டும் போதுமா? மனசுப் பொருத்தம் பார்க்கணுமா?''

''புரியலையே...''

''இப்ப சில பேர் மனசு பொருந்தினா ஜாதகம் எதுக்குன்னு சொல்றா? அதனால கேட்டேன்.''

''பொண்ணை எம்பிள்ளைக்குப் பிடிக்கணும். அது முக்கியம்தான். ஆனா, ஜாதகம் பாக்கறது தப்பில்லையே...''

''சில பையன்கள் எனக்கு இவளைத்தான் புடிச்சிருக்குங்கறா. அப்ப ஜாதகம் பாக்கறதுகூட இடைஞ்சலாயிடுமே.''

''பூடகமாப் பேசறேளே. யார் எங்க வீட்டு விலாசம் கொடுத்தா உங்களுக்கு?''

''என் தங்கைதான் கொடுத்தா.''

''மனசுக்குப் பிடிச்சிருக்குன்னு விலாசம் கொடுத்தாளா?''

''பெண் குழந்தைகள் அப்படி பளிச்சுன்னு பேச மாட்டா. அதான் உங்காத்துப் பையனையும் கேட்டுண்டு போலாமேன்னு வந்தேன்.''

''எங்க பையன் தப்புத்தண்டாவுக்குப் போறவன் இல்லையே?''

''நான் அப்படிச் சொல்லலை. இது தப்பு, இது சரின்னு நாம இந்தக் காலத்துல எதையும் இரண்டா பிரிச்சு வைக்க முடியலை.''

''புரியும்படியா பேசுங்கோ.''

''உங்க பிள்ளை வந்துரட்டுமே.''

''என் பிள்ளை உங்க பொண்ணை லவ் பண்றானா?''



''தெரியலைம்மா.''

''தப்பிதமா ஏதாவது நடந்துட்டானா?''

''தெரியலைம்மா.''

''உங்க பெண் அது மாதிரி ஏதாவது சொன்னாளா?',

''இல்லைம்மா.''

''என்ன கூத்து இது? தொண்டைலயே அடக்கிண்டு இருந்தா எதிரொளிக்கு என்ன புரியும்?''

''நெஞ்சில் அடைக்கிறதெல்லாத்தையும் வெளிய கொட்டிட முடியுமா தாயே. நீங்க பெரியவா. வாழ்ந்து நிமிர்ந்தவா. ரெண்டு பெண்களுக்குத் தாயார். கல்யாணம் கலைஞ்சு போறது எவ்வளவு வேதனைன்னு உங்களுக்குத் தெரியும்.''

''யார் கல்யாணம்? யார் கலைச்சது?''

''உங்க பிள்ளை வரட்டுமே.''

''பகவானே... நான் நல்லவனா, சுத்தமானவனா வளர்த்தேனே எம் பிள்ளைய'' அந்த அம்மாள் புலம்பினாள். ரங்கராஜன் இடித்த புளியாய் காத்திருந்தான்.

ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. மௌலி உள்ளே நுழைய இவன் எழுந்தான். அந்த அம்மாளுக்கு முன்னால் நடந்து சந்திரமௌலியிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண், டான். தனியே பேசவேண்டும் என்று சொல்லி மாடிக்கு அழைத்துப் போனான்.

''எங்க நாகலக்ஷ்மி கல்யாணம் முறிஞ்சு போச்சு மிஸ்டர் சந்திரமௌலி. தெரிஞ்சோ, தெரியாமலோ அதுக்கு நீங்க காரணமாயிட்டேள். புனிதான்னு நீங்க யாரையோ நேசிக்கறேளாம், பரவாயில்லை. ஆனா, என் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்கணும். எங்க வீடு இடிஞ்சு போச்சு. மௌலி எங்க அப்பாவுக்கு எழுபத்திரெண்டு வயசு. இதைத் தாங்கமாட்டார். அவமானம்

தாங்காத வீடு எங்களுடையது. நூறு கேள்வி கேட்டு, ஆயிரம் பேரை விசாரிச்சு ஒரு வரன் கொண்டு வந்தேன். கெட்டுப் போச்சு. இப்ப எந்தக் கேள்வியும் கேட்காம உங்ககிட்ட மன்றாடறேன். என் தங்கையை ஏத்துக் கணும். உங்க அப்பா யாரு? உங்க சம்பளம் என்ன? இன்னும் எத்தனை பேரை லவ் பண்றேள்? யார் யாரோட எங்கெங்கே போறேள்? ஒரு கேள்வியும் இல்லாம என் தங்கையைத் தரேன் உங்களுக்கு. உங்களை வச்சு குடித் தனம் பண்றது அவபாடு. ஆனா, மாட்டேன்னு சொல் லிடாதீங்க. அது தப்பு. உங்களால் கெட்டுப் போனத நீங்களே சரி பண்ற தார்மீகப் பொறுப்பு உங்களுக்கு உண்டு. மாட்டேன்னு சொல்லிடாதீங்க. அப்படி முடியாதுன்னுட்டா...''

''முடியாதுன்னா?''

''குடலை உருவிடுவேன். இந்த க்ஷணமே உன்னை ரெண்டாக் கிழிச்சு தூக்குலபோய் நிப்பேன். மிரட்ட லுக்குப் பயப்படறவன் நான் இல்லை. மௌலி, உனக்கு ரெண்டு தங்கை இருக்கா. அதை யோசனை பண்ணிப் பாரு. எங்க வீட்டுக் கல்யாணம் உடைச்சிட்டு உங்க வீட்ல தோரணம் கட்டிட முடியுமா? நடு சபைல வந்து, மண்ணை வாரி தூத்துவேன். என்ன வேணா செய்வேன். பயப்பட வேண்டாம். நீ மாட்டேன்னு சொன்னாத்தான் இத்தனையும். சரின்னு சொல்லிடுங்கோ மௌலி. நாகலக்ஷ்மி கிட்ட நான் பேசி அவளை சரி பண்றேன்.''

''நான் மனசறிஞ்சு ஒரு தப்பும்...''

''நான் நம்பறேன். என் தங்கையை, உங்களை, உங்க ரெண்டு பேர் ஸ்டேட்மெண்ட்டை நம்பறேன். ஆனா, வேற இடம் தேடிப்போக எனக்கு மனசுல வலிமை இல்லை. ஒரு பள்ளம் விழுந்து போச்சு. உரம் குறைஞ்சு போச்சு. என் தங்கைகிட்ட அப்பழுக்குக் கிடையாதுன்னு சொல்ற திராணி போச்சு. கல்யாணம் நிச்சயம் பண்ணின பெண்ணோட சினிமா போறது தப்புன்னு உனக்குப் பட்டிருக்கணும் மௌலி. நாம இருக்கறது அமெரிக்காவோ, ஸ்விட்ஸர்லேண்டோ இல்லை. சென்னைப் பட்டினம்தான். சினிமால யாரோடையோ பாத்தப் பொண்ணு என் பிள்ளைக்கு வாண்டாம்னு போயிட்டானே.''

''நான் போய் அவங்களைப் பாத்து நடந்ததைச் சொல்லி...''

''ஊர் சிரிக்க பண்றேங்கறியா? என் தங்கை கழுத்துல தாலி கட்டிட்டு யாரை வேணா போய் கன்வின்ஸ் பண்ணு.''

''இப்படி மிரட்டி கல்யாணம் பண்ணினா உங்க தங்கை சந்தோஷமா இருப்பாளா?''

''ரெண்டு நாள் முறைச்சுப்பேள். மூணா நாள் சரியாப் போயிடும். சந்தோஷம் வரவழைக்கிற விஷயம். நம்முடைய தீர்மானம் அது. அதுவும் மிஞ்சி அவளுக்குச் சந்தோஷம் இல்லேன்னா அதுக்கு அவதான் காரணம். நான் இல்லை. எங்கப்பா சந்தோஷம் எனக்கு முக்கியம். எல்லோருக்கும் சந்தோஷமா எதுவும் பண்ணமுடியாது.''

''நோ...நான் எங்கம்மாகிட்ட...''

''நான் பூடகமாப் பேசிட்டேன், நீயும் பேசு. மாட் டேன்னு சொல்லாத. சொன்னா உன்னை—உன் குடும் பத்தை வாழ விடமாட்டேன். முடியாதுன்னு சொன்ன க்ஷணமே புனிதா வீட்டுக்குப் போவேன். அந்த வீட்டை யும் கலைப்பேன். போ, போய் கீழ உங்கம்மாக்கிட்டப் பேசு, ரெண்டு நாள் கழிச்சு எனக்கு நல்ல பதிலா சொல்லு.''

ரங்கன் செருப்பு சப்தமெழ வெளியேறினான். நாக லக்ஷ்மியிடம் வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கி

அலுவலகத்துக்கு ராஜினாமா கடிதம் எழுதினான். புனிதாவுக்கு போன் செய்து வரவழைத்தான். எங்கேயும் போகாமல் வாசலிலேயே காவல் காத்தான்.

'ஆஞ்சனா நந்தனம் வீரம்
ஜானகி போக நாஸகாரணம்'

—என்று ஸ்தோத்திரம் படித்தான்.

''யாரு, உம்பேருதான் புனிதாவா? செருப்பை ஏன் தெருவுலேயே போட்டுட்ட? உள்ள ரேழில கொண்டு வந்து போடு. பசங்க எவனாவது லாவிண்டு போயிடுவான். உள்ள வா. நடந்தது கேள்விப்பட்டியா? உனக்கிருக்கிற பயத்துல பாதியாவது உன் சிநேகிதிக்கு கொடுத்திருக்க படாதா? வீடு பத்தி உனக்கு எத்தனை பயம் இருக்கு. அப்பா அம்மாகிட்ட எத்தனை பயம் இருக்கு. கொஞ்சம் இவளுக்கு இருந்திருக்கப்படாதா.''

''அந்தப் பையன் சந்திரமௌலி சரின்னுட்டான். குறுக்கப் பேசாத, எனக்கும் வருத்தம்தான். உன் கூட்டை கலைச்சுட்டமேன்னு வருத்தமாத்தான் இருக்கு. உனக்கு உண்டான இடத்தில உட்கார்ந்திருக்க வேண்டியது நீதானே? அவன் பக்கத்துல சினிமா தியேட்டர்ல உக்காந்திருந்தா இத்தனை வம்பே இல்லையே என்ன பண்றது? மனசைத் தேத்திக்கோ. உன் தோழிக்கும் ஆறுதல் சொல்லு. யோசனை பண்ணு. உன் கல்யாணம் எப்படி நடக்கும்? ஓடிப்போய் ரிஜிஸ்டர் ஆபீஸ்ல கையெழுத்தைப் போட்டு அவன் வீடும் ஏற முடியாம, உங்க வீட்டுப் படியும் மிதிக்க முடியாத ரெண்டுங் கெட்டானா நடக்கும். இவ கல்யாணம் அத்தனை மோசமில்லை. சத்திரத்தில் அக்னி அட்சதையோட தாலி கட்டப் போறான். அதான் நல்லது. உனக்கு, அவளுக்கு, அவனுக்கு நல்லது. நீங்களா ஆரம்பிச்சு நீங்களா கெடுத்துண்டேள்.



''என்னை மகாபாபின்னு வையறா, என் தங்கை. நான் பாபியா சொல்லு. மனதைத் தொட்டுச் சொல்லு. நான் உள்ள பூந்து யாரையாவது அழிச்சேனா? நீ யார் பெத்த பொண்ணோ. உன்கிட்ட எனக்கு என்ன கோபம்? இப்படி நீ தாரை தாரையா கண்ணீர் விடறச்சே எனக்கு கஷ்டமாகத்தான் இருக்கு. என் வயிறும் கலங்கறது. இந்தக் கல்யாணம் முறிஞ்சபோது எங்கப்பா அழுததை பார்த்திருக்கணும் நீ. எழுபத்திரண்டு வயசுக்கிழவர் அழறது என்ன கண்றாவியா இருந்தது தெரியுமா?

''கைகூப்பிக் கேட்டுக்கறேன். குறுக்கப் பாஞ்சுடாதே. அந்த பிள்ளை மௌலி வந்தா கதவை அடிச்சு சாத்து. கல்யாணப் பத்திரிகை அனுப்பறேன். வரவேண்டாம். வந்தா எல்லார் மனசும் கஷ்டப்படும். அன்னி முழுக்க ஸ்வாமி ஸ்மரணையா இரு போறும். ஸ்வாமி எல்லோருக்கும் நல்லதுதான் செய்வார். போ. கண்ணைத் துடைச்சிண்டு வீட்டுக்குப் போ. இதை ஆபீஸ் வாசல்ல வச்சு சொல்றது நல்லதில்லைன்னுதான் ஆத்துக்கு அழைச்சேன் நாகலக்ஷ்மி உள்ள படுத்துண்டிருக்கா. பாத்து என்ன பண்ணப் போற? காலா காலத்துல வீட்டுக்குப் போய்ச் சேரு.''

''மீறி ஏதாவது விஷயம் நடந்ததுன்னு தெரிஞ்சா, என் முகமே வேற மாதிரி இருக்கும். உன் விலாசம் என்கிட்ட இருக்கு. அரும்பாக்கம் வந்து வாசல்ல நின்னு நாலு பெரிய மனுஷாளைக் கூப்பிட்டு விவரம் சொல்வேன் உங்கப்பா கால்ல விழுந்து. வீட்டுக்குள்ளேயே உங்க பொண்ணைக் கட்டிப்போடுங்கன்னு சொல்வேன்.

''உங்க வீட்ல என்ன நடக்கும்னு எனக்குத் தெரியும். வெட்டியே போடுவாங்க. பேசாத போ. உன் சிநேகிதி சௌக்யமா. இருக்கணும்னா சத்தம் போடாம திரும்பிப் போ. அப்படி எல்லா தடங்கலையும் மீறி அந்தப் பையனைக் கல்யாணம் பண்ணிண்டு நீங்க எங்க

போவேள். எங்க போனாலும் துரத்தி துரத்தி வருவேன். என்னால முடிஞ்ச சிரமங்களைக் கொடுப்பேன். எங்க வீட்டை அழிச்சிட்டு நீ சிரிக்க முடியாது புனிதவல்லி. போம்மா, எனக்கும் வருத்தம்தான். இது நீ செய்த கோளாறு. அனுபவி. போ. போய் நன்னா அழு. மனசு தெளிவாயிடும். இப்ப நீ போறியா? இல்ல நான் அரும்பாக்கம் போகட்டுமா...'' புனிதா வெளிறினாள். வெளியேறினாள்.

## 11

நாலு நாட்கள் கழித்து தாயாரோடு சந்திரமௌலி வந்தான்.

துவண்டு ஈசிச்சேரில் சாய்ந்திருக்கும் கிழவரைப் பார்த்து சந்திரமௌலியின் தாய் அதிர்ந்து போனாள். சமையலறையின் உள்ளே போய் நாகுவின் அம்மாவைப் பார்த்து அழுதாள்.

''அம்மா, மாமிக்கு நமஸ்காரம் பண்ணு. மாமி எங்க அப்பாவைக்கூட உங்க கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணச் சொல்றேன். பொண்ணைப் பெத்தவா நமஸ்காரம் பண்றது தப்பில்லை. அபச்சாரமில்லை. நல்ல வாக்கா கொடுத்துட்டுப் போங்கோ. எங்களுக்கு உயிர் வர்ற மாதிரி ஆறுதலா ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போங்கோ. இதுதான் எங்கள் குடும்பம். இதுதான் வீடு. யார் முகமாவது தப்பா தெரியறதா? ஏதாவது குறையாப் படறதா? சொல்லுங்கோ மாமி. வேறஇடம் பார்க்கலாம். மாமி நிச்சயம் பண்ணினது என்ன ஆச்சுன்னு கேட்டா நான் லௌகீகம்னு பொய் சொல்லணும். வேண்டாம்னு போனவரும் பொய் சொல்றதா சொல்லிட்டுப் போனார். ஆனா சொல்லுவார்னு என்ன நிச்சயம்? அதுவா.



தட்டுக்கெட்ட பொண்ணாச்சேன்னு அந்தாத்துப் பொம்மனாட்டிகள் பேசமாட்டான்னு என்ன நிச்சயம்? இனி பார்க்க வர்ற வரனும் இதுனால தட்டிப் போகாதுன்னு யாரும் உத்தரவாதம் தரமுடியுமா? அப்படியே ஒளிச்சு மறைச்சு கல்யாணம் பண்ணினாலும், அப்புறம் தெரிஞ்சா வாய் நிறைய கேக்கமாட்டானா? திருட்டுப் பசங்களான்னு எங்களை வையமாட்டானா? நாலு விஷயம் யோசனை பண்ணிட்டுத்தான் மாமி, உங்காத்துப் படியேறினேன்.''

மௌலியின் அம்மா குழப்படைந்தாள். தார்மீகத் தவறு தன் பையன் மீது இருப்பதை ஒப்புக்கொண்டாள். ரங்கனின் மிரட்டலைத் தாண்டி அவன் பேச்சில் ஒரு உண்மை இருக்கிறது என்றாள்.

''மிரட்டறதுல ஆசையில்லை மாமி எனக்கு. சூடு பட்ட வேதனையில் வேகமா மெறிச்சுடலாம். நான் ஆடிப் போயிட்டேன் தெரியுமா? இந்தக் கல்யாணம் நடக்கலேன்னா இன்னும் கலைஞ்சு போயிடுவேன். எங்க வீடு கலையாம இருக்கறது உங்க கைலதான் இருக்கு.''

மாமி வேதனையுடன் வெளியேற, மறுபடி வீட்டில் மௌனம் சூழ்ந்து கொண்டது.

புனிதா, சந்திரமௌலிக்கு தன் நிலை விளக்கி அவனை மறுத்துக் கடிதம் எழுதி, அதன் நகலை ரங்கராஜனுக்கு அனுப்பியிருந்தாள்.

சொல்லிக் கொடுத்தவனுக்குக் கட்டைவிரலைக் காணிக்கையாய் ஏகலைவன் தந்ததில்லையா? தோழிக்கு நெஞ்சையறுத்து தானம் செய்தேன். நெஞ்சில் நீ நின்ற இடம் வெற்றிடம். வெற்றிடம் என்றைக்கும் விபரீதம். என் விவேகம் விபரீதம் வராது காக்கட்டும். உன் நினைவிலிருந்து விடுபட முயற்சிக்கிறேன்.

கவிதையாய் நிறைய எழுதியிருந்தாள்.

மௌலி கலங்கினான். தாடி வளர்த்துக் கொண்டு அலைந்தான்.

நாகலக்ஷ்மி என்ன சொல்கிறாள்? இந்தக் கூத்துக்கு கோபமும், தீவிரமும் உடைய அந்தப் பெண் எப்படி மடங்கிப் போனாள்? எதுபற்றியும் தெளிவாய் அபிப்ராயம் சொல்லும் பெண், எதிர்ப்பின்றி எப்படிப் போனாள் இன்றைக்கு?

அந்த வீடு அவனை மரியாதையுடன் வரவேற்றது. நாகுவைப் பார்க்கணும் என்றதும், ''ஆஹா... தாராளமா. நாகு, அவர் வந்திருக்கார், மாடிக்கு அழைச்சிண்டு போம்மா'' என்று வழிவிட்டது.

ஸ்நேகிதம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

உறவுக்கு பணிந்ததும் தனியிடம் கூடத் தருகிறது. இதென்ன அசிங்கம்? இதற்கு நீ எப்படி தலைப்பட்டாய் நாகலக்ஷ்மி?

''நாகலக்ஷ்மி, அவன் எதிரே மௌனமாய் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''உன் கொள்கை, உன் வீரம், உன் கோபம், உன் வீட்லகூட செல்லுபடியாகலையா நாகலக்ஷ்மி?''

நாகலக்ஷ்மி சிரித்தாள்.

''நம்முடைய கோபம், செல்லுபடியாகாத இடம் உலகத்துல நெறைய இருக்கு மௌலி. இப்படியிப்படி வாழணும்னு நாம் தீர்மானம் பண்றோம். அப்படி வாழ நமக்கு சில சமயம் வசதியில்லை. தப்பு நடந்துடறது. அபாண்டம் விழறது. தாங்கிக்கத்தான் வேணும். ராமர் வாலிவதம் செய்துடலையா? தர்மர் பொய் சொல்லும்படியா ஆயிடலையா? நாம எந்த மூலைக்கு? மனுஷ சாத்தியங்கள் சிலதுதான் மௌலி.''

''நீ சட்டுன்னு மௌனமாயிட்டதுக்குக் காரணம் என்ன நாகு?''

''என் தப்புக்குத் தண்டனை என்னோட முடியட்டும்னுதான்.''



''புரியலையே?''

''உங்க தங்கை கல்யாணத்தில கலாட்டாவோ, புனிதா வீட்டுக் கலக்கமோ இதைவிட பெரிய விஷயமாப் பட்டது எனக்கு.''

''உங்க அண்ணா மனுஷன் தானே. யாரும் அவனை எதிர்க்க முடியாதா?''

''எதிர்க்கறது சுலபம். யுத்தம் வந்தா இரண்டு பக்கமும் இழப்பு நிச்சயம். உங்க பக்கம் ஒரு இழப்பு வரக்கூடாதுன்னு மௌனமாயிட்டேன். ஒரு பாவமும் அறியாத உங்க தங்கைகளை, உங்கம்மாவைப் பதற அடிச்சுடலாம். புனிதா வீட்டு வாசல்ல நின்னு கத்தினா அடிதடி ரகளை நிச்சயம். அந்தப் பெண்ணை சுத்தமா வேரறுக்க வச்சுட முடியும். என்னால எதிர்ப்பு முழுங்கற மாதிரி புனிதாவால முடியாது.

''யோசனை பண்ணுங்க, மௌலி. அந்த குடும்பம், புனிதாவுடைய வீடு. இப்பத்தான் மொள்ள மொள்ள வெளியே வர்ற குடும்பம். முதல் பொண் வேலைக்குப் போய் சம்பாதிச்சு உலகம் தெரிஞ்சுக்கறா. அவ நிலைமை மோசமானா அந்த வீட்டு மத்தப் பொண்களை மடக்கி நிறுத்திடுவாங்க. ஒரு ஜெனரேஷனே பட்டுன்னு முடியும். மறுபடியும் அது துளிர்த்து வர, ரொம்ப நாளாகும்.''

''இவ்வளவு யோசனை செய்தியா நாகு?''

''யெஸ்.''

''சே. எந்த வேளைல சினிமாக்குக் கூப்பிட்டேனோ?''

''அது முடிஞ்ச கதை.''

''நீயும் நானும் குடித்தனம் பண்ண முடியுமா?''

''முயற்சி பண்ணுவோம்.''

''ஐ வான்ட் டு கில் மை செல்ஃப் நாகு.''

''ப்ளீஸ் வேண்டாம், மௌலி.''

''என்னால புனிதாவுடைய பிரிவைத் தாங்க முடியலை.''

''ஒரு கதை உண்டு தெரியுமா மௌலி. ஒரு பாழுங் கிணத்தில் தவறி விழுந்த மனுஷன் ஒரு கொடியைப் பிடிச்சு தொங்கிண்டிருந்தானாம். கொடியினுடைய மேல் பக்கத்துல எலி அறுத்துண்டிருக்காம். கிணத்துக்கு மேல புலி காத்திண்டிருக்காம். கீழ தண்ணில பாம்பு சீறி எழும் பறதாம். அப்போ மரத்துல இருக்கிற தேன் கூட்டி லேர்ந்து சொட்டு சொட்டா தேன் சொட்டி அந்த மனுஷன் நாக்குல விழ, 'அடட...என்ன சுவை, என்ன இனிப்பு'ன்னானாம் தொங்கறவன்.''

''வாழ்க்கை அபத்தம்னு சொல்றதுக்கு உண்டான கதை இது. அடப்பாவி, இப்பப் போய் தேனை ருசிக்கறி யேங்கற மாதிரி கேலி இது. ஆனா, எனக்கு ஒரு கேள்வி. அந்த நேரம் தேன் கசக்கவா செய்யும்? தேன் எப்படி குடிச்சாலும் தித்திப்புதான். அப்படி எந்த நேரத்திலும் சுவையை உணர்ந்து சந்தோஷமாய் இருக்கிறதுதான் சரி. காலம்ங்கற எலி அறுப்புலேர்ந்து தப்பிக்க முடியாது. கடவுள்ங்கிற புலியை எதிர்க்க முடியாது. நரகத்தி லேர்ந்து தப்பிக்க முடியாது. என்னதான் செய் வான் மனுஷன்? தேனை ருசிக்கிறதுதான் சரி. தேனுக்கு ஆசைப்படறதுதான் சரி. ஐயோ, இப்போ போய் தேன் சொட்டறதேன்று அழறதுதான் பாவம். மரணம் நிச்சயம் மௌலி. காலம்ங்கற எலி நம்ம உயிர்க்கொடிய அறுத்துண்டே இருக்கு. நாமா இழுத்து அறுப்பானேன் வெறும் புலம்பலா முடிவானேன்.''

''எனக்குப் புரியலை நாகு.''

''இந்தக் கல்யாணத்துக்கு சரின்னு சொல்லிடுங்க மௌலி.''

''எப்படி நாகலக்ஷ்மி? புனிதா...புனிதா.''

''அப்புறம் கூட்டிண்டு போங்கோ. இவாளுக்கு வேண்டியது என் கல்யாணம். அது நடக்கலைன்னா சம்பந்தமில்லாதவாளும் சேர்த்து அவஸ்தைப்படுவா. கல்யாணம் நடந்தப்புறம் உங்களை, என்னை யாரும்



எதுவும் செய்யமுடியாது. என் கல்யாணத்துக்கப்புறம் புனிதாவோட நீங்க சினிமா போனா யாருமே ஏன்னு கேக்க முடியாது. அவளை மறக்க முடியலேன்னு இன்னொரு தாலி கட்டினா என்னைத் தவிர வேறு யாரும் உங்களைக் கேக்க முடியாது. நான் கேக்க மாட்டேன் மௌலி. நான் தடுக்க மாட்டேன் உங்களை.''

''நாகலக்ஷ்மி...''

''அவளை நீங்க எப்படி காதலிச்சீங்கன்னு எனக்குத் தெரியும். எனக்குக் காதல் பத்தி தெரியும். கல்யாண மான மறுநாளே அவளை தேடிண்டு நீங்க போனாக்கூட எனக்கு ஆட்சேபணையில்லை.''

''முட்டாள்தனமா பேசற.''

''இதுதவிர வேறுவழி தெரியலை எனக்கு.''

''இது தப்பு நாகலக்ஷ்மி. உன்னை அபத்தமான ஒரு இடத்துல நான் வைக்கமாட்டேன்.''

''புனிதா வீட்டுக்கு ரங்கன் போறது இன்னும் அபத்தமாப் போகும். அந்தப் பெண் இந்த கலாட்டாவை தாங்குமா? இத்தனையும் மீறி ஓடி வர அவளால் முடியுமா? ஓடி வந்தப்புறம் உண்டான சிரமங்களைத் தாங்குவாளா?''

''புரியறது நாகு.''

''அக்ஸெப்ட் திஸ் ஸிச்சுவேஷன். இதுதான் பலம் மௌலி. இதுக்குப் பிறகு நீங்க என்னை மனைவியா எடுத்துண்டாலும் சரி, சிநேகிதியா நடத்தினாலும் சரி, தாங்குவேன். ஆனா, கல்யாணத்துக்கப்புறம் நான் இந்த வீட்ல இருக்க மாட்டேன். உங்க வீடோ, தனிக் குடித்தனமோ, லேடீஸ் ஹாஸ்டலோ எதுவானாலும் சத்தமம் எனக்கு.''

''உள்ளுக்குள்ளே திடமா இருக்க நாகு. அதுதான் இப்படி பேசமுடியறது.''

''போராடறதுன்னு பேசறதுக்கு அர்த்தம் ஓடி ஒளியறதில்லை. தப்பிச்சுப் போறதில்லை. உள்ளே யிருந்தபடி இந்தக் கட்டுக்கோப்பில் இருந்தபடி விவரம்

கேக்கறது எந்தத் தப்புக்கும் என்னைத் தண்டிக்க முடியாதுன்னு துளிர்த்து நிக்கறது.''

''உன்னைப் பத்தி, உன் எதிர்காலம் பத்தி கவலையில்லையா?''

''நான் எதுக்கும், எப்பவும் தயாராய் இருக்கிறவள் மௌலி. அரைமணி நேரம் பார்த்துப் பேசின பையனை சரின்னு சொன்னதுக்கு இந்தத் தைரியம்தான் அடிப்படை. உங்களைக் கொண்டு வந்து நிறுத்துவேன்னு அண்ணா சவால்விட்ட போதும் மௌனமா இருந்ததுக்கு இதுதான் அஸ்திவாரம். நான் ஒண்ணு கேக்கறேன், நீங்க ஏன் எதிர்ப்பு காட்டலை மௌலி?''

''உன் பக்கத்துல உக்காந்து சினிமா பார்த்தது தப்பு நாகு.''

''அதுதான் காரணமா?''

''புனிதாவுக்குக் கெடுதல் வருமோங்கற பயம்கூட காரணம். என் வீட்ல போட்ட கூச்சலை ரங்கன் அவன் வீட்டில் போட்டா, அவ கதி என்ன ஆகும்? என்கிற கவலைல எதிர்ப்பை மறைச்சிண்டேன். முரட்டுத்தனமா நான் எதிர்த்தா காயம் படறது புனிதாவுக்குத்தான்.''

''ஆனா, எதிர்ப்பு இல்லாம புனிதா கிடைக்க மாட்டாளே?''

''வாஸ்தவம். புனிதா எனக்கு, எனக்குங்கற ஆசையைவிட புனிதாவுக்குக் காயம் படக்கூடாதுங்கற கவலைதான் அதிகம் வந்தது எனக்கு. பிகாஸ்... பிகாஸ்...''

''யூ லவ் புனிதா வெரிமச் இல்லையா? நீங்க செய்தது சரி. காதல் என்பது விட்டுக் கொடுத்தல். சில சமயம் காதலையே விட்டுக் கொடுத்தல்.''

''ஆனால், உள்ளுக்குள்ள என்னைப் பத்தி எனக்கே அவமானமா இருக்கு நாகு. என் செயல் எனக்கே கேலியா இருக்கு. கோழையோன்னு தோண்றது.''

''இல்ல மௌலி. நேசிக்கறவங்களை சிரமத்துல ஈடுபடுத்த முடியாத நிலைதான் அன்பு. காதல் எல்லாம்.''



''நான் செய்தது சரிங்கறையா?''

''நிச்சயமா சரி.''

''புனிதாவோட வாழ்க்கையை பத்தி நான் ரொம்பக் கற்பனை செய்து வச்சிருந்தேன் நாகு.''

''நான் முன்பே சொன்னேன், நம்ப கல்யாணத்துக்கப்பறம் அவளோட பழகறதுக்கோ. அவளைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கோ எனக்கு ஆட்சேபணை இல்லேன்னு சொன்னேனே.''

''எனக்கு ஆட்சேபணை உண்டு நாகு. நான் அதைச் செய்யமாட்டேன். என்னால் அல்லாட முடியாது. அப்படி அவளைப் போய் கேட்கறதும் அவளுக்கு அவமானம். இரண்டாவது பெண்ணா புனிதா இருக்கிறது உங்க ரெண்டு பேருக்குமே கெடுதல்.''

''மரபு யோசனையா?''

''இல்லை. மரியாதை குறைச்சல்ங்கறதால வர யோசனை.''

''என்ன செய்யப் போறீங்க மௌலி?''

''என் நினைவு, என் காதல் குறையற வரைக்கும். என்னை நான் உனக்காகத் தயார் படுத்தற வரைக்கும்...

''வரைக்கும்...''

''என்னை மௌனமா இருக்க விடு நாகு.''

## 12

திருமணம் நடந்தது. மௌலி யாருக்கும் பத்திரிகை கொடுக்கவில்லை. யாரோடும் பேசவில்லை. சிரிக்கவில்லை. நிதானமாய் நடந்து கொண்டான். அதிகம் தனிமையில் இருந்தான். திருமணச் சடங்குகள் தவிர, மற்ற ஆர்ப்பாட்டங்களைத் தவிர்த்தான். ரங்கனை நமஸ்கரிக்க மறுத்து விட்டான்.

''அதனால பரவாயில்லை. என்மேல மாப்பிள்ளைக்கு இன்னமும் கோவம் இருக்கும். ஆனா, ஒண்ணு புரிஞ்சுக்கணும். நானா யாரையும்போய் துன்புறுத்தலை. நானா

யார் வாழ்க்கையையும் கெடுக்கலை. என் எதிரே வந்த பிரச்சினைக்கு என் வழில தீர்வு தேடினேன். பிரச்சினை வந்ததுக்குக் காரணம் மாப்பிள்ளையும், என் தங்கையும் தான்னு அவர் புரிஞ்சுண்டாப் போதும்'' ரங்கன் மிருது வாய் பேசினான்.

ஆனால், உறவுகளுக்கு இந்த சங்கடங்கள் தெரியவில்லை. அவை மேலே வந்து விழுந்தன. விருந்துக்கு அழைத்தன. பெரிய பரிசுகளைக் கொடுத்துவிட்டு பதில் மரியாதையை எதிர்பார்த்தன. ''நான் பெண்ணுக்கு தாய் மாமா. எங்காத்துக்கு சாப்பிட வரணும்'' யாரோ கரம் கூப்பியபடி கூப்பிட்டார்கள், ஆளுககு ஆள் உபசாரம் செய்தார்கள். 'எங்காத்துக்கு எப்ப வரேள், ஒரு தேதி சொல்லுங்கோ' மறுபடி யாரோ கூப்பிட்டார்கள்.

மௌலி தவித்தான். 'போறுமே' என்று அலுத்துக் கொண்டான்.

நாகு வீட்டில் ,விருந்து முடிந்து கையலம்பி எழுந்த போது, மேலும் உறவுகள் விருந்து உபசாரத்துக்கு கிட்டி போட்டார்கள்.

நாகலக்ஷ்மி நடுக்கூடத்தில் நின்று கத்தினாள். ''யார் வீட்டுக்கும் வரமுடியாது. இந்தக் கல்யாணம் பத்தி உங்க யாருக்கும் தெரியாது. ஏன், நான் இந்தாத்துல கை நனைனக்கறது இதுவே கடைசி தடவை. இனி இந்தாத்துக்கு நான் வரமாட்டேன். இவா பெருமை, மரியாதை காப்பாத்தியாச்சு. இனிமே இங்கு எனக்கு எந்த வேலையுமில்லை. எங்க மாமியார் சொன்னதுக்காக ஒரு வேளை சாப்பிட்டாச்சு. நல்லதோ, கெட்டதோ இனி நான் இங்க வரமாட்டேன். அவரைத் தொந்தரவு பண்ணினது போதும் அவர் எங்கேயும் வரமாட்டார். கல்யாணத்துக்கு வந்தவா எங்களைத் தொந்தரவு பண்ணாம போகலாம்.'' கை கூப்பிப் பேசினாள்.

வீடு இடி விழுந்த மௌனமாயிற்று.



''மனுஷாளை இப்படிக் கடுமையா பேசி வேதனைப்
படுத்தக் கூடாது நாகு.'' அப்பா நிதானமாய் துவங்கி
னார்.
''எங்க வேதனை யாருக்குப் புரியும்? இவர் படற
ஹிம்சை யாருக்குத் தெரியும்? கழுத்தில் கத்திய வச்சு
கல்யாணம் நடத்திட்டு விருந்துக்கு வேற கூப்பிட றேளே,
இது என்ன நியாயம்?''
வீட்டில் கூடியிருந்த விருந்துக் கூட்டம் மெல்லக்
கலைந்தது. நாகு தன் உடைமைகளை எடுத்துக் கட்ட
ஆரம்பித்தாள். தன்னுடைய தட்டு, தன்னுடைய
பாத்திரம் என்று பிரிக்க ஆரம்பித்தாள்.
வேதனையும், அழுகையும் வயிற்றைப் பிசைந்தன.
தன்னைக் காட்டிலும் பல மடங்கு வேதனை மௌலிக்கு
இருக்கும் என்று தெரியத் தெரிய, இன்னும் மனசு
கனத்துப் போயிற்று. வேலை செய்ய முடியாமல் அதிர்ச்சி
ஏற்பட்டது. பின்பக்கம் போய் வந்தாள். கூடத்துக்கு
வந்து சுருண்டு படுத்துக் கொண்டாள். 'என்னடி' என்று
கேட்ட அம்மாவிடம் விஷயம் சொன்னாள்.
''தப்பு ஒண்ணுமில்லை. கல்யாண அதிர்ச்சில இப்படி
ஆகும். வயத்தை வலிக்கிறதா?'' என்றாள்.
''வலியில்லை. சோர்வுதான். இப்படி உரக்கக் கத்திய
பிறகு இப்படி ஆகியிருக்க வேண்டாம். இந்த நிலை
மையில் மாமியார் உள்ளே சேர்ப்பாளோ என்கிற பயம்
தான்.
''வேண்டாம்னுதான் சொல்வா. இங்கேயே இருக்கச்
சொல்லிட்டு அஞ்சா நாள் வரச் சொல்வா. விளக்கேத்
தறது, கோலம் போடறது முடியாதோன்னா. முதல்
தடவைதான் இப்படி பிறந்தாத்துலயே வச்சுக்கறது
வழக்கம்.'' மாமியாருக்கு போன் பண்ணிக் கேட்டபோது
அதையே சொன்னாள்.
தனியறையில் சந்திரமௌலி அவள் தலையைப்
பரிவுடன் கோதிவிட்டு, தினமும் வந்து பார்ப்பதாகச்
சொன்னான். காலாற நடந்து தன் வீட்டிற்குப் போவ

தாய் சொன்னான். வீட்டுக்கு வெளியே தனித்து மௌன மாய் நடக்கும் மௌலியைப் பார்க்க வேதனையாய் இருந்தது நாகுவுக்கு.

மௌலி நகர்ந்ததும் வீடு மறுபடி சீறிற்று.

''நாங்க வேண்டாமா? நாங்க வேண்டவே வேண் டாமா? இனிமே இங்கே கையலம்ப மாட்டியா? உனக்காக நாங்க நாலு பேர் முன்னாடி அவமானப் படணுமா? இப்படி கூடத்து நடுவுல உறவுக்காராகிட்ட கத்தறது நல்லறதா?'' அம்மா அழுதாள்.

' அந்த சினிமாவுக்கு அவனோட நீ போகாம இருந் திருந்தா இது நடந்திருக்குமா? நீயா தலைல மண்ணை வாரி போட்டுண்டு, எங்களை இழிவா சொல்றியா? என் மேல ஆத்திரப்படு. இந்த வீட்டு மேல ஆத்திரம் எதுக்கு? அப்பாவை, அம்மாவை எதுக்கு அலட்சியப்படுத்தணும்?'' ரங்கு முன் வந்து பேசினான்.

''முட்டாள். கல்யாணம்கற விஷயம் தெரியாத முட்டாள். பெண்ணோட மனசு தெரியாத முட்டாள். அந்த மனுஷனோட நான் எப்படி குடித்தனம் பண்ணு வேன்? எப்படி சிரிச்சுப் பேசுவேன்? உனக்கு ஒரு எழவும் தெரியலையே. எப்படி புரிய வைப்பேன்—இன்னொரு பெண் மேல ஆசை வச்சிண்டிருக்கறவரை இழுத்துப் பறிச்சு எங்கிட்ட உக்கார வச்சா அதுக்குப் பேரு கல்யாணமா? தேவடியாத்தனமா? நான் பண்ணப்போற தேவடியாத்தனத்துகக்கு இப்படி விருந்து வேற சாப் பிடணுமா?''

வாசல் பக்கம் நிழல் ஆடிற்று. வீட்டில் உள்ளவர்கள் தலை தூக்க மனமின்றி இடிந்து உட்கார்ந்திருந்தனர்.

''உங்க கௌரவம், உங்க மரியாதைக்காக என்னை பலி போட்டது நியாயமா? அந்த மனுஷனை அந்தப் பெண்கிட்டேர்ந்து பிரிக்கிறது பாவமில்லையா? அவர் எப்படி அந்தப் பொண்ணை மறப்பார்? எப்படி நான் அவரோட சௌஜன்யமா பழக முடியும்?''

''உன்னை வேண்டாம்னு அந்தப் பெரியவர்தான் சொன்னார். தட்டு கெட்ட பொண்ணா இருக்குமோன்னு



அவர்தான் சந்தேகப்பட்டார். எங்களுக்குத் தெரியலை யேடி கடைசிவரை. மூணாம் மனுஷா உன்னை சினிமால பாத்துட்டு, சரியில்லையே உன் கேரக்டர்னு, சந்தேகப் பட்டார். எகிறி எகிறிப் பேசினா சரியாயிடுமா?''

''அவர் பிள்ளை இல்லேன்னா உலகத்துல வேற மாப்பிள்ளையே கிடைக்காதா? நான் தட்டுகெட்ட வன்னா எனக்கு ஒரு தட்டுகெட்டவன் கிடைக்க மாட் டானா? சினிமாவுக்குப்போறது தட்டுகெட்ட விஷயம்னா உலகத்துல நல்லவாளே இல்லைன்னுதான் அர்த்தம்.''

''வாஸ்தவம்''—யாரோ உள்ளே நுழைந்தார்கள். உயரமாய், கண்ணாடியுடன். ஸாக்ஸ் காலுடன் அடர்த்தியான தலையுடன், வாலிபமாய் யாரோ உள்ளே நுழைந்தார்கள். கை கூப்பினார்கள்.

''என்னை ஞாபகம் இருக்கா, ரங்கராஜன். நான் தான் ஸ்வாமிநாதனுடைய பிள்ளை சபேசன். உங்க தங்கையை பெண் பார்த்துட்டுப் போனேன். பிலாய் இஞ்சினியர். ஓரே ஒரு தடவை பார்த்தது ஞாபகம் இல்லாம போயிருக்கும்.''

குடும்பம் எழுந்திருந்து பதிலுக்குக் கை கூப்பிற்று.

''சிநேகிதனோட சினிமா பாக்கறது தப்புன்னா, நானும் அந்த மாதிரி தப்பு நிறைய பண்ணியிருக்கேன். பிலாய்ல நிறை பெண்கள்கூட சினிமா, பார்ட்டிக் கெல்லாம் போயிருக்கேன். எங்கப்பா பண்ணினது சரி யில்லை. நான் உட்கார்ந்துக்கட்டுமா? உங்கப் பொண் கூட உக்காந்து பேசி, அவ தெளிவா, சுதந்திரமா யோசனை பண்றவள்னு தெரிஞ்சு சரின்னேன். சாதாரண சந்தேகப்படற மதராஸி பொண்ணா இல்லாம இருக்கான்னுதான் சம்மதம் கொடுத்தேன். எங்கப்பா செய்தது தப்பு. அவர் என்ன பண்ணுவார் பாவம். எங்க வீட்டுப் பெண்களுக்கு புத்தி போறாது. வாழ்க்கை தெரியாது. நான் இங்கு இருந்திருந்தா நடக்க விட்டிருக்க மாட்டேன் என் பிரண்ட் விவரமா லெட்டர் எழுதியிருந் தான். உங்கப்பா அநியாயமா நடந்துண்டார்னு வருத்தப்பட்டான். லீவ் உடனே கிடைக்கலை. லேட்டா யிடுத்து.'' வந்தவன், பின்னால் நின்ற நாகலக்ஷ்மியை திரும்பிப் பார்க்காமல் ரங்கராஜனைப் பார்த்துப் பேசினான்.

''வந்து எங்கப்பாகிட்டே பேசினேன். உடனே கிளம்பி உங்களைப் பார்க்க வந்தேன். நான் எங்க வீட்டை கன்வின்ஸ் பண்ண முடியும். தேதி தள்ளிப் போயிடுத்துன்னு வருத்தப்பட வேண்டாம். நீங்க சரின்னா அடுத்த முகூர்த்தத்திலேயே உங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறேன்.''

''அது வந்து...'' ரங்கராஜன் அவஸ்தையாய் நெளிந்தான். நாகு அப்பா நிமிர்ந்து உட்கார்ந்தார். அம்மா வாயைப் பொத்திக் கொண்டாள்.

வந்தவனுக்குப் பல விஷயங்கள் தெரியவில்லை. யாரையோ பாதித்து விட்டோம் என்கிற படபடப்பு அடங்கவில்லை. வீட்டின் மாவிலை தோரணமும். கோல வாசலும் விவரம் சொல்லவில்லை.

''யாரையோ பிரிச்சு யாருக்கோ கல்யாணம் பண்றது இன்னும் நடக்கணுமான்னு வேதனைப்பட்டு வந்தேன். பெணகளை மதிக்கணும், மதிக்கறதுன்னா, நம்பறதுன்னு அர்த்தம் இப்படி அல்பத்துக்கு சந்தேகப்படறது பெணகளைக் கடுமையானவளா மாத்திடும். மனசு கடுமையாயிட்ட பொண்ணோட குடித்தனம் பண்றது சிரமம். தலைமுறை தலைமுறையா இந்தக் கடுமை தொடர்ந்து வந்துடலாம். நிறைய யோசனை செய்துட்டுத்தான் வந்திருக்கேன்.''

''உங்களுக்கு ஒரு பத்திரிக்கை அனுப்பியிருக்கலாம்.'' நாகுவின் அப்பா புரிந்து கொண்டு பேசினார்.

''என்ன பத்திரிகை?''

''என் பெண்ணோட கல்யாணப் பத்திரிகை.''

''வேற இடம் நிச்சயம் பண்ணிட்டேளா?''

''ஆச்சு.''

''எப்ப கல்யாணம்? உங்க பெண் சரின்னுட்டாளா?''

நாகுவின் அப்பா தேதி சொன்னார்.

''அப்ப... அப்ப... கல்யாணம் நடந்தாச்சா. மாவிலையெல்லாம் அதுக்குத்தானா? நான் ஏதோ பண்டிகைன்னு நினைச்சேன். மை காட். உங்கப் பெண் சத்தம் போட்டுப் பேசினது நடந்த கல்யாணம் பத்திதானா? கடவுளே ச்சே...நான் விவரம் கேக்காம உள்ளே



தலைமுக்க அரைகுறையா காதில வாங்கி...ஐயம் ஸாரி...ச்சே, எங்கப்பா ஒரு தப்பு. நான் ஒரு தப்பு. ச்சே... என்ன முட்டாள்தனம். கல்யாணம் ஆன பொண்ணைக் கல்யாணம் செய்துக்கறேன்னு கேட்ட முட்டாள்தனம். ஐயம் ஸாரி. ஐயம் ஸாரி, நான் தெரியாம... என்னை மன்னிச்சுடணும்.'' எழுந்து கை கூப்பினான். நடக்க முடியாமல் தடுமாறினான். எழுந்து வெளியேறத் திரும்பினான். திரும்புகையில் நாகலக்ஷ்மியைப் பார்த்து கை கூப்பினான். 'என்னை மன்னிச்சுடுங்கோ' என்றான். புதிய தாலிச்சரடும, பளபளக்கிற மெட்டியும், மை தீட்டிய கண்ணுமாய நிற்கிறவளைக் கண்டு வெட்கப்பட்டான். ''நான் பேசினது மகா தப்பு. அயோக்கியத்தனம். ஆனா உங்களுக்கு உதவி செய்யலாமேன்னுதான், நினைச்சேனே தவிர, வேற கெட்ட எண்ணம் இல்லை எனக்கு.''

நாகலக்ஷ்மி புன்னகை செய்தாள். குழம்பித் தவிக்கிற முகத்துள் ஒரு மென்மையைக் கண்டாள்.

''விவரம் கேட்காம வந்தது பிசகுதான். ஐயம் ஸாரி மிஸஸ் நாகலக்ஷ்மி'' குனிந்து அவள் எதிரே உள்ளே நிலம் தொட்டபோது, நாகலக்ஷ்மி பாய்ந்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். நிமிர்த்தினாள்.

''என் இதய நண்பனே! உன் மனதைப் புரிந்து கொண்டேன். இங்கு நடந்ததை மறந்து போ.'' ஆங்கிலத்தில் பேசினாள். அவன் திருமண வாழ்த்து சொல்ல, புன்னகையுடன் அங்கீகரித்தாள்.

''இதில் பாதிக்கப்பட்டது நான் மட்டுமா? அந்தப் பெண் புனிதாவும்கூட. என் கணவரும்கூட. அவர்கள் சோகத்தை யார் நிவர்த்திக்க முடியும்? அதைப் பற்றித் தான் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றாள். 'என் புருஷனை நீங்கள் சந்திக்க வேண்டுமே. இப்போதுதான் வெளியே போனார்.'' ஒரு க்ஷணம் நின்று யோசித்தாள். 'வாருங்கள் போகலாம்'' என்று செருப்பை மாட்டிக் கொண்டாள். அவனோடு பேசியபடி தெருவில் இறங்கினாள்.

''உங்க மாமியார் ஏதாவது சொல்லப் போறாடி'' தடுத்த அம்மாவை முறைத்துவிட்டு நகர்ந்தாள்.

''எங்காத்துக்காரர் ஒண்ணும் சொல்ல மாட்டார். அது போதும் எனக்கு. உங்க தலைமுறை பயத்தை நான்

சுமக்கத் தயாராய் இல்லை. வேணா, அதை உன் பிள்ளை தலைல இறக்கு. வாங்க சார். போகலாம்.'' அவர்கள் நடந்தவைகளைப் பேசிக்கொண்டு தெருவில் இறங்கினார்கள். பஸ்ஸுக்காக காத்து நிற்கிற மௌலியை சந்தித்தார்கள். மௌலியை, சபேசன் நடுத் தெருவில் ஆரத் தழுவிக் கொண்டான். தந்தை சார்பில் மன்னிப்பு கேட்டான்.

''அப்படியே செய்த தப்புக்கு நடுங்கிப் போய்ட்டேன் மௌலி. ரொம்ப நடுங்கிட்டேன். என்னடா இப்படிப் பேசிட்டோமேன்னு ரொம்பக் குழம்பிட்டேன் இப்ப தாகமா இருக்கு. ஒரு காபி சாப்பிடலாமா?''

மௌலி அவனை அணைத்துக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைய, நாகலக்ஷ்மி பின் தொடர்ந்தாள். அவனை நடுநாயகமாய் வைத்து, வலமும் இடமுமாய் தம்பதிகள் உட்கார்ந்து கொண்டார்கள். வேண்டாமே என்ற போது—

''இப்படி உட்கார்ந்ததுதானே சார் தப்பாயிடுத்து. இதை சாதாரணமாக்க வேண்டாமா?'' மௌலி பேசினான்.

''சார்னு கூப்பிடாத மௌலி. சபேசான்னு. கூப்பிடு.''

''சபேசா, உனக்கு பொயட்ரி பிடிக்குமா?''

''பிடிக்கும். எதுக்குக் கேட்கறே?''

''புனிதா கவிதை எல்லாம் எழுதுவா, அதனால கேட்கிறார்.''

சபேசன் தலை குனிந்து யோசித்தான். கேள்வியோட வேர் புரியறது. அந்தப் பெண் புனிதா. புனிதவல்லியா முழுப்பேரு, பி. காம். பர்ஸ்ட் கிளாஸ்ன்னு சொன்னாள் இல்லையா? இப்ப அவ மனநிலை எப்படி இருக்கு? ஏதாவது தெரிஞ்சிண்டேளா?''

''தெரியலை போய்ப் பார்க்கறதா வேண்டாமான்னு குழப்பமா இருக்கு.''

''இனிமே குழப்பம் என்ன மௌலி? நாகலக்ஷ்மியைக் கூட்டிட்டு போகலாமே.''

''போய் என்ன செய்ய போறேன்?''

''மனசு சரிஞ்சு போயிருந்தா சரி பண்றது. உலகத்துல நிறைய மனுஷா இருக்கா. அவங்களோட



[illegible] சேர்த்துக்கறது நல்ல விஷயம். விவரம் புரிஞ்சவங்க [illegible] சேர்ந்துக்கறது ஆரோக்யம்னு சொல்றது. [illegible] ஒரு சினிமாவுக்குக் கூட்டிண்டு வர்றது. [illegible] சினிமான்னு சொல்லுங்கோ, நானும் வர்றேன். [illegible]படுத்திக்கிறேன். எனக்குக் கவிதை பிடிக்கும்னு [illegible]றேன். பேசிப் பார்க்கிறேன். அந்தப் பெண்ணும் [illegible] பேசிப் பார்க்கட்டும். அவளுக்கு எஞ்சினியரிங் [illegible]ணும். பிலாய் பிடிக்கணும்.''

''உங்கப்பாக்கு பிடிக்க வேண்டாமா? உன் வீட்டுப் [illegible]ளுக்குப் பிடிக்க வேண்டாமா?''

''எங்கயோ பிலாய்ல உட்கார்ந்து என் கல்யாணத்தை [illegible] மொத்தமா என் வீட்டுப் பொறுப்பா கொடுத்தது [illegible] தப்பு மௌலி. அந்தத் தப்புலதான் பல விஷயங்கள் [illegible] நடந்து போச்சு. மறுபடியும் அதைச் செய்ய [illegible]டேன். தன் தப்புல பாதிக்கப்பட்டவர்களைப் [illegible] பிறகு, பழகின பிறகு அப்படி செய்யறது பாவம். [illegible] என் கல்யாணம் என் விஷயம். அது நல்லதோ, [illegible]தோ, அதுக்கு முழுசா நானே பொறுப்பு [illegible]க்கணும். என்னை சரின்னு சொல்ற பொண்ணு [illegible] பொறுப்போட சரின்னு சொல்லணும்.''

''அப்ப நாங்க?''

''அரும்பாக்கம் போய்ட்டு வந்து சொல்லுங்கோ. [illegible] கற்பனையும் இல்லாம சாதாரணமா போயிட்டு [illegible].''

கைகூப்பி பிரிந்து அரும்பாக்கத்துக்கு ஆட்டோவில் போகும்போது நாகலக்ஷ்மி லேசான படபடப்பில் [illegible].

இனி என்ன நடக்கப் போகிறது? புனிதா என்ன சொல்லப் போகிறாள்? எப்படிப்பட்ட மனநிலையில் இருப்பாள்? என்ன விதமாய் வரவேற்பாள்? புரிய [illegible] வாழ்க்கை காடு மாதிரிதான் இருக்கிறது. [illegible] அடர்த்தியான இருள் நிறைந்த காடு. [illegible], இருள் படர்ந்து அழகாய் இருக்கும் காடு. [illegible] கொடுத்த வாக்குகள் உண்டு காப்பதற்கு. இந்தக் காட்டில் எதுவும் நடக்கும், மரம் முறிந்து விழும். புலி [illegible] அலையும், பாம்பு படம் எடுக்கும். பயம் நிறைந்த காடுதான்.

ஆனால், இதற்கு நடுவே மலர்கள் தெரிகின்றன. வெப்பம் தெரியாத குளுமை ஆட்கொண்டிருக்கிறது. புலியும், பாம்பும், மட்டுமே எதிர்ப்படும் என்கிற [illegible] தாண்டி மலர்களும் பனி விழும் குளுமையும் [illegible] முடிகிறது. வாழ்க்கை வனம் மாதிரிதான். ஆனால் பனி விழும் மலர் வனம்.

லேசான இருட்டும், குளிரும் மலர் வாசனையும் கொண்ட வனத்தில் தயங்கி தயங்கி நடக்கிற பெண் மாதிரி, நாகலக்ஷ்மி தன்னை உணர்ந்தாள். இந்தக் கற்பனை குளிர்வு தாங்காது உடம்பு ஒரு முறை நடுங்கிப் போட்டது.

''என்னம்மா. எதுக்கு சட்டுன்னு நடுங்கறே?'' மெளலி நகர்ந்து அவளை அணைத்துக்கொண்டான். ''ஆட்டோவை மெள்ளப் போகச் சொல்லட்டுமா? பீரியட்ஸ் டயத்துல இத்தனை குலுக்கல். எதிர்காத்து கஷ்டம் இல்லையா?''

நாகு நெகிழ்ந்து போனாள். இன்னும் ஒண்டிக் கொண்டாள். அவன் உடம்பு வெப்பமும், எதிர்காற்றுக் குளுமையுமாய் நாகு ஒரு கவலையான சுகத்தில் மிதந்தாள்.

**பனி விழும் மலர்வனம்—உன்**
**பார்வை ஒரு வரம்**

என்று அவன் தோளில் சாய்ந்து பாடினாள்.

**—முற்றும்—**